சரபேந்திர பூபால குறவஞ்சி

பதிப்பாசிரியர்
மணி.மாறன்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

T. 22793

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 545

சரபேந்திர பூபால குறவஞ்சி

பதிப்பாசிரியர்

மணி. மாறன், M.A.,(T), M.A.,(H), B.L.I.S.,

தமிழ்ப் பண்டிதர்,

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்,

மற்றும்

ஆய்வு மையம்,

தஞ்சாவூர்.

2013] [விலை: ரூ. 100-00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	சரபேந்திர பூபால குறவஞ்சி
பதிப்பாசிரியர்	:	மணி. மாறன், தமிழ்ப்பண்டிதர்,
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
வெளியீட்டு எண்.	:	545
ISBN	:	978-81-921829-8-8
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதல் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	2013
தாள்	:	TNPL 18.6 கி. கி
நூல் அளவு	:	21 x 14 செ.மீ.
பக்கங்கள்	:	180
படிகள்	:	500
எழுத்து	:	12 புள்ளி
அச்சிட்டோர்	:	ஒளி அச்சுக்கோர்ப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம்.
புத்தகக்கட்டு	:	லேமினேசன் அட்டை
பொருள்	:	இலக்கியம்
விலை	:	ரூ.100-00

வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சைக்குப் பெருமை சேர்க்கும் சரசுவதி மகால் நூலகத்தின்கண் பல்வேறுபட்ட தகவல்களை உள்ளடக்கிய ஓலைச்சுவடிகள், காகிதச்சுவடிகள், அச்சு நூல்கள் போன்றவை ஏராளம் உள்ளன. ஓலைகளில் எழுதப்பெற்றுள்ளவைகளை, பொது மக்களும் படித்துப் பயன்பெறும் வகையில் நூலகத்தின் மொழிப் பண்டிதர்களைக் கொண்டும், அவ்வத் துறையைச் சார்ந்த அறிஞர்களைக் கொண்டும் புதிய நூல்கள் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பெற்று வருகின்றது.

தஞ்சையை ஆட்சி செய்த மராத்திய மன்னர்களில், சிறப்பான இடத்தைப் பெற்றவர் இரண்டாம் சரபோஜி மன்னராவார். கலை, இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடும், ஆர்வமும் கொண்டு செயல்பட்டவர். பல்வேறு மருத்துவர்களின் மருத்துவக் குறிப்புகளை தமிழ்ப் புலவர்களைக் கொண்டு நூல்களாகப் படைக்கச் செய்தவர் இவராவார். இவரால் உருவாக்கப் பெற்ற சரபேந்திர வைத்திய முறைகள் என்னும் சுவடித் தொகுப்பு உலகின் வேறு எந்த சுவடி நூலகத்திலும் காணக் கிடைக்காத ஒன்றாகும். இத்தகு சிறப்பும், பெருமையும் மிக்க மன்னர் இரண்டாம் சரபோஜியைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு எழுந்த சரபேந்திர பூபால குறவஞ்சி என்னும் சுவடி நூல், இந்நூலகத்தின் தமிழ்ச் சுவடித்துறையில் உள்ளது.

புலவர்கள் பால் அன்பும், கருணையும் கொண்ட மன்னர் சரபோஜியின் மீது தீராக் காதல் கொண்டவர் கும்பகோணத்திற்கு அருகமைந்த ஊரான கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் என்னும் பெரும்புலவர் ஆவார். தேசிகரின் தமிழ்ப் புலமையினை அறிந்த மன்னர் சரபோஜி இவரைத் தம் அரசவைப் புலவராக்கி மகிழ்ந்தார். இப்புலவரால் இயற்றப் பெற்ற நூலே சரபேந்திர பூபால குறவஞ்சி எனும் நூலாகும். இக்குறவஞ்சி தமிழின்

இனிமையும், எளிமையும் நிறைந்த நூல் ஆகும். எளிய நடையில் அமைந்த இக்குறவஞ்சி நாடகம் தஞ்சைப் பெரிய கோயிலில் நடைபெற்ற திருவிழாக் காலங்களில் நடிக்கப்பெற்று வந்துள்ளது. இந்நாடகம் அஷ்டக்கொடி விழாவின் போது நடைபெற்றதால் அஷ்டக்கொடி குறவஞ்சி என்றும் வழங்கப்பெற்றது.

தேசிகரின் பிற நூல்களுடன் சேர்த்து கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரின் பிரபந்தங்கள் எனும் பெயரில் ஏற்கனவே வெளிவந்திருப்பினும், சரபேந்திர பூபால குறவஞ்சி என்னும் நூலினை, அதன் வரலாறு, நூலாசிரியர் வரலாறு, பாட்டுடைத் தலைவன் வரலாறு, பாடல்கள் மற்றும் அவற்றிற்கான விளக்கம் எனத் தெளிவாகவும், விரிவாகவும் பதிப்பித்துத் தந்துள்ள நூலகத் தமிழ்ப் பண்டிதர் த.ம.சரபோஜி (என்கிற) மணி. மாறன் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினை வெளியிட நிதியுதவி நல்கிய நடுவண் அரசிற்கும், புதிய வெளியீடுகளை விரைந்து வெளியிடும் ஆர்வம் கொண்டு சிறப்புடன் பணியாற்றும் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) மற்றும் நூலக நிர்வாக அலுவலர் ச. நடராஜன், B.Sc., அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன் அவர்களுக்கும், கணினியில் அச்சிட்டளித்த நூலகப் பணியாளர்களுக்கும், அச்சகப்பிரிவு பணியாளர்களுக்கும், ஏனையோருக்கும் என் வாழ்த்துதலையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர், **கா. பாஸ்கரன்**, இ. ஆ. ப.,

22-07-2013. மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்.

பதிப்பாசிரியர் உரை

தமிழில் சிற்றிலக்கியங்கள் பல தரத்தின,வகையின, பல காலத்தன இவ்வகை இலக்கியங்களைப் பிரபந்தங்கள் என்றும் அவை தொண்ணூற்றாறு வகைப்படும் என்றும் சான்றோர் வழங்கி வருகின்றனர். கலம்பகம் எனும் பிரபந்தத்தின் உறுப்புக்கள் பதினெட்டு அவற்றுள் குறம் என்பது ஒன்றாகும்.

தலைவனிடம் காதல் கொண்ட ஒரு தலைவி, குறத்தியிடம் கையினைக் காட்டி குறிகேட்க, அவள் நீ விரும்பிய தலைவனை அடைவாய் என்று உறுதிபடக் கூறுவதாக அமைவது குறம் என பன்னிரு பாட்டியல், குறத்திப் பாட்டு எனும் ஒருவகைப் பிரபந்தத்திற்கு இலக்கணம் கூறுகின்றது. தொண்ணூல் விளககம், பிரபந்த தீபிகை, பிரபந்த தீபம் ஆகிய பாட்டியல் நூல்களும் குறத்திப் பாட்டை ஒரு பிரபந்தமாகவே உரைக்கின்றன.

சரபேந்திர பூபால குறவஞ்சி எனும் நாடக நூல், ஏட்டுச் சுவடியாக இந்நூலகத்தில் உள்ளது. இதனை இயற்றியவர் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் எனும் பெரும் புலவராவார். இவர் தஞ்சையை ஆட்சி செய்த இரண்டாம் சரபோஜி மன்னரின் அரசவைப் புலவராக விளங்கியவர். இந்நூல் சரபோஜி மன்னரை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு எழுந்ததாகும். கற்போர் இலக்கியச் சுவைபெறும் வண்ணம் இந்நூல் சிறப்பாக இயற்றப்பட்டுள்ளது.

இந்நூலினை தேசிகரின் மற்ற நூல்களுடன் சேர்த்து சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள் என்ற பெயரில் தமிழ்த்தாத்தா உ. வே. சாமிநாதையர் அவர்கள் பதிப்பித்துள்ளார். இப்பதிப்பும் இப்போது கிடைப்பது அரிதாய் உள்ளது. பின்னர் சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகத்தினை டாக்டர் அரங்க சீனிவாசன், பேராசிரியர் செ. இராதாகிருஷ்ணன் போன்றோரும் பதிப்பித்துள்ளனர்.

நூலகத்தில் உள்ள ஏட்டுச் சுவடியினைக் கொண்டும் முன்னர் பதிப்பித்து வெளிவந்த நூல்களை ஒப்புநோக்கியும், மூலச்சுவடியின் வழி பாடல்களை சரிசெய்தும், ஒரு சில இடங்களில் காணப்பட்ட பொருள் மாறுபாடுகளைக் களைந்தும், தேவையான செய்திகளை எடுத்துக்கொண்டும், திருந்திய பதிப்பாக இந்நூலினை செவ்வனே பதிப்பித்து உள்ளேன். குறவஞ்சி இலக்கியங்களுள் குற்றாலக் குறவஞ்சிக்கு அடுத்து அழகிலும் பொலிவிலும் சிறந்தது சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகமே ஆகும். இதனை சரசுவதி மகால் நூலகம் வெளியிடுவது சிறப்பிற்குரியதே.

இந்நூலினை வெளியிட பெருந்தன்மையுடன் அனுமதி வழங்கிய மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநர் **கா. பாஸ்கரன்,** இ.ஆ.ப., அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியினைக் கூறக் கடமைப் பட்டுள்ளேன். இப்பணிக்கு ஊக்கம் அளித்து தேவையான உதவிகள் செய்திடும் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (கணக்கு) மற்றும் நூலக நிருவாக அலுவலர் **S. நடராஜன்,** B.Sc., அவர்களுக்கும், இந்நூல் முழுமை பெற்று வெளிவருவதற்கு அனைத்து வகையிலும் உதவிசெய்த நூலகர் நிலை I (பொ) முனைவர் **எஸ். சுதர்ஷன்** அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றி. நூலினை வெளியிட நிதி நல்கும் நடுவணரசிற்கும் என் நன்றி !

இந்நூல் நன்முறையில் அமைய கணினியில் தட்டச்சு செய்து வழங்கிய நூலகப் பணியாளர் க. மனோகரன் அவர்களுக்கும், ஆட்டோ பிரிண்டரில் அச்சிட்டு அளித்த நூலகப் பணியாளர் எஸ். முருகானந்தம் அவர்களுக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நூல்கட்டு பிரிவு பணியாளர்களுக்கும், நூல் வெளிவர உதவிய அனைத்துப் பணியாளர்களுக்கும் என்னுடைய நன்றி. செவ்வனே அமைய மெய்ப்பு திருத்தும் பணியில் உதவி செய்த பி. இரம்யா, பி. விஜி, நூலக சமஸ்கிருத பண்டிதர் எல். அனிதா ஆகியோருக்கும் என் மனமார்ந்த நன்றி! அழகுடன் முகப்பு அட்டை அச்சிட்டு அளித்த கே. ஆர். பிரிண்டர்ஸ் நிறுவனத்தாருக்கும் நன்றி.

மணி. மாறன்,
தமிழ்ப்பண்டிதர்.

பொருளடக்கம்

வ.எண்.		பக்க எண்.
1.	சிறப்புப் பாயிரம்	1
2.	கணபதி, சந்திர மௌளீசர்	2
3.	பிரகதீசர்	3
4.	பெரியநாயகி	4
5.	கணபதியும், கந்தவேளும்	5
6.	கலைமகள்	5
7.	மங்களம்	6
8.	கட்டியக்காரன் வருகை	7
9.	கட்டியக்காரன் தோற்றமும் செயலும்	8
10.	கணபதி வருகை	9
11.	கணபதி அருள்	10
12.	சரபோஜி உலா	12
13.	மதனவல்லி வருகிறாள்	17
14.	மதனவல்லியின் அழகு	17
15.	மதனவல்லி பந்தாடுதல்	21
16.	சரபோஜி உலாவருவதை மதனவல்லி காணல்	22

17.	மதனவல்லி மையல் கொள்ளல்	23
18.	மன்மதனின் மலர் அம்பு	25
19.	தோழியர் உபசாரம்	26
20.	மன்மதனைப் பழித்தல்	27
21.	சந்திரனைப் பழித்தல்	29
22.	தென்றலைப் பழித்தல்	33
23.	கழிக்கரைப் புலம்பல்	36
24.	தோழியின் வருகை	38
25.	மதனவல்லி உரை	39
26.	தோழிவிடு தூது	40
27.	தூதுச் செய்தி	42
28.	எதிர்பார்த்து நின்றாள்	45
29.	மதனவல்லி இரங்கல்	46
30.	குறத்தி வருகை	48
31.	குறத்தி வருகையினை தோழி அறிவிக்கிறாள்	55
32.	குறவஞ்சி வருகிறாள்	59
33.	குறத்தி வாசல் வளம் கூறுதல்	60
34.	மதனவல்லி கேள்வி	63
35.	சாதி வளம்	65
36.	மலைவளம்	68

37. உன் சொந்த மலை எ[illegible] 71

38. வாழும் மலை 72

39. குறத்தி தலமகிமை கூறுதல் 76

40. நதி வளம் 81

41. குறத்தி தேசவளம் கூறுதல் 83

42. குறத்தி சோழநாட்டு வளம் கூறுதல் 85

45. மதனவல்லி வினவுதல் 88

46. குறத்தி பெற்ற வரிசைகளைக் கூறுதல் 88

47. மன்னர் சரபோஜி மகிழ்ந்தளித்த வரிசை 92

48. மதனவல்லி பேச்சு 95

49. குறத்தி பேச்சு 95

50. குறிசொல்ல வேண்டிய பொருள்கள் 97

51. குறத்தி குறி கூறுதல் 99

52. மதனவல்லி பேச்சு 103

53. தெய்வங்களை வேண்டுதல் 103

54. குறத்தி மதனவல்லி உரையாடல் 106

55. சிங்கன் வருகை 111

56. சிங்கன் கண்ணி குத்தும் வகை கூறுதல் 113

57. பல பட்சிகளின் வருகை 117

58. குளுவன் சிங்கனிடம் கூறுதல் 120

59.	சிங்கியை நினைத்து இரங்கல்	120
60.	சிங்கன் சிங்கியைத் தேடுதல்	122
61.	குறத்தியின் அடையாளம் வினாவுதல்	126
62.	சிங்கியின் அடையாளம் கூறுதல்	127
63.	குளுவன் கூறுதல்	130
64.	சிங்கன் குளுவனிடம் கூறுதல்	131
65.	கண்டோன் கூறல்	133
66.	சிங்கன் சிங்கியைக் காணல்	134
67.	இருவர் உரையாடல்	135
68.	மங்களம்	140
69.	குறவஞ்சி நாடகங்களில் கூறப்படும் பொருளடைவு	142
70.	தேசங்கள், மலைகள், நதிகள்,ஊர்கள், தெய்வங்கள், பறவைகள்	143

நூன்முகம்

குறவஞ்சி என்பது பிற்காலத்தில் எழுந்த பல்வேறு வகைப்பட்ட பிரபந்தங்களுள் நாடக வகையினைச் சார்ந்ததாகும். பண்திறம் முதலிய பண்டைத் தமிழிசை வகையால் அமைந்த இலக்கியங்களும், அவற்றிற்குரிய இலக்கணங்களும் இப்பொழுது அருகிவிட்டன. இப் பிரபந்தத்தின் அமைப்பும், இதனுள் காணப்படும் இசைப் பகுதிகளும் வடமொழி முறையினைப் பின்பற்றி அமைந்துள்ளதால், இம்முறை பிற்காலத்தது என கருத இடம் உண்டு.

பன்னிரு பாட்டியலில் குறத்திப்பாட்டு என்னும் ஒரு பிரபந்தத்தின் இலக்கணமாக, "இறப்பு நிகழ்வெதிர் வென்னுமுக் காலமும், திறம்பட வுரைப்பது குறத்திப் பாட்டே" என்னும் சூத்திரம் காணப்படுகிறது. அவ் விலக்கணம் குறத்தி குறி கூறுவதாக இயற்றப்படும் நூலுக்கு உரியதாகத் தோன்றுகிறது.

குறவஞ்சியுள் வரும் பல செய்திகளுள் குறத்தி குறி கூறுதலும் ஒன்றாகும். தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங் களும் ஒன்றாகிய கலம்பகத்தினுள் குறம் என்ற ஒருறுப்பு உண்டு. அதன் கண்ணே குறத்தி குறி கூறுதல் ஒன்றே காணப்படும். மீனாட்சி அம்மை குறம் போன்று, சிலவற்றில் குறத்தி குறி சொல்வதற்கு முன்னும் பின்னும் சில செய்திகள் காணப்படுகின்றன. எனவே பன்னிரு பாட்டியல் இயற்றப் பட்ட காலத்துக் குறத்தி பாட்டென்ற ஒரு வகைப் பிரபந்தம் மட்டும் வழங்கி வந்ததென்றும், அதனைப் பின்பற்றி ஒருறுப்புக் கலம்பகத்துள்ளே அமைக்கப்பட்டதென்றும் அவ் விரண்டையும் தழுவி இசைப்பாட்டும் கலந்து குறம் என்னும் பிரபந்தம் எழுந்ததென்றும், அவற்றைப் பின்பற்றி நாடக முறையில் குறவஞ்சி என்னும் பிரபந்தம் இயற்றப்பட்டது என்றும் தோன்றுகின்றன.

இக்குறவஞ்சி நாடக வகையினைச் சார்ந்தது என்பது, "பல வளஞ்சேர் குறவஞ்சி நாடகத்தை" (திருக்குற்றாலக் குறவஞ்சி) என்பதனால் உணரப்படும். "பொருட்குற வஞ்சி நாட்யம் புகன்றிட விமயச்செல்வி, கருணைபெற் றுவந்த நாரி கணபதி காப்புத்தானே" (அர்த்தநாரீசுவரர் குறவஞ்சி) என்பதனால் குறவஞ்சி நாட்டியம் என்றும் இது வழங்கி வந்ததாகத் தெரிகின்றது. குறத்தியின் இயல்பு, அவள் குறிகூறுதல், அவளைக் குறவன் தேடிவந்து காணல் முதலிய குறத்தியின் திறத்திலமைந்த செய்திகளே பெரும்பாலும் இதன்கண் அமைந்திருப்பதால், இந்நூல் இப்பெயர் பெற்றது போல் தெரிகிறது.

தமிழ்நாட்டில் பிற்காலத்தில் நடைபெற்ற நாடகங் களில் கணபதி வருதல், கட்டியக்காரன் வருதல், மோகினியும், மோகனராஜனும் வருதல் முதலியன முதலில் நிகழும். அவற்றை நாடக நூல்களில் காணலாம். அம்முறையைப் பின்பற்றியே இக்குறவஞ்சி நாடகமும் தொடங்கப் பெறுகின்றது.

காப்பும், மங்களமும் கூறப்பெற்ற பின் கட்டியக்காரன் வருதலும், பாட்டுடைத் தலைவன் பவனி வருதலை அவன் கூறுதலும் குறவஞ்சியின் முதலில் அமைக்கப்படும். தலைவன் பவனிக்குமுன், கணபதி எழுந்தருளுதலும் சிலவற்றில் கூறப்படும். பின் கட்டியக்காரன் எச்சரிக்கை கூறுதல் சில குறவஞ்சிகளில் காணப்படுகிறது. தலைவன் பவனி வருகையில் தலைவி ஒருத்தி அவனைக் கண்டு காமுறுதலும் அவளுடைய வருணனையும் இயல்பும் பின்பு கூறப்படும். தலைவியின் பெயரினை குறவஞ்சி நூலாசிரியர்கள் பலவிதமாகக் கூறுகின்றனர். அவற்றுள் சில பெயர்கள் மதனவல்லி, வசந்தவல்லி, காமரசவல்லி, தெய்வ மோகினி, மோகினி, இராஜமோகினி, மதனரதி, மோகனவல்லி, மோகனாங்கி என்றும் காணப்படுகிறது.

தலைவன்மேல் காதல் கொண்ட தலைவி விரக வேதனையால் மன்மதனையும் சந்திரன், தென்றல், குயில் முதலியவற்றையும் நிந்தித்துப் புலம்புதல் பின்பு காணப்படும். பாட்டுடைத் தலைவனை விளித்து இரங்குதல் திருவாரூர்க் குறவஞ்சியில் காணப்படுகின்றது. பின்னர் தலைவியின் பாங்கி வருதலும், அவளைத் தலைவி தூது போக்கலும், அப்பொழுது குறத்தி வருதலும், அவளுடைய இயல்பும், அக்குறத்தியின் வருகையைப் பாங்கி தலைவியிடம் கூறலும், தலைவி அக்குறத்தியை அழைப்பித்தலும் அவள் வந்து வாசல் வளம் கூறுதலும் காணப்படுகின்றன. வாசல் வளம் கூறுதல் சிலவற்றில் காணப்படவில்லை.

பின்பு தலைவி, குறத்தியை யார் என வினவுதலும், தேசம், மலைவளம், சாதிவளம், நதிவளம் முதலியனவற்றைக் கேட்டலும், குறத்தி அவற்றைக் கூறுதலும் அமைக்கப்படும். அண்ட கோசங்களின் பகுப்பைக் கூறுதல் சில குறவஞ்சிகளில் உள்ளது. குறத்தி தன் சாதியார் வசிக்கும் மலையின் பெருமையினைக் கூறுதல் பின்பு அமைக்கப்படும். பின்னர் யார் யாரிடம் எல்லாம் குறிசொல்லி எந்த எந்தப் பரிசுகளை நீ பெற்றாய் என்று தலைவி கேட்டலும், குறத்தி அவற்றைக் கூறுதலும், பாட்டுடைத் தலைவனுக்குக் குறிசொல்லி பெற்ற வரிசைகளைச் சொல்லுதல் உள்ளன. தலைவனுக்குக் குறிசொன்ன செய்தி சில குறவஞ்சிகளில் இல்லை.

தலைவி தன் கைப் பார்த்துக் குறி சொல்ல வேண்டு மென்று கேட்டலும், குறத்தி தெய்வ பூசைக்குரியவற்றைச் செய்யும்படி சொல்லித் தெய்வங்களை வேண்டிப் பின்னர் குறிசொல்லத் தொடங்கித் தலைவி பாட்டுடைத் தலைவன் மேல் காதல் கொண்டதைக் குறிப்பாகவும், பின்பு வெளிப் படையாகவும் சொல்லி, அவனது திருவருள் வாய்க்குமென்று சொல்லி அவன் உன்னை மணந்து அருள்வான் என்று கூறுதலும் உள்ளன. அவ்வாறு சொல்லிக் கொண்டிருக் கையில் தூதுபோன பாங்கி, தலைவனிடம் இருந்து மாலை வாங்கிக்கொண்டு வந்து கொடுத்தாள் என்ற செய்தி சில குறவஞ்சிகளில் காணப்படுகிறது.

குறத்தி இங்கே இவ்வாறிருக்க, அவளுடைய கணவனாகிய குறவன் தன்னுடைய கையாளாகிய குளுவனோடு, வேட்டைக்குப் புறப்பட்டு வருதலும், பறவைகளைப் பிடிக்க வலை அமைக்கும் முறையை அவன் குளுவனுக்குக் கூறுதலும், பறவைகள் வருதலும் பின்னர் அவைகள் ஓடி விடுதலும் சொல்லப்படும். குளுவன்-மலை வாணருள்ளே ஒருவகைச் சாதியினைச் சேர்ந்தவன்.

இவ்வாறு பறவை வேட்டையாடிக் கொண்டிருந்த குறவனுக்குத் திடீரென்று குறத்தியின் நினைவு வருதலும், அவளின் பிரிவாற்றாது குறவன் வருந்துதலும், குளுவனை குறத்தி இருக்குமிடம் அறிந்து வருமாறு சொல்லுதலும், அவன் குறத்தியின் அடையாளங்களைக் கேட்கக் குறவன் அவற்றைச் சொல்லுதலும், அவன் பாட்டுடைத் தலைவன் நகரத்தில் அவளைக் காணலாம் என்றலும், குறவன் அங்கே சென்று அவளைக் காணலும் கண்டு தன் ஆற்றாமையைப் புலப்படுத்தி அவளைப் பல கேள்விகள் கேட்டலும், அவள் விடை கூறுதலும், இருவரும் ஒன்று சேர்ந்து தலைவனை வாழ்த்துதலும் குறவஞ்சியின் இறுதிப் பகுதியாக அமையும். சில குறவஞ்சிகளில் இம்முறை வேறுபட்டுள்ளது.

சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகமானது, தஞ்சையில் ஆட்சிசெய்த மராத்திய சரபோஜி மன்னர் மீது இயற்றப்பெற்றதாகும். இடையிடையே விருத்தம், அகவல், வெண்பா முதலிய செய்யுட்களையும், வசனத்தையும் விரவுவித்துக் கீர்த்தன ரூபமாக இந்நூல் அமைந்துள்ளது. எளிய நடையில் அமைந்த இந்நாடகம் தஞ்சைப் பெரியகோயிலில் நடைபெற்ற திருவிழாக் காலங்களில் ஆடப்பெற்று வந்துள்ளது. அஷ்டக்கொடி விழாக்காலத்தின் போது ஆடப்பெற்று வந்ததால், இது அஷ்டக்கொடி குறவஞ்சி எனவும் வழங்கப்பெறும். இதேபோல் இதற்கு முன்னர் சோழர்கள் காலத்தில் இராஜராஜ நாடகம் இப்பெரிய கோயிலில் ஆடப்பட்டு வந்துள்ளது.

இது நாடகத்தமிழ் வகையினைச் சேர்ந்தது என்பதால், அவ்வச்சாதியார், இடம் முதலியவற்றிற்கு ஏற்பப் பேசும் முறையில் சில சொற்களும், சொற்றொடர்களும் மரூஉ மொழிகளாகவும், கொச்சை மொழிகளாகவும் காணப் படுகின்றன. வதைக்குது, உதைக்குது, இருக்குது, பதறுதடி, கட்டலையோ, குத்தலையோ, வருகுது, நாலுகால், நாப்புக் காட்டி, பெருகுது, கேளடையே, தேடலை என்பன அவற்றுள் சிலவாகும்.

குறச்சாதியினரின் பல பழக்கவழக்கங்கள் இதன் மூலம் அறிய முடிகின்றது. மேலும் குறத்தி குறி கூறும் திற முடையவள் என்றும் அவள் மாத்திரைக்கோலும், குறக்கூடையும் வைத்திருப்பாள் என்றும், அவள் கைக் குறிகளையும், மெய்க்குறிகளையும் பார்த்துப் பலன் கூறுவாள் என்றும் குறி கூறுவதற்கு முன்னர் பல தெய்வங்களுக்கும் பூசை போடச் செய்து, அத்தெய்வங்களையும், தன் குல தெய்வத்தையும் வேண்டிக் கொள்வாள் என்றும், பல தலங்கள், நதிகள், மலைகள் முதலிய இடங்கள் சென்று சஞ்சரிப்பவள் என்றும் செய்திகள் அறியப்படுகின்றன.

மலைவளம் முதலியவற்றைப் பாடிக் குறிஞ்சி நிலத்தில் இருந்தவர்களாகப் பழைய தமிழ் நூல்களில் கூறப்படும் அகவன் மகளிரும், அந்நிலத்து மகளிர் தலைவன்பால் கொண்ட காமநோயால் வருந்தும்போது தாயார் வெறியாட்டு எடுப்பதற்கு முன் கட்டுப் பார்த்துக் கூறும் கட்டுவித்தியரும், வெறியாடும் தேவராட்டியரும் ஆகிய சிலர் கூறப்படுகின்றனர். குறவஞ்சிகளில் காணப்படும் குறத்தியர் இயல்பும், செயல்களும் அவர்கள் இயல்பு செயல்களோடு ஒப்புமை உடையனவாகக் காணப்படுதலின் இவரும் அவர்கள் வகையைச் சார்ந்தவராதல் கூடுமென்று தோன்றுகின்றது.

இந்நூலில் வந்துள்ள குறிவகைகளும், நிமித்தங்களும், கைரேகை, கால்ரேகை, மறு, தழும்பு, சுழிகள், கவுளி, விரிச்சி, ஆந்தையின் சொல், குறவர்கள் வேட்டையாடுதலும்,

பறவைகளைத் தந்திரமாக வலைவீசிப் பிடிப்பதும் பிறவுமாகிய வழக்கங்களும் இந்நூலில் காணப்படுகின்றன.

இதனுள் தலைவியின் கூற்றாக வரும் பாடல்கள் புறத்திணைக் கைக்கிளை வகையைச் சேர்ந்தனவாகும். அவ்வகையாக இதன்பால் அமைந்துள்ள துறைகள் மன்மதோ பாலம்பனம், சந்திரோபாலம்பனம், தென்றலைப் பழித்தல், காமமிக்க கழிபடர்கிளவி, தூது போக்கல், மெலிவொடு வைகல் முதலியனவாகும்.

இந்நூலினுள் கூறப்படும் தலங்களுள், அருணையில் திருமாலும் பிரமதேவரும் அடிமுடி தேடியதும், காஞ்சியில் உமாதேவியார் தவம் செய்ததும், கோகர்ணத்தில் சிவலிங்கப் பெருமானை இராவணன் வலிதில் பறித்து எடுக்க முயன்ற போது அப்பெருமான் பசுவின் செவி வடிவானமையும், காளத்தியில் கண்ணப்பர் சிவபெருமான் கண்ணில் கண் இடந்து அப்பியதும், தில்லையில் நடராசப்பெருமான் பதஞ்சலி வியாக்கிரபாதர்களின் பொருட்டு நடனம் செய்ததும், சீர்காழி பிரளய காலத்தில் தோணியாக மிதந்ததும், திருக்கடவூரில் சிவபெருமான் மார்க்கண்டேயருக்காக யமனைக் காலால் உதைத்ததும், மயிலாடுதுறையில் உமாதேவியார் மயில் வடிவம் கொண்டு பூசித்ததும், திருவாவடுதுறையில் சிவன் அரசமரத்தின் கீழ் எழுந்தருளி இருப்பதும், திருவாரூரில் திருமகள் சிவபெருமானைப் பூசித்ததும், இராமேசுவரத்தில் ராமர் சிவபெருமானைப் பூசித்ததும் ஆகிய புராண வரலாற்றுச் செய்திகள் எடுத்தாளப் படுகின்றன.

பாட்டுடைத் தலைவராகிய சரபோஜி மன்னருடைய புகழ், வீரம், கொடை, தெய்வபக்தி, அரசியல் சிறப்பு முதலியவை இடையிடையே பாராட்டப்பெற்றுள்ளன. குறத்தி பல சாதிப்பெண்களுக்குக் குறி சொல்லுகையில் அப்பெண்கள் குறிசொல்லும்படி தத்தம் மொழிகளில் சொல்லுதல் இதில் காணப்படுகிறது. அப்பாட்டில் தெலுங்கு, கன்னடம், மராத்தி, இந்துஸ்தானி, ஆங்கிலம் ஆகிய மொழிச் சொற்றொடர்களை ஆசிரியர் எடுத்தாண்டுள்ளார்.

இந்நூலாசிரியர் தம் கூற்றாகவும், பிறர் கூற்றாகவும் பல உவமைகளை அமைத்துப் பொருளைப் புலப்படுத்திச் செல்கின்றார். ஒரு பறவை வலையில் சிக்கிக்கொண்டு விழிப்பதற்கு, இலக்கணம் தெரியாதவர்கள் கவி சொல்லி, கற்றறிந்த அறிஞர்கள் அக்கவியில் குற்றம் கண்டு கேட்கையில் விழிப்பதை உவமை கூறியுள்ளார். குறவன் கூற்றில் காணப்படும் உவமைகளில், பறவை காலிலும், கழுத்திலும் வலையினை மாட்டிக்கொள்வதற்கு, திருடர்களுக்குக் காலிலும், கையிலும் தொழுக்கட்டையை மாட்டி விடுவதும், முத்துக்கு இலுப்பைப் பூவும், வைடூரியச் சுட்டிக்குப் பூனைக் கண்ணும், ஆடைக்குப் பாம்புரியும் அக்குறவன் அறிதற்கு உரியனவாக உள்ளன.

சிலேடை, ஏது, தற்குறிப்பேற்றம், அவநுதி முதலிய பொருளணிகளும் மடக்கும் சந்தமும் இந்நூலினுள் அங்கங்கே அமைந்துள்ளன. மதனவல்லி சந்திரனைப் பழிக்கும் கூற்றில் பத்தொன்பது ஆண்டுகளின் பெயர்களும், குறவனுக்கும், குறத்திக்கும் இடையே நடைபெறும் வினாவிடையில் தலங்களின் பெயர்களும், தமிழ்க் காரிகை யென்பதிற் காரிகையென்னும் இலக்கண நூல் பெயரும் காணக்கிடைக்கின்றது. மேலும் இந்நூலில் காணப்படும் பழமொழிகளும், பழைய நூற் கருத்துக்களும் இசைவகைக் குரிய இலக்கண அமைதிகளும் பிறவும் அறிந்து இன்புறத் தக்கதாய் அமைந்துள்ளது.

குறவஞ்சி ஆசிரியர்

சரபேந்திர பூபால குறவஞ்சி என்னும் இந்நாடகம், குற்றாலக் குறவஞ்சிக்கு அடுத்ததாக வைத்து எண்ணப்படும் சிறப்பிற்குரிய நூலாகும். கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் என்ற சிறந்த புலவர் பெருமகனார் தஞ்சையை ஆட்சி செய்த சரபோஜி மன்னரை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு, இக்குறவஞ்சி நூலினைப் படைத்தார். இதனை தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள், தேசிகரின் பிற நூல்களுடன் சேர்த்து கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரின் பிரபந்தங்கள் என்ற பெயரில் பதிப்பித்து வெளியிட்டார்கள்.

தண்டபாணி தேசிகரின் மகனாகப் பிறந்தவர் இந்நூலின்ஆசிரியர் சிவக்கொழுந்து தேசிகர் ஆவார். காவிரியாற்றின் வடக்கே கும்பகோணத்திற்கு அருகில் உள்ள ஊர் கொட்டையூர் ஆகும். இவ்வூர் தேவாரப் பாடல் பெற்ற தலம் உள்ள ஊர். இவ்வூருக்கு ஏரண்டபுரி என்ற பெயரும் உண்டு. ஏரண்டம் என்றால் கொட்டைமுத்து (ஆமணக்கு) என்று பொருள். இவ்வூரில் ஆமணக்கு நிறைந்து இருந்ததால் இப்பெயர் ஏற்பட்டிருக்கக் கூடும். கொட்டையூருக்குத் தெற்கே உள்ள தலம் சத்திமுற்றம் அங்கு உறையும் இறைவர் சிவக்கொழுந்து. அந்த இறைவன் பெயரே இவருக்கு வழங்கப்பெற்றது. இளம் வயதிலே இலக்கண, இலக்கிய நூல்களை விரும்பி பயின்ற சிவக்கொழுந்து தேசிகர், பின்னர் மாணவர்களுக்கு பாடம் சொல்லிக்கொடுப்பதும், பாடல் இயற்றுவதையும் தன் பணியாகக் கொண்டு வாழ்ந்தார்.

தேசிகரின் தமிழ்ப் புலமையினைப் பற்றி அறிந்த தஞ்சைச் சரபோஜி மன்னர், அவரை அழைத்து அரசவைப் புலவராக்கினார். மன்னர் சரபோஜி பல மொழி நூல்களையும் சரஸ்வதி மகால் நூலகத்தில் தொகுத்து வைத்தார். பல புலவர்களையும் ஆதரித்து வந்தார். அரசவைப் புலவரான சிவக்கொழுந்து தேசிகரும் முயன்று பல ஏட்டுச் சுவடிகளைத்

தொகுத்து நூலகத்தை விரிவுபடுத்தினார். அத்துடன் நில்லாது, சரபேந்திரர் வைத்திய முறைகள், சரபேந்திரர் சன்னிரோக சிகிச்சைகள், சரபேந்திரர் வைத்தியம் ஆகிய மருத்துவ நூல்களைப் புதியனவாகச் செய்யுள் வடிவில் இயற்றினார். இந்த சுவடி நூல்கள் சரசுவதி மகால் நூலகத்தில் மட்டுமே உள்ளது. மற்ற சுவடி நூல்கள் போல், வேறு சுவடி நூலகங்களில் இவை கிடையாது என்பதே இந்நூலகத்திற்குப் பெருமை அளிக்கும் செய்தியாகும்.

தொண்ணூறு வயது வரை வாழ்ந்த தேசிகருக்கு இரண்டு மனைவியர். ஆண் மக்கள் இருவர், பெண் மக்கள் ஐவர் இருந்தனர். புலவர் இந்நூல் தவிர கொட்டையூர் உலா, திருவிடைமருதூர்ப் புராணம், திருமண நல்லூர்ப் புராணம், சரசக்கழி நெடில், கோடீச்சுரக் கோவை, தஞ்சைப் பெருவுடையார் உலா போன்ற நூல்களை இயற்றினார். இவற்றுள் சில நூல்கள் இப்பொழுது கிடைக்கவில்லை.

சென்னையில் மாகாண அரசினர் கல்விச்சங்கம் ஒன்றை ஏற்படுத்தினர். அச்சங்கத்தின் தலைமைப் பொறுப்பில் தாண்டவராய முதலியார் இருந்தார். பல நூல்கள் படைத்தல், பழைய நூல்களை ஆய்வு செய்தல், பதிப்பித்தல், பலருக்கு தமிழ் பயிற்றுவிப்பது போன்றவை சங்கத்தின் பணிகள் ஆகும். இப்பணிக்கு உதவியாகத் தக்க புலமை உள்ளவரை அனுப்ப வேண்டி சென்னை மாகாண அரசினர் மன்னர் சரபோஜியை வேண்டினர். மன்னரின் விருப்பத்திற்கிணங்க சென்னை சென்று சிவக்கொழுந்து தேசிகர் அப்பணியினைச் செய்து வந்தார். அப்போதுதான், முதன்முதலாகத் திருவாசகத்தைத் திருத்தப் பதிப்பாக வெளியிட்டார்.

கொட்டையூரிலும், பிற ஊர்களிலும் இருந்த கோயில் களுக்கு நிறைய நிதி உதவி செய்தார். திருவிழாவிற்குத் தேர் செய்து தந்ததோடு நில்லாமல், தொடர்ந்து அத்திருவிழா ஆண்டுதோறும் நடைபெற தென்னந்தோப்பினை அளித்தார். இவர் செய்த இறைபணிகள் நிறைய உண்டு.

இவரின் பாடல்கள் எளிமையும், இனிமையும், தெளிவும் உடையவை. சொல்லணிகளை அமைப்பதில் வல்லவர் இவர். பல வகை தொனிகள் இவரின் பாடல்களில் காணப்படும். கோடீச்சுவரக் கோவையில் காணப்படும் தொனிகள் சிறப்பு மிக்கவை. தலத்தின் பெயர்களைத் தொனியிலும், தல வரலாறுகளைச் சிலேடையிலும் அமைப்பது இவரியல்பு. இயற்றமிழ் நூல்கள் பல படைத்த தேசிகர், இயல், இசை, நாடகம் என்று முத்தமிழுக்கும் உரிய குறவஞ்சியைப் படைத்துத் தம் பல்துறைப் புலமையினை வெளிப்படுத்தியுள்ளார்.

பாட்டுடைத் தலைவன்

சோழர்,நாயக்கர்,மராத்தியர், ஆங்கிலேயர் போன்றோருக்கும் தஞ்சைக்கும் இருந்த ஆட்சித் தொடர்புகளை வரலாறு நமக்கு காட்டுகின்றது. காலத்தின் கோலம்தான் எத்தனை எத்தனை? தமிழ் மன்னர்கள் வேற்றுமொழிப் பகுதிகளைத் தங்கள் வீரத்தால் ஆண்டு இருக்கிறார்கள். வேற்றுமொழி மன்னர்கள் நம் தமிழ்நாட்டுப் பகுதிகளில் தம் அரசுகளை அமைத்தும் இருக்கிறார்கள். காலத்தின் தேவை கருதி மொழி வேறுபாடு பாராது நல்லாட்சி தருபவர் எம்மொழியினராயினும் ஏற்றுக்கொள்வது, குடிமக்களின் இயல்பாகவே இருந்துவருகிறது.

பிற்காலச் சோழர்களின் ஆட்சிக்குப் பிறகு, நாயக்க மன்னர்களும், மராத்தியர்களும் தஞ்சை மண்ணின் காவலர்களாக ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தனர். நாயக்க, மராத்திய மன்னர்களில் மக்களின் மனதில் நீங்கா இடம்பெற்றவர்கள் பலர் உண்டு. அவர்களுள் ஒருவன்தான், கலைத்தாயே விரும்பிப் பெற்றெடுத்து, வளர்த்து, ஆளச்செய்து, அழகு பார்த்த மராத்தியர் குலத்தில் வந்துதித்த பல்கலை வித்தகன், சரபேந்திர பூபால குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன் தஞ்சை மன்னர் இரண்டாம் சரபோஜி *(கி. பி. 1798 - 1832)* ஆவார்.

வரலாற்று ஏடுகளில் கி. பி. 7ஆம் நூற்றாண்டு முதலே தஞ்சை என்னும் பெயர் காணப்படுவதாக அறிய முடிகின்றது. பல வளங்கள் பெற்று தனித்தன்மையுடன் விளங்கும் தஞ்சை சோழர்களின் காலத்தில் நாட்டிற்கே தலைநகரமாகத் திகழ்ந்தது. இன்றும் அப்பெருமையினை நிலைநிறுத்தி சோழர்களை நினைவுபடுத்திக் கொண்டிருப்பது தஞ்சைப் பெருவுடையார் கோயிலே ஆகும்.

ஆன்மீக வளர்ச்சிக்கான கோயிலாகப் பெரியகோயில் திகழ்வது போல், தஞ்சையில் அறிவு வளர்ச்சிக்கான, அறிவுத் திருக்கோயிலாய் திகழ்வது தஞ்சை சரசுவதி மகால் நூலகம் ஆகும். இந்நூலகத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர் மன்னர் சரபோஜி ஆவார்.

பல மொழிகளில் அமைந்த அரும்பெரும் ஓலைச் சுவடிகளையும், சிறந்த நூல்களையும் கொண்டு விளங்கு கின்றது இந்நூலகம். சிற்பம், ஓவியம், இசை, நாட்டியம் எனப் பலதுறைகளில் பெருமை பெற்று விளங்கும் ஊர் தஞ்சை ஆகும்.

இத்தகு சீரும் சிறப்பும் மிக்க தஞ்சையை ஆட்சி செய்தவரே மன்னர் சரபோஜி. போர் புரிந்து வெற்றிகள் பல பெற்று பெரும்புகழ் பெற்ற மன்னர்கள் வரலாற்றில் நிறையவே உண்டு. ஆனால் தன் அறிவாற்றலாலும், கலை உணர்வாலும், கருணையினாலும், அரவணைப்பாலும் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு, வரலாற்றில் தனக்கென்று ஒரு தனியிடத்தைப் பெற்ற மன்னர் சரபோஜி ஆவார். இவர் மண்ணை வெல்லாது, மக்கள் மனதை வென்று மாபெரும் புகழினைப் பெற்று விளங்குகிறார்.

மன்னர் துளஜாஜி, சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் வரை தஞ்சையில் அரசு புரிந்தார். கருணையும் பண்பும் மிக்க இம்மன்னர் தனது ஆட்சிக் காலத்தில் பலவித இன்னல்களைச் சமாளிக்க வேண்டியிருந்தது. காரணம் 18ஆம் நூற்றாண்டு மிகவும் ஆபத்தான சூழ்நிலைகள் நிலவிய காலமாகும். மொகலாயப் பேரரசு அழிவை நோக்கி விரைந்து சென்று கொண்டிருந்தது. பிரஞ்சு, ஆங்கிலக் கம்பெனிகள் தென்னிந்தியாவில் தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்று கொண்டிருந்தனர்.

ஆங்கிலேயர்களும், கருநாடக நவாபும் மன்னர் துளஜாஜிக்கு ஓயாத தொல்லைகளைக் கொடுத்து மன நிம்மதியைக் குலைத்தனர். இருவருமே மன்னரிடம் பல சலுகைகள் வேண்டும் என்று நிர்பந்தம் செய்தனர். சில சமயங்களில் மன்னரால் அளிக்க இயலாத சலுகைகளையும், உரிமைகளையும் கோரினர். தன் பரிதாப நிலையை அடிக்கடி எண்ணிப் பார்த்த மன்னர், தன் நாட்டில் அமைதியும், சமாதானமும் நிலவுவதற்கான வழி வகைகள் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினார்.

துளஜாஜி மன்னர் பலவற்றை எண்ணி மன வேதனை யுற்றார். இவர் தன் கடைசி காலத்தை மகிழ்ச்சியற்றும், மன அமைதியின்றியும் கழித்தார். இவருடைய இல்வாழ்க்கையும் உற்சாகமற்றதாக இருந்தது. இவர் பல மனைவியர்களை மணந்திருந்தாலும், இவருக்குப்பின் அரச பீடத்தில் அமர வாரிசு இல்லாது போயிற்று. இவரது முதல் மனைவி மோகனபாய் இரண்டு ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். முதல் குழந்தை பிறந்த உடனேயே இறந்துவிட்டது. அடுத்த குழந்தை ஆறு ஆண்டுகள் வரை வாழ்ந்து அம்மை நோய் கண்டு இறந்துவிட்டது. மனைவி மோகனாபாய் பிரசவத்தின் போது இறந்து போனார். மன்னருக்கு அப்ருபாபாய் என்ற மகள் இருந்தாள். இவளும் ஒரு ஆண் குழந்தையையும் ஒரு பெண் குழந்தையையும் பெற்றெடுத்துவிட்டு, இறந்து விட்டாள். இந்தப் பேரக் குழந்தைகளை மன்னர் துளஜாஜி பிரியமுடன் வளர்த்து வந்தார். இக்குழந்தைகளும் இறந்து விட்டன. மகன்களும், மனைவியும், மகளும், பேரக் குழந்தைகளும் மரண மடைந்ததால் மனம் உடைந்து போனார். இவரது உடல் நலம் பாதிக்கப்பட்டு மிகவும் நலிவுற்றார். தனக்குப்பின் பட்டம் பெற எவருமில்லாத நிலையில் நாட்டில் குழப்பமும், கலகங் களும் நிலவும் என்றும், ஆங்கிலேயர்கள் தயக்கம் காட்டாமல் உடனடியாகத் தஞ்சையைக் கைப்பற்றி விடுவார்கள், என்பதனாலும், பண்டைய இந்து சட்டப்படியும் நடைமுறை வழக்கப்படியும் சுவீகாரம் எடுத்துக் கொள்ளப் பட்ட மகன்,

சுவீகாரம் எடுத்துக் கொண்ட தந்தையின் உடைமைகளை அடையலாம் இதனால் தன் மரணத்திற்குப் பின் தஞ்சை அரச பீடத்தில் அமர ஒரு இளவரசனை சுவீகாரம் எடுக்கவேண்டும் என்று எண்ணினார். தன் வாரிசாக தஞ்சை அரச பீ ்தில் அமரக் கூடியவன், அக்காலத்தில் மராட்டிய இளவரசர்களில் தலைசிறந்தவனாக இருக்கவேண்டும் என்று விரும்பினார். தான் விரும்பும், இளவரசன் சிறந்த அறிவாளியாக விளங்குவதுடன், சிறந்த மாவீரனாகவும் திகழ வேண்டும் என்பது இவருடைய அதீத ஆசையாக இருந்தது.

தனக்கு நம்பிக்கையானவர்களை மராட்டியத்திற்கு அனுப்பிவைத்ததுடன், புனா, சதாரா, கோலாப்பூர், பரோடா போன்ற இடங்களில் உள்ள தன் நண்பர்களுக்கும், உறவினர் களுக்கும் மன்னர் துளஜாஜி தன் விருப்பத்தைத் தெரிவித்துக் கடிதம் எழுதினார். சில நாட்களுக்குப்பின் மன்னர் தொடர்பு கொண்டிருந்த சதாரா மன்னர் தன் நண்பருக்கு நல்ல செய்தியை அனுப்பி வைத்தார். தன் குடும்பத்தில் வந்த சரபோஜி இளவரசனை, மன்னர் சுவீகாரம் எடுப்பதில் எந்தவிதத் தடையுமில்லை எனவும், அவனைத் தவிர வேறு எவரும் உகந்த, சிறந்த வாரிசாக இருக்கமுடியாது. ஆகவே "அன்புமிக்க துளஜாஜி அவர்களே! தாங்கள் மேலும் காலத்தை வீணாக்காமல் உடனே புறப்பட்டு வந்து, நீங்கள் நேரில் எல்லாவற்றையும் நன்கு அறிந்து திருப்தி அடையலாம்" என சதாரா மன்னர் எழுதியிருந்தார்.

இச்செய்தி மன்னர் சதாராவிற்குப் புறப்பட போதுமானதாக இருந்தது. மகாராஷ்டிரத்தில் சதாராவைப் போன்று பலத்திலும், பணத்திலும் சிறந்த மாநிலம் வேறு இல்லை. இதனால் மன்னர் துளஜாஜி சதாராவிற்குப் புறப்படத் தீர்மானித்து தன் நம்பிக்கைக்குரிய ஆலோசகர்களுடனும், வீரர்களுடனும் தென் மகாராஷ்டிரத்தை நோக்கிப் புறப்பட்டார்.

சதாரா சென்று அடைந்த மன்னர் துளஜாஜி சில தினங்கள் ஒய்வு எடுத்துக்கொண்ட பின்னர் சதாரா

மன்னரிடமும், வேறு பலரிடமும் நிகழ்த்திய விசாரணைகளினால், இளவரசர் சரபோஜி சரியான தேர்வுதான் என்பதை உணர்ந்தார். மன்னர் முதலில் சரபோஜியின் தந்தை ஷாஜி ராஜாவின் தமையன் புவாஜியின் மகனைத் தத்து எடுக்க விரும்பினார். ஆனால் அந்த சிறுவன், உடல் நலம் குன்றியும், ஊனமுற்றும் இருந்ததால், மன்னர் ஷாஜிராஜாவின் மகனாக 24-9-1777ல் பிறந்த சரபோஜியை தன் வாரிசாக தேர்ந்து எடுக்க தீர்மானித்தார். மகாராஷ்டிரா அமைச்சர்களும், தஞ்சை மன்னரிடம் இளவரசன் சரபோஜி சிறந்த மகனாக விளங்கி, தஞ்சை அரியணையில் அமரத்தகுதி வாய்ந்தவன் எனக் கருத்து தெரிவித்தனர். சரபோஜியைப் பற்றி பலரும் சிறப்பான முறையில் எடுத்துக் கூறியவற்றைக் கேட்டு மன்னர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

மறுநாள் சிறுவன் சரபோஜியை மன்னர் துளஜாஜி சந்தித்ததும், தனக்குப்பின் அரசபீடத்தில் அமர இச்சிறுவன் தகுதி வாய்ந்தவன் என்று உணர்ந்தார். சரபோஜியின் நேர்மையான நடத்தை, வசீகரமான தோற்றம், புத்திசாலித்தனம் மன்னரை மிகவும் கவர்ந்தன. மன்னருடன் வந்திருந்தவர்களுக்கும், சரபோஜியின் பண்பும், அறிவுக் கூர்மையுடன் கூடிய நோக்கும் மிகவும் பிடித்திருந்தன. அனைவருமே சரபோஜி சரியான தேர்வு என்பதை உணர்ந்தனர். தஞ்சை மன்னருக்கு மனநிறைவும், மகிழ்ச்சியும் ஏற்பட்டது. சரபோஜியை தன் மகனாகவும், தஞ்சை அரசு கட்டிலுக்கு வாரிசாகவும் சுவீகாரம் எடுத்துக் கொள்ள முடிவு எடுத்து விட்டார்.

சரபோஜியை சுவீகாரம் எடுப்பது என்ற முடிவிற்கு வந்தபோது மன்னர் துளஜாஜி தனக்குள் "என் இதயம் நிறைந்த இளவரசன் இங்கே கிடைத்திருக்கிறான். என் மரணத்திற்குப் பின் என் நாட்டு மக்கள் என்னுடைய முடிவின் பயனை நன்கு அனுபவிப்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்" என சொல்லிக் கொண்டார். சுவீகாரம் ஏற்பதற்கான விழாவினை எவ்வளவு விரைவில் ஏற்பாடு செய்ய முடியுமோ அவ்வளவு விரைவில் ஏற்பாடு

செய்யுமாறு மன்னர் ஆணையிட்டார். தன் சுவீகார புதல்வனுடன் மன்னர் தஞ்சைக்குப் பயணமானார்.

மன்னரின் உடல்நிலை சீர்கெட்டுவிட்டது. தான் அதிக நாட்கள் உயிர்வாழ இயலாது என்பதை உணர்ந்த துளஜாஜி தன் ராணிகளையும், நெருங்கிய உறவினர்களையும், ஐரோப்பிய நண்பர்களையும் அழைத்து சரபோஜியை சுவீகாரம் எடுத்துக்கொள்ள இருக்கும் தன் விருப்பத்தைத் தெரிவித்தார். தன் ராணிகள் மோகனாபாய் சாகிப், சுலோசனாபாய் சாகிப், தன் அன்னை திரௌபதாம்மாபாய் சாகிப் அவர்களின் சம்மதத்தைப் பெற்று, இவ்விஷயத்தை அரசு அதிகாரிகளிடமும், ஸ்வாட்ஸ் பாதிரியார் முதலியவர் களிடமும் தெரிவித்து தான் அதிக நாட்கள் உயிருடன் இருக்கப்போவதில்லை எனவும், அவர்கள் சரபோஜியின் நலனில் அக்கறை காட்டவேண்டும் என்றும், கேட்டுக் கொண்டார். ஐரோப்பிய நண்பர்களிடம் இதைத் தெரிவிக்கும் போது, இவருடைய ஒன்றுவிட்ட சகோதரன் அமர்சிங் உடன் இருந்தான். 22-1-1787 அன்று பத்து வயதுடைய சிறுவன் சரபோஜியை இந்து தர்மம் வழக்க முறைப்படி சுவீகாரம் ஏற்கும் விழா நடைபெற்றது.

சுவீகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட செய்தி யானை மீது வைக்கப்பட்ட முரசு மூலம் நாட்டு மக்களுக்கு அறிவிக்கப் பட்டது. நகரம் முழுவதும் இனிப்பு வழங்கப்பட்டது. விருந்து உபசாரங்கள் நடைபெற்றன. 22-1-1787 அன்று எடுத்துக் கொண்ட சுவீகாரம் பற்றிய விபரத்தினை சென்னை கவர்னருக்கு 26-1-1787 தேதியிட்ட கடிதத்தில் மன்னர் தெரிவித்தார்.

மன்னர் இறப்பதற்கு ஐந்து தினங்களுக்கு முன்னர், அரண்மனையில் பிரதாப் ராமசாமி மகாலில் கூடிய அவையில், ஒரு சிம்மாசனத்தில் சிறுவன் சரபோஜியை அமரவைத்து, அங்கு கூடியிருந்தவர்களிடம் சரபோஜிக்கு தக்க மரியாதை செலுத்துமாறு மன்னர் வேண்டிக்கொண்டார். தன்னுடைய நண்பர் ஸ்வாட்ஸ் பாதிரியாரிடம் சிறுவனை பாதுகாத்து, அவனுடைய நலனை கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக்

கொள்ளுமாறு வேண்டிக்கொண்டார். அது சமயம் ஸ்வாட்ஸ் பாதிரியார் சரபோஜி சிறுவனாக உள்ளதால், அரசு நிருவாகத்தை நன்கு கவனிக்க இயலாது எனவும், ஆகவே மன்னரின் சகோதரர் அமர்சிங், சரபோஜி வயது அடையும்வரை, அவருடைய பிரதிநிதியாக இருந்து உதவ வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். மன்னருக்கு அமர்சிங்கை பிரதிநிதியாக அமர்த்துவதில் விருப்பமில்லை என்றாலும், தன் ஐரோப்பிய நண்பர்களுடைய வேண்டு கோளுக்கு இணங்கியும், ஸ்வாட்ஸ் பாதிரியார் தன் முழு ஒத்துழைப்பையும் நல்குவதாக வாக்குறுதியளித்த பின்னர், இதை ஏற்றுக் கொண்டார். அரசுபுரிய வேண்டிய வயதை சரபோஜி எட்டும் வரை, மன்னரின் ஒன்றுவிட்ட சகோதரர், அமர்சிங், சரபோஜியின் பிரதிநிதியாக இருந்து அரசுபுரிய வேண்டும், சரபோஜி வயது வந்ததும் அவரிடம் அரசை ஒப்படைக்க வேண்டும் என்ற விபரம் ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனி நிருவாகிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

தன் 49வது வயதில் மன்னர் துளஜாஜி மரணமுற்றார். தென்னிந்தியா எங்கும் அமைதியின்மையும், நெறிமுறை களும் தாழ்வுற்ற நிலையிலிருந்தும், தனக்குப்பின் நல்ல வாரிசு கிடைத்ததில் மன நிறைவு பெற்ற மன்னர், இறக்கும் தருவாயில் மன அமைதியுடன் இறந்தார். தகுதியான வாரிசு கிடைக்க வேண்டும் என்று விரும்பிய மன்னருக்கு சரபோஜி கிடைத்துவிட்டார்.

மன்னர் துளஜாஜி விவேகத்துடன் தன் மகன் சரபோஜியை தகுதியும் திறமையும் வாய்ந்த ஆசிரியர்களின் கவனிப்பில் விட்டுவிட்டுச் சென்றிருந்தார். அவர்களிடம் தன்மகன் கல்வி விஷயத்தில் தனிக்கவனம் செலுத்தியும் நல்ல பண்புகளை அவன் பெறுமாறும் செய்யவேணடும் எனக் கேட்டுக்கொண்டார். தென்னிந்தியாவின் எதிர்கால அரசியலில் தொல்லைகள் நிறைய ஏற்படக் கூடிய நிலை உள்ளதால், அவைகளை நன்கு கவனித்து சமாளிக்க கூடிய திறமையை சரபோஜி பெறுமாறு செய்யவேண்டும் என்று

விரும்பினார். எல்லா உறவினர்களும், சரபோஜியின் ஆசிரியர்களும் தங்களால் முடிந்த முயற்சியில் ஈடுபடுவதாக மன்னரிடம் உறுதி அளித்தனர். மன்னர் மனநிறைவுடனும் அமைதியுடனும் 31-1-1787 அன்று மரணம் அடைந்தார்.

சரபோஜியின் குண இயல்புக்கும், புகழுக்கும், பெருமைக்கும் துளஜா நல்ல அடித்தளத்தை அமைத்துக் கொடுத்துவிட்டார். சரபோஜி தஞ்சை அரியணையில் மன்னராக அமர்ந்தபோது தன் அரசின் பெரும் பகுதியை இழக்க வேண்டியதாயிற்று. ஆயினும் சரபோஜி தன் முன்னேற்றத்திற்காகவும், நன்மைக்காகவும் பாடுபட்ட ஆசான், ஸ்வாட்ஸ் அளித்த கல்வியின் சிறப்பாலும், தன் அறிவு ஆற்றலாலும் பெரும்புகழுடன் விளங்கினார்.

ஸ்வாட்ஸ் பாதிரியார் சரபோஜியின் இளமைப் பருவத்திலிருந்தே அவரைக் கண்காணிக்கும் பொறுப்பை ஏற்றிருந்தார். துளஜாஜி மன்னர் இறப்பதற்கு முன் தன் நண்பர் ஸ்வாட்ஸ் பாதிரியாரிடம் சரபோஜியை சிறந்த அறிஞனாக உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அத்துடன் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, சென்னையில் உள்ள ஆங்கில கவர்னரிடமும், பிற அதிகாரிகளிடமும், தனக்குப்பின் சரபோஜியே சட்டப் படியான அரசர் என ஏற்கச் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதனால் சரபோஜி, ஸ்வாட்ஸ் பாதிரியாரின் பொறுப்பில் விடப்பட்டார். பன்னிரண்டு ஆண்டுகள் ஸ்வாட்ஸ் பாதிரியார், சரபோஜியின் ஆசிரியராகவும், வழி காட்டியாகவும், நண்பனாகவும் இருந்து சரபோஜி எதை எதைக் கற்க வேண்டும் என விரும்பினாரோ அவைகளைத் தேர்ந்தெடுக்கச் செய்து கற்பித்தார். ஆங்கிலத்தில் சரளமாகப் பேசவும், சிறப்பாக எழுதவும் அவர் உதவிபுரிந்தார். ஐரோப்பாவிலிருந்து சிறந்த நூல்களை அவர் வரவழைத்து அதைத் தன் மாணவனான இளவரசனைப் படிக்கச் செய்து,

அவைகளைப் பற்றி சிந்திக்கச்செய்து, சொந்தக்கருத்தை உருவாக்கிக் கொள்ள வழிவகுத்தார். சரபோஜியின் மீது தனக்குள்ள பெரும் செல்வாக்கை உணர்ந்து பெருமைப் பட்டார்.

சரபோஜி, தஞ்சை மன்னராக அரசபீடத்தில் அமர்வதற்குள் பற்பல சிரமங்களை ஏற்க வேண்டியிருந்தது. ஸ்வாட்ஸ் அவர்கள் சென்னையில் உள்ள மேஜர் ஸ்டிவன்ஸ், ஜெனரல் மன்ரோ, மேஜர் சல்லியன் போன்ற ஆங்கில அதிகாரிகளுடன் நட்பு பூண்டு இருந்தார். அரசின் அவசர விவகாரங்களில் அப்போதைக்கு அப்போது அவர்களுடைய ஆலோசனைகளையும் கேட்டுவந்தார்.

மன்னர் துளஜாஜி கி. பி. 1787இல் மரணமுற்றதும், தஞ்சை அரசு உரிமை மீது நீண்ட கால சர்ச்சை எழுந்தது. துளஜாஜி தன் உயிலில் தன்னுடைய வளர்ப்பு மகன் இளவரசர் சரபோஜி தனக்குப் பின் பட்டம் பெறவேண்டும் என்றும், அவன் தக்க வயது வரும்வரை, தன் ஒன்றுவிட்ட சகோதரன் அமர்சிங் அரசின் பிரதிநிதியாக இருக்கவேண்டும் எனத் தெரிவித்து இருந்தார். துளஜாஜி மன்னர் இறந்த உடனே அமர்சிங், மன்னர் உயிலை மதிக்காது தானே தஞ்சையின் மன்னர் என்று தஞ்சையிலும், சென்னையிலும் இருந்த ஆங்கில அதிகாரிகளுக்கு அறிவித்து, மன்னர் தன் சுய நினைவு அற்ற நிலையில் ஒரு அன்னியனை சுவீகாரம் எடுத்துக் கொண்டார் என்பதால், அவருடைய உயில் தன்னைக் கட்டுப்படுத்தாது எனத்தெரிவித்தார். அத்துடன் சரபோஜி அவனுடைய தந்தைக்கு ஒரே மகன் என்பதால், இந்து சட்ட விதிமுறைப்படி சுவீகாரம் செல்லாது என பன்னிரண்டு பண்டிதர்களைக் கொண்ட குழுவின் மூலம் அறிவிக்கவும் செய்துவிட்டார். தஞ்சையில் இருந்த ஆங்கில அதிகாரிகளும் அமர்சிங்கின் தஞ்சை அரசு உரிமையை ஆதரித்தனர்.

இந்து சட்டப்படி, வளர்ப்பு மகனுக்கு, வளர்ப்பு தந்தைக்குப் பின் அரசு பீடத்தில் அமர உரிமை உள்ளது. தனிப்பட்ட சொத்துக்களை அனுபவிக்க, வளர்ப்பு மகனுக்கு

உள்ள உரிமை வேறு, அரச உரிமை பெறுவது வேறு என்ற கொள்கையை ஆங்கிலேயர்கள் கடைப்பிடித்து வந்தனர். இதன் காரணமாக ஆங்கில கவர்னரும் மற்ற அதிகாரிகளும் வளர்ப்பு மகன் சரபோஜியை தஞ்சை அரச பீடத்தில் அமர அனுமதிக்கவில்லை.

துளஜாஜி மன்னரின் விருப்பப்படி தன் மாணவன் சரபோஜியை எப்படியும் தஞ்சை மன்னராக்க வேண்டும் என்று ஸ்வாட்ஸ் பாதிரியார் தீர்மானித்தார். சமாதானத்தை நாடும் அந்த அறிஞர், அரசு உரிமைச் சச்சரவில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். மன்னர் துளஜாஜியிடம் தன் சக்திக்கு இயன்றவரை, மன்னருடைய விருப்பத்தை நிறை வேற்றுவதாக வாக்களித்திருந்தார். இதனால் காலத்தைக் கடத்தாது உடனடியாக மன்னரின் உயிலைக் கருத்தில் கொண்டு இந்து சட்டங்களைக் கற்கத் தொடங்கினார்.

ஸ்வாட்ஸ் பாதிரியார், இளவரசர் சரபோஜி, அமர்சிங், இவ்விருவருடைய உரிமைகளைப் பற்றி மிகக் கவனமாக ஆராய்ந்து சரபோஜியே தஞ்சை சிம்மாசனத்தில், அவருடைய வளர்ப்புத் தந்தைக்குப் பின் அமரத் தகுதி உடையவர் என்ற முடிவுக்கு வந்தார். இதனால் உடனடியாக எந்த தயக்கமும் இன்றி எந்தவித ஏமாற்றங்களுக்கும், தடைகளுக்கும் துவண்டு விடாமல், சரபோஜியின் உரிமையைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டார். இவர் விரைந்து செயல்பட்டு, தஞ்சையிலும், சென்னையிலும் உள்ள ஆங்கில அதிகாரி களுக்கு சரபோஜியே நியாயமான உரிமையாளர் என்பதற்கான சரியான காரணங்களை எடுத்துக் காட்டி, சரபோஜியின் சார்பில் கடிதங்கள் மூலம் முறையீடு செய்தார். சென்னையில் இருந்த ஆங்கில கவர்னருக்கு எழுதிய கடிதத்தில் "நான் மன்னருடன் நட்பு பூண்டு பல ஆண்டுகள் பணிபுரிந்து, நண்பனாகவும், ஆசானாகவும் இருந்துள்ளேன். சரபோஜியைத் தவிர வேறு எவருக்கும் தஞ்சை அரசபீடத்தில் அமரத் தகுதி இல்லை என்பது என் முடிவு" என எழுதியிருந்தார். அனைத்துக் கடிதங்களிலும் மிகத் தெளிவாக இளவரசர் சரபோஜிக்கே,

தன் வளர்ப்புத் தந்தை துளஜாஜிக்குப் பின் அரச உரிமைபெற, அமர்சிங்கைவிட மேம்பட்ட உண்மையான தகுதி, உரிமை உள்ளது என எழுதினார்.

ஸ்வாட்ஸ் பாதிரியார் எழுதிய இத்தனைக் கடிதங்களும், முறையீடுகளும், சென்னை கவர்னரின் எண்ணத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. இரண்டு ஆண்டுகள் ஸ்வாட்ஸ் இந்த பிரச்சினையில் சிந்தனையைச் செலுத்தி வந்தார். இத்துடன் அமர்சிங்கைப் பற்றியும் புகார் எழுதினார்.

சரபோஜி, தஞ்சையின் நியாயமான ஆட்சிக்கு உரிமையாளர் என்று சென்னை ஆங்கில கவர்னருக்கு எழுதிய முறையீடுகளால் வெற்றிபெற இயலாது என்பதை ஸ்வாட்ஸ் உணர்ந்தார். இதனால் சரபோஜியின் உரிமையை கைவிட வேண்டும் என்பதில்லை. இளவரசரை மன்னராக்க இயலாதா? என்று தனக்குள் அடிக்கடி எண்ணத் தொடங்கினார். மேல் நடவடிக்கை எடுக்க விரும்பிய அவர், சரபோஜியை மேல் அதிகாரியான கவர்னர் ஜெனரலுக்கு, அமர்சிங்கை நீக்கிவிட்டு தன்னை தஞ்சை அரசராக நியமிக்குமாறு கோரி முறையீடு செய்யுமாறு அறிவுரை கூறினார். இளவரசர் தனது ஆசானின் அறிவுரையை ஏற்று கவர்னர் ஜெனரலுக்கு முறையீடு செய்தார். ஆசானும், மாணவனும் தினமும் இரவு பகல் என்று பாராது முறையீட்டு மனுவைத் தயாரித்தனர். இளவரசர், அமர்சிங்குக்கும் அவருடைய ஆட்களுக்கும் தெரியாத இடத்தில் ரகசியமாக தங்கவேண்டும் என முடிவு எடுத்தனர்.

சர் ஜான்சோர் (1793-1798) என்பவர் அது சமயம் கம்பெனியின் கவர்னர் ஜெனரலாக இருந்தார். இவர், மற்றவர்கள் விஷயம் எதிலும் தலையிடுவதில்லை என்ற கொள்கையைக் கடைப்பிடித்து வந்தவர். ஆயினும் சரபோஜியின் முறையீட்டை சீர்தூக்கிப் பார்த்து, அந்த முறையீட்டில் சரபோஜி எழுதியிருந்த ஆங்கிலத்தின் சொல்லாட்சியையும்., உயரிய பண்பையும் கண்டு வியந்தார். இளவரசரின் முறையீடுகளும், ஸ்வாட்ஸ் பாதிரியாரின்

இடைவிடாத முயற்சிகளின் விளைவாலும், விரைவில் பலன் கிடைக்கத் தொடங்கியது. சரபோஜியை சுவீகாரம் எடுத்துக் கொண்டது இந்து தர்மப்படி செல்லாது என்று தஞ்சையில் கூடிய பன்னிரண்டு பண்டிதர்கள், அமர்சிங்கிடம் லஞ்சம் பெற்றுக் கொண்டு கூறியதாகத் தெரியவந்ததும், வங்களா பண்டிதர் களைக் கொண்டு, கவர்னர் ஜெனரல் கருத்து அறிந்ததில், இந்து தர்மப்படி சரபோஜியை சுவீகாரம் எடுத்துக்கொண்டது சரியானதே என்பதை தெரிந்து கொண்டார். சில நிபந்தனைகளுடன் கவர்னர் ஜெனரல், இளவரசரின் முறையீட்டை ஏற்றுக்கொண்டார்.

கி. பி. 1798ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் கவர்னர் ஜெனரல், சென்னையிலிருந்து ஆங்கில கவர்னருக்கு, அமர்சிங்கை தஞ்சை அரசபீடத்திலிருந்து நீக்கவேண்டும், அமர்சிங்குக்குப் பதிலாக இளவரசர் சரபோஜியை தஞ்சை மன்னராக அறிவிக்க வேண்டும் என்று ஆணையிட்டார். மன்னர் துளஜாஜியின் விருப்பம் கடைசியில் நிறைவேறியது. 30-6-1798 அன்று தஞ்சையின் மன்னராக சரபோஜி அமர்த்தப்பட்டார்.

இளவரசர் சரபோஜி மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். மதிப்பிற்குரிய ஆசிரியர் ஸ்வாட்ஸ் பாதிரியாரின் துணிவான, சோர்வில்லாத பெரும் முயற்சியினால் சரபோஜி தஞ்சை மன்னரானார். ஆங்கிலேயர்களுடன் ஓர் ஒப்பந்தத்தை இவர் செய்துகொண்டார். தஞ்சை அரசருக்கும், கம்பெனிக்காரர் களுக்கும் உள்ள நட்பையும், தொடர்பையும் வலுப் படுத்தவும், தஞ்சையின் ஆட்சி நிலையான அடிப் படையில் அமையவும் இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தம் 25-10-1799ல் கையெழுத்து இடப்பட்டது. இதில் பதினைந்து பிரிவுகள் உண்டு. இந்த ஒப்பந்தத்தில் தஞ்சை மாநகரம் மட்டும், சரபோஜியின் மேற்பார்வையில் ஆள வகை செய்யப்பட்டது. இவருக்கு ஓய்வூதியம் தரப்பட்டது. ஆகவே இவர் தஞ்சை மாநகர் ஆட்சிப்பொறுப்பை மட்டும் ஏற்று, தன் வாழ்நாள் முழுவதும் கலை வளர்ச்சியில் ஈடுபட்டார்.

பல்வேறு விஷயங்களில் ஆர்வம் கொண்டு, அதிகம் படித்த மேதையாக விளங்கியவர் சரபோஜி அக்காலத்தில் நிரம்பப் படித்தவர்களில் சரபோஜியும் ஒருவர். இவர் நூல்களைப் படிப்பதில் மட்டும் ஆர்வம் காட்டியதோடு அல்லாமல், உலகின் மூலை முடுக்கு எங்கும் கிடைக்கும் நல்ல பல நூல்களை விலை கொடுத்து வாங்கி அவைகளின் பயன் கருதி பத்திரப்படுத்தினார்.

மேல் நாடுகளில் உள்ள தன்னுடைய நண்பர்கள் மூலம், குறிப்பாக இங்கிலாந்து, பிரான்சு நாடுகளிலிருந்து சிறந்த நூல்களைப் பெற்றார். அந்த நூல்கள் பலதுறை விஷயங் களைப் பற்றியதாக இருந்தன. அவ்வப்போது இவர் ஐரோப்பாவிலிருந்து பல்வேறு மாறுபட்ட துறைகளில் உள்ள விஷயங்களைக் கொண்ட புத்தகங்களைப் பெற்றார்.

விஞ்ஞானத்துறையிலும் பல நூல்களைப் படித்த துடன், ராணுவத்துறை பற்றியும், அப்போது வெளிவந்த மருத்துவ நூல்களைப் பற்றியும், பொது விஷயங்கள் பற்றிய நூல்களையும் கற்றார். இவர் சமஸ்கிருதம், மராட்டிய மொழிகளில் உள்ள சிறந்த நூல்களை இரவு நேரம் கடந்தும், விடியற்காலையும் படித்தார். இந்த மொழிகளில் கிடைக்கக் கூடிய அரிய நூல்களைச் சிரமம் பாராது சேகரிப்பதில் அக்கறை கொண்டு, அவைகளை பாதுகாத்து வைப்பதிலும் கவனம் செலுத்தினார்.

இந்துக்களின் புனிதத் தலமான காசிக்குச் சென்றிருந் தார். அங்கு நிறைய படித்த பண்டிதர்கள் இருந்தனர். அவர்களிடம் மிகவும் மதிப்புடைய, ஓலைச்சுவடிகள் குறிப்பாக சமஸ்கிருதத்தில் இருப்பதை அறிந்து வியப்புற்றார். அவர்களிடம் அந்த ஓலைச் சுவடிகளை தனக்கு விலைக்கு அளிக்குமாறு வேண்டிக் கொண்டார். அவர்களிடம் விலைக்கு வாங்கிய அரிய சமஸ்கிருத ஓலைச்சுவடிகளை காசியிலிருந்து தஞ்சைக்கு எடுத்து வந்தார். அவைகளை தன் அரண்மனையில் இருந்த நூலகத்தில் பத்திரப்படுத்தினார். சிறந்த நூல்களையும், ஓலைச்சுவடிகளையும் என்ன விலை

கொடுத்தாவது வாங்கிவிடுவார். ஒரு சமயம் வெளி மாநிலங்களிலிருந்து சில அரிய சுவடிகள் விற்பனைக்கு வந்தன. அவைகளை வாங்க அதுசமயம் சரபோஜி மன்னர் கைவசம் பணமில்லை. உடனே தன்னுடைய விலை மதிப்புள்ள பதக்கத்தைக் கொடுத்து அச்சுவடிகளை வாங்கிவிட்டார். விலைமதிப்புள்ள பதக்கத்தை விட சுவடிகள் மதிப்பு வாய்ந்தவை என மன்னர் கருதினார். படி எடுப்பவர் களைக் கொண்டு, சிதையும் நிலையிலிருந்த பழைய சுவடிகளிலிருந்து புதிய பிரதிகள் எழுதச்செய்து சுவடிகளைக் காத்து, சேகரித்து வைத்தார். ஆங்கிலேய நண்பர்கள் தஞ்சைக்கு வரும்போது அவர்களிடம் நூல்களை அன்பளிப்பாகப் பெற்றதுடன் இந்தியாவில் பணிபுரிந்து இங்கிலாந்து திரும்பும் ஆங்கில அலுவலர்கள் தந்த நூல்களையும் பெற்றுக்கொண்டு அவற்றை நூலகத்தில் பாதுகாத்தார்.

மன்னர் சரபோஜி சிறந்த நூலாசிரியராகவும் திகழ்ந்தார். கதை எழுதுவதில் இணையற்று விளங்கினார். இவருடைய சிறுகதைகள் சிறப்பாகவும், ரசிக்கக் கூடியதாகவும் உள்ளன. இவர் மராட்டிய மொழியிலும், சமஸ்கிருதத்திலும் பல நூல்களை எழுதியுள்ளார்.

மன்னர் சரபோஜி, சமஸ்கிருதத்தில் சிறந்த கற்பனைத் திறன்மிக்க "குமாரசம்பவ சம்பு" என்ற கதையை எழுதியுள்ளார். இதில் கார்த்திகேயன் என அழைக்கப்படும் தேவசேனாபதி சுப்பிரமணிய சுவாமியின் பிறப்பைப் பற்றி பேசப்படுகிறது. தன் அந்திய காலத்தில் "முத்ராராட்சசாயா" என்ற அற்புதமான நூலை பிராகிருத மொழியில் எழுதினார். மராட்டிய மொழியிலும் பல நூல்களை இவர் எழுதியுள்ளார். பெரிய புராணத்தைக் கொண்டு "பக்தவிலாசம்" என்ற மராட்டிய நூலை இயற்றினார். குறவஞ்சியை மராட்டிய மொழியில் மொழிபெயர்த்தார். மராட்டிய மொழியில் இவர் எழுதிய நூல்கள் பெரும்பாலும் நாடகங்களேயாகும். கங்காவிஸ்வேஸ்வரா பரியணம், மோகினி மகேஷபரிணயம், ராதாகிருஷ்ண நாடகம் போன்ற சிறந்த நாடகங்கள் இதில்

அடங்கும், இந்த நூல்களில் பண்டைய பாரதத்தின் சிறப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

தஞ்சையிலும், தஞ்சையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், இவருடைய அறிவாற்றல் வெளிப்பட்டது. பல கற்றறிந்தவர்களை ஒன்றுகூட்டி, அவர்களை ஆதரித்த சிறந்த கல்விமானாக, புரவலராகத் திகழ்ந்தார். மன்னருடைய வாழ்க்கையின் பெரும்பகுதி இலக்கிய சம்மந்தமான பணிகளில் கழிந்தது. மிகச் சிறந்த ஆசிரியர்களைத் தனது அவைக்கு வரவழைத்து, தனக்குப் பிடித்தமான விஷயங்களில் நூல்களை எழுதச் செய்து அவர்களுக்குத் தக்க சன்மானங்களை அளித்தார். அரபி, பர்சிய மொழிகளில் உள்ள சிறந்த நூல்களை சமஸ்கிருதம், மராட்டிய மொழிகளில் மொழிபெயர்க்கச் செய்தார். மேல்நாட்டுப் பயணிகளும், மன்னருடைய அவைக்கு வந்த கிறித்துவ மத பிரசாரர்களும் சரபோஜி கல்விக்கும், கலாச்சாரத்திற்கும் ஆற்றிய பணிகளைப் பற்றி சிறப்பித்துக் கூறியுள்ளனர்.

மன்னர் தன் அரண்மனையில் வெளிநாட்டார் உதவியுடன் ஒரு கல் அச்சுக்கூடத்தை நிறுவினார். அதற்கு "நவ வித்யா கலாநிதி வர்ணயந்திரசாலா" என்று பெயரிட்டார். அதை நிருவகிக்க சிறந்த கல்விமானான "குப்பாபட்டர்" என்பவரை நிருவாகியாக நியமித்தார். இவ்வச்சகத்தில் அச்சு செய்யப்பட்டு வடமொழியில் பல நூல்கள் வெளிவந்தன.*

இத்தகு சிறப்பு பொருந்திய மன்னர் சரபோஜியே இக்குறவஞ்சி நாடகத்தின் பாட்டுடைத் தலைவராக வைத்துப் போற்றப்படுகிறார்.

■■■■■■■■■■

---

* தஞ்சை மாமன்னர் சரபோஜி - தஞ்சை எழுத்தாளர் நா. எத்திராஜ்

சரபேந்திர பூபாலக் குறவஞ்சி

சிறப்புப் பாயிரம்

மன்னுமதி மந்தரத்தால் தமிழ்க்கடலைக்
கடைந்துகுற வஞ்சி என்னும்
இன்னமுதந் தனைஎடுத்துப் பகர்ந்திடும்நா
எனும்கரத்தால் எழிலார் தஞ்சை
எனும்நகர் மேவுசர பேந்திரர்க்குப்
புலவர்களும் இனிதுஉட் கொள்ள
நன்னயங்கொள் ஏரண்ட புரத்துவளர்
சிவக் கொழுந்து நல்கினானே.

மன்-அசைச்சொல், நிலைபெற்ற; மந்தரம் - அமுதத்திற் காகப் பாற்கடலைக் கடைந்தபொழுது மத்தாக இருந்த மலை; ஏரண்டபுரம் - கொட்டையூர்; (கொட்டையூர் கும்பகோணத்திற்கு அருகில் உள்ளது.)

அறிவாகிய மந்தர மலையால் தமிழ்க் கடலைக் கடைந்து குறவஞ்சி என்னும் இனிய அமுதத்தை எடுத்துத் தமிழுரைக்கும் தன் நாவாகிய கையால், அழகு நிரம்பிய தஞ்சை மாநகரில் அமர்ந்து அரசு செய்யும் சரபோஜி மன்னரும் புலவர்களும் உண்டு மகிழ, நலம் பல கொண்ட ஏரண்ட புரம் என்னும் ஊரின்கண் வாழ்ந்த சிவக்கொழுந்து தேசிகர் வழங்கினார்.

இப்பாயிரம் ஆசிரியர் காலத்தது. இதனைப் பாடியவர் பெயர் தெரியவில்லை.

காப்பு

கணபதி

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பார்கொண்ட புகழின் ஓங்கும்
பதிஎனும் தஞ்சை மேவும்
தார்கொண்ட மார்பன் எங்கள்
சரபோஜி மன்னன் மீது
சீர்கொண்ட தமிழி னாலே
திகழ்குற வஞ்சி கூறப்
பேர்கொண்ட பிரக தீசர்
பெறுகண பதிகாப் பாமே.

பார்-உலகம்; தார்-மலை.

உலகம் முழுவதும் சிறந்த புகழ் பெற்ற நகரான தஞ்சையில் அரசு செய்யும், மாலை அணிந்த திருமார்பினை உடைய எங்கள் சரபோஜி மன்னன் மீது, சிறப்பு வாய்ந்த தமிழ்மொழியின் துணைகொண்டு என்றென்றும் விளங்குகின்ற வகையில் குறவஞ்சி நாடகம் படைக்கப் புகழும், அருளும் நிறைந்த பிரகதீசப்பெருமான் பெற்றெடுத்த கணபதி துணையிருந்து காப்பாராக.

சந்திர மௌலீசர்

தன்னிகர் செல்வன் தஞ்சைச்
சரபோஜி மன்னன் மீது
நன்னயத் தமிழி னாலே
நவில்குற வஞ்சி கூற
உன்னுபோ சலகு லத்துக்கு
உயர்குல தெய்வம் ஆகி
மன்னுசந் திரமௌ லீசர்
மலர்ப்பதம் காப்ப தாமே.

உன்னும் - நினைக்கும்; போசல குலம் - போன்ஸ்லே குலம்.

பிறருக்கு நிகராக ஒப்பிட முடியாதவனும், செல்வச் சிறப்பு மிக்கோனுமாகிய சரபோஜி மன்னன் மீது, நலம் கொண்ட தமிழ் மொழியினால் குறவஞ்சி பாட, இறைவனாகிய தன்னையே எப்போதும் நினைந்திருக்கும் போசல குலத்தவரின் தெய்வமாகிய சந்திர மௌலீசரின் திருப்பாதங்கள் துணையிருந்து காத்திடுமாக.

தஞ்சையை ஆட்சி செய்த மராட்டிய மன்னர்களின் குலதெய்வமாக விளங்கிய இறைவன் சந்திரமௌலீசர் ஆவர். இவ்விறைவருக்கு இன்றளவும் தஞ்சை அரண்மனையில் கோயில் உள்ளது.

பிரகதீசர்

நாட்டை ராகம் - ஜம்பை தாளம்

வெற்றிகொள் மணிமதில் தஞ்சை மாநகர்
மிக்கவண் புகழ்கொண்டு நீடு வாழ்தரு
கொற்றவன் எனும்சர போஜி மன்னன்மேல்
குற வஞ்சிக்கூறக்

கற்றவர் பரவிடு கொன்றை மாலையர்
கட்செவி யொடுமதி தங்கு வேணியர்
மல்தனி மால்விடைப் பிரக தீசர்தம் மலர்ப்
பதம்துணையே-ஜயஜய

மணிமதில்-அழகிய மதிற்சுவர்; கொற்றவன்- வெற்றி பொருந்தியவன்; பரவுதல்-துதித்தல்; வேணி-சடைமுடி; மல்-வலிமை; மால்-மயக்கம்; விடை-காளை.

வெற்றி நிறைந்த, அழகிய மதிற்சுவரால் சூழப்பெற்ற தஞ்சை மாநகரில் பெரும் புகழுடன் நீடு வாழ்கின்ற

மன்னனாகிய சரபோஜி மீது குறவஞ்சி பாட, கல்வியிற் சிறந்தோரால் வணங்கப்படுபவரும், கொன்றை மலர்களால் ஆன மாலையினை அணிந்தவரும், பாம்பு, நிலவு ஆகியவை தங்கியுள்ள சடைமுடியை உடையவரும், வலிமை வாய்ந்ததும், பார்ப்பவர்களுக்கு அச்சம் தரக்கூடியதும், இணையற்றதுமான காளை வாகனத்தின் மீது அமர்ந்து வருபவருமான பிரகதீசப் பெருமானினுடைய மலரணைய திருப்பாதங்கள் துணை செய்யுமாக, வெற்றி ! வெற்றி !

பெரியநாயகி

மருமலர் அகழிசூழ்ந்து ஆழி சூழ்ந்திடும்
மகிதலம் எனஒளிர் தஞ்சை மாநகர்
குருசில்எ னும்சர போஜி மன்னன்மேல் குற
வஞ்சிகூறத்
திருமகள் இறைவனும் மலரின் மேவிய
திசைமுக னும்பணி பிரக தீசர்தம்
ஒருபுறம் மேவிய பெரியநாயகி உபயபதம்
துணையே - ஜயஜய

மருமலர்-மணமுள்ள மலர்; ஆழி-கடல்; மகிதலம்-உலகம்; குரிசில்-தலைவன், அரசன்; திசைமுகன்-பிரமன்; உபய பதம்- இணையான இரு பாதங்கள்.

ஆழிசூழ் மகிதலம் அகழி சூழ்ந்த தஞ்சை நகருக்கு உவமை.

மணம் மிக்க மலர்கள் நிறைந்த அகழியால் சூழப் பெற்றுக் கடலால் சூழப்பெற்ற உலகமெனத் திகழும் தஞ்சை நகரின் தலைவனாகிய சரபோஜி மன்னன் மீது குறவஞ்சி பாடத் திருமகள் நாயகனாகிய திருமாலும், தாமரை மலரின்மேல் வீற்றிருக்கும் பிரமனும் பணிந்து வணங்கும் பிரகதீசப் பெருமானின் உடலின் ஒரு பாகத்தில் உறையும் பெரிய நாயகி அம்மையின் இணையான இரு பாதங்கள் துணை செய்யுமாக. வெற்றி ! வெற்றி !

கணபதியும் கந்தவேளும்

மலிதரு புகழ்உறும் அளகை யாம்என
வளம்உரு தஞ்சையின் இலகு போசல
குலமணி எனும்சர போஜி மன்னன்மேல்
குற வஞ்சிகூற
மலையிடைத் தனதொரு மருப்பின் பாரதம்
வரைஇடப முகத்தவன் இருப தத்தொடும்
கலவமென் மயில்இவர் கந்த வேள்இரு கமல
பதம் துணையே-ஜய ஜய.

மலிதரும் - நிறைந்த; அளகை - குபேரன் தலைநகராகிய அளகாபுரி; குலமணி - குலமாணிக்கம்; மருப்பு - யானைத் தந்தம்; இபமுகம் - யானை முகம்; கலவம் - கலாபம், மயில் தோகை.

குபேரபுரியைப் போல வளம்கொண்ட, புகழ் மிக்க தஞ்சையில் வாழும் போசல அரச குலத்தின் மாணிக்கமாய்த் திகழும் சரபோஜி மன்னன் மீது குறவஞ்சி இயற்றிட, மலையின் மேல் தன் ஒரு தந்தத்தினால் பாரத மகா காவியத்தை எழுதிய யானைமுகக் கடவுளின் இரு பாதங் களும், அழகிய தோகையினை உடைய மென்மையான மயிலின் மீதேறிச் செல்லும் கந்தவேளின் இரு பாதங்களும் துணை புரியுமாக. வெற்றி ! வெற்றி !

கலைமகள்

நடைமயில் வளர்பொழில் சுலவு தஞ்சைமா
நகர்உறை பவன் அணிமன்னு கொற்றவெண்
குடைநிழல் உறுசர போஜி மன்னன்மேல் குற
வஞ்சிகூறக்
கடலமு தனையசொல் லோட தன்சுவை
கனிவுறு பொருள்களும் கருணை தன்னொடு
திடனுற உதவிடு வாணி தன்எழில் திருவடி
மலர்துணையே-ஜய ஜய

நடைமயில்-அழகிய நடைபயிலும் மயில்; பொழில்-சோலை; சுலவும்-சுற்றிச் சூழ்ந்திருக்கும்.

நடம்புரியும் மயில்கள் உலாவுகின்ற சோலைகள் சூழப்பெற்ற தஞ்சை மாநகரில் வாழ்பவனும், தன் அழகிய வெற்றி பொருந்திய வெண்கொற்றக் கொடையின் நிழலைத் தந்து மக்களைக் காப்பவனுமாகிய சரபோஜி மன்னன் மேல் குறவஞ்சி இயற்றக் கடலில் தோன்றிய அமுதத்தை ஒத்த சொற்களையும், அந்த அமுதத்தின் சுவை போன்ற பொருள்களையும் தன் கருணையால் உதவிடும் கலைமகளின் அழகிய மலர்ப்பாதங்கள் துணை செய்யுமாக. வெற்றி!வெற்றி!

மங்களம்

சுருட்டி ராகம் - ஆதி தாளம்

பல்லவி

மங்களம் சரபேந்திரர்க்கு
ஜய மங்களம்

சரணங்கள்

புகழ்சோழ தேசருக்குச்
போசலகு லேசருக்குச்
சகலருக்கும் நேசருக்குத்
தஞ்சைநகர் வாசருக்கு -மங்களம்-1

சித்தபரி சுத்தருக்குத்
தேறுசிவ பத்தருக்குச்
சத்துவகு ணத்தவருக்குத்
தண்மதிமு கத்தருக்கு -மங்களம்-2

நிலைமதிவி சாலருக்கு
நீடுறுசெங் கோலருக்குத்
தலமதனில் மேலருக்குச்
சரபபூ பாலருக்கு -மங்களம்-3

விசாலம் - விரிவு, அகலம்; தலம் - உலகம்; பூபாலர் - உலகினைக் காக்கும் மன்னர்.

சரபோஜி மன்னருக்கு வெற்றியும் மங்களமும் உண்டாகட்டும்.

புகழ்பெற்ற சோழநாட்டின் மன்னருக்கு, போசல குலத்தைச் சேர்ந்த தலைவருக்கு, அனைத்து மக்களிடமும் அன்பு நிறைந்தவருக்கு, தஞ்சை நகரில் வாழ்கின்றவருக்கு மங்களம் உண்டாகட்டும்.

தூய்மையான சிந்தனைகளைக் கொண்டவருக்கு, தெளிந்த சிவபக்தருக்கு, அமைதியான குணம் கொண்டவருக்கு, குளிர்ச்சி பொருந்திய நிலவினைப் போன்ற முகத்தினை உடையவருக்கு மங்களம் உண்டாகட்டும்.

கலக்கம் இல்லாத அகன்ற அறிவினை உடையவருக்கு, நெடிது விளங்கும் செங்கோலாட்சி நடத்துபவருக்கு, இப்புவிதனில் மேலானவருக்கு, சரபோஜி மன்னருக்கு மங்களம் உண்டாகட்டும்.

கட்டியக்காரன் வருகை

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

வரமுறு சரப மன்னர்
வளர்தஞ்சை நகரந் தன்னில்
மருவுமோ கினிப்பெண் மேவும்
வாசல்கட் டியக்கா ரன்தான்
குரவமென் மலர்ப்பூங் கோதைக்
குறவஞ்சி நாட கத்திற்கு
அருள்கண பதிவந் தார்என்று
அவையின்முன் சொலவந் தானே.

மருவும் - பொருந்தும்; மோகினிப்பெண்--இக்குறவஞ்சி நாடகத்தின் தலைவி மதனவல்லி; கட்டியக்காரன்-வாயிற் காவலன்; குரவம்-ஒரு மரம், மணம்; கோதை-மாலை.

கடவுள் வரம் பெற்ற சரபோஜி மன்னர் வாழும் தஞ்சை நக்ரில் பொருந்தி வாழும் மோகினியாகிய மதனவல்லி வசித்துவரும் மாளிகையின் வாசலில் நிற்கும் கட்டியக்காரன், மெல்லிய குரவ மலர் மாலை சூடிய குறவஞ்சி பற்றிய நாடகத்திற்கு அருள்புரிய விநாயகக் கடவுள் வந்துள்ளார் என்று சபையினர்க்கு அறிவிக்க வந்திருக்கிறான்.

கட்டியக்காரன் தோற்றமும் செயலும்

பரசு ராகம் - ஆதி தாளம்

பல்லவி

கட்டியக் காரன்வந் தானே - ஒய்யாரமாகக்
கட்டியக் காரன்வந் தானே.

அனுபல்லவி

கட்டிய கொண்டை வனப்புறு சென்னியில்
கட்டழ குருமாலை கட்டிக்கொண் டுநல்ல-கட்டியக்

சரணங்கள்

மிகஎழில் உற்றிடு காவிச் சல்லடம்
மிசைசுற் றிடுகச்சை இறுக்கியே
தகதிமி தக்கிட திக்கிட என்னத்
தருக்குடன் மேல்மீசை முறுக்கியே -கட்டியக்.1

புகலுறு நெற்றியில் இட்டிடு சிந்துரப்
பொட்டுடன் பொற்பிரம்பு ஏந்தியே
மகராஜ ராஜுக்குச் சரபோஜி ராஜீக்கு
மந்தர ராஜுக்குச் சலாம்எனவே -கட்டியக்.2

தரணி புகழ்ந்திடு மன்னர்கள் சூழத்
தகவுடு கணத்திடை மதிஎன மேவும்
வரபோ சலகுல மணியினைக் கண்டு
சரபோஜி மகாராஜா சலாம்எனப் பணிந்து
-கட்டியக்.3

சென்னி - தலை; உருமாலை - துணியால் தலையில் வரிந்து கட்டும் தலைப்பாகை; சல்லடம் - கால்சட்டை; கச்சை-

இடையில் தார்ப்பாய்ச்சிக் கட்டும் வேட்டி; தருக்கு - செறுக்கு; மந்தரம் - மேருமலை; சலாம் - வணக்கம் (அரபுச் சொல்); தரணி - உலகம்; உடுக்கணம் - விண்மீன்களின் கூட்டம்; மதி - நிலவு.

ஆடம்பரமாகவும், நளினத்துடனும் கட்டியக்காரன் வந்தான். தலைமுடியை வாரிக் கொண்டையாக முடிந்த அழகான தலையில் தலைப்பாகை கட்டிக்கொண்டு கட்டியக்காரன் வந்தான்.

அழகு மிகுந்த காவிநிறக் கால்சட்டையின் மீது தார்ப்பாய்ச்சு வேட்டியை இறுக்கக் கட்டிக்கொண்டு, தகதமிக்கிட எனச் செருக்குடன் மீசையினை முறுக்கியபடி கட்டியக்காரன் வந்தான்.

புகழ்ந்து கூறத்தக்க நெற்றியில் குங்குமப் (செந்தூரப்) பொட்டு இட்டுக்கொண்டு, கையில் தங்கத்தாலான பிரம்பினை ஏந்திய வண்ணம், பேரரசரும், மேருமலையை ஒத்தவருமான சரபோஜி மன்னருக்கு வணக்கம் கூறியபடி கட்டியக்காரன் வந்தான்.

உலகம் முழுவதும் உள்ள புகழ்மிக்க மன்னர்கள் சூழ்ந்திருக்க, விண்மீன்களின் கூட்டத்தின் நடுவிலே திகழும் சந்திரனைப் போல, வீற்றிருக்கும் கடவுள் அருள்பெற்ற போசலகுல மாணிக்கமான சரபோஜி மன்னருக்கு வணக்கம் எனப் பணிவுடன் கட்டியக்காரன் வந்தான்.

உடுக்கணத்திடை மதி-மன்னர்கள் சூழ அமர்ந்திருக்கும் சரபோஜிக்கு உவமை.

கணபதி வருகை

வசனம்

இப்படி மகாராஜாவின் சபையில் வந்த கட்டியக்காரன், இந்நாடகக் காப்புக் கடவுளாகக் (சம்ரட்சணையாகக்) கணபதி வருகிறதைச் சபையில் சொல்லுகிறான்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சந்ததமும் எண்மர்குடி கொண்டு நிற்கத்
தரணியில் அனைவர்களும் மகிழ்ந்து வாழத்
தொந்தமின்றி உழுவைபசுத் துறையில் கூடிச்
சுகமாக விளையாட அரசி யற்றும்
சுந்தரனாம் சரபோஜி மன்னன் மீது
சொல்லுகின்ற குறவஞ்சித் தமிழைக் காக்கத்
தந்திமுகன் ஆகுவா கனமீ தேறிச்
சபையோர்க்குக் காட்சிதரத் தோன்றி னாரே.

சம்ரட்சணை - பரிபாலனம், காவல்; சந்ததமும் - எப்பொழுதும்; எண்மர் - அட்ட இலட்சுமிகள்; தொந்தம் -- சண்டை; உழுவை - புலி; தந்தி முகன் - யானை முகன்; ஆகுவாகனம் - பெருச்சாளி வாகனம்.

நாடகத்தைக் காத்து நடத்தித்தர கணபதி வருகை புரிந்துள்ளதைப் பற்றிக் கட்டியக்காரன் தெரிவிக்கிறான்.

எப்பொழுதும் எட்டு இலக்குமிகளும் குடி இருக்க, உலகில் உள்ள அனைவரும் மகிழ்வுடன் வாழ்ந்திருக்க, பகை உணர்வு ஏதுமின்றிப் புலியும், பசுவும் ஒரே நீர்த்துறையில் கூடி விளையாட உன்னதமாய் ஆட்சி புரியும் பேரழகு மன்னன் சரபோஜி மீது இயற்றப்பெற்ற குறவஞ்சி ஆகிய இந்த தமிழ் இலக்கியத்தைக் காக்க யானைமுகக் கடவுள் தன்னுடைய பெருச்சாளி வாகனத்தில் ஏறி சபையினர்க்குக் காட்சிதர வேண்டி தோன்றி உள்ளார்.

கணபதி அருள்

மத்தியமாவதி ராகம் - ஆதிதாளம்

பல்லவி

கணபதி வந்தாரே - கருணாகரன் ஆன
கணபதி வந்தாரே

அனுபல்லவி

மணமலர்ச் சோலைசூழ் தஞ்சைச் சரபோஜி
மகராஜன் சபைதனில் அனைவரும் மகிழ்ந்திடக்
கணபதி

சரணங்கள்

ஆகுவா கனர் வந்தார்
அம்பிகை தனயர் வந்தார்
பாகசா தனன் போற்றும்
பாதபங் கயர் வந்தார் -கணபதி-1

வாமன ரூபர் வந்தார்
மகேசுவர புத்ரர் வந்தார்
சோமசே கரர் வந்தார்
சூர்ப்ப கருணர் வந்தார் -கணபதி-2

ஐந்து கரத்தர் வந்தார்
ஆனைமா முகத்தர் வந்தார்
தொந்தி வயிற்றர் வந்தார்
தொழும் ஒற்றைக் கொம்பர் வந்தார்-கணபதி-3

ஆகு-பெருச்சாளி; தனயன்-மகன்; பாகசாதனன்-பாகன் என்ற அசுரனை அழித்த இந்திரன்; பங்கயம்-தாமரை; வாமன ரூபம்-குறுகிய உருவம்; மகேசுவரன்-சிவபெருமான்; சோமன்-சந்திரன், கணபதியும் பிறை சூடியவர் என்று வருணிக்கப் படுவார்; சூர்ப்ப-முறம்; கர்ணம்-காது.

கருணை நிறைந்தவரான கணபதி வந்திருக்கிறார். மணம் பொருந்திய மலர்கள் நிறைந்துள்ள சோலைகளால் சூழப்பெற்ற தஞ்சை நகரினை ஆட்சி செய்யும் சரபோஜி மன்னரின் சபையில் உள்ளவர்கள் அனைவரும் மகிழும்படி கணபதி வந்துள்ளார்.

பெருச்சாளி வாகனத்தைக் கொண்டவரும், உமையின் மகனும், இந்திரன் போற்றும் தாமரைப் பாதங்களை உடையவருமாகிய கணபதி வருகிறார்.

குறுகிய வடிவம் எடுத்தவரும், மகேசுவரனின் மகனும், பிறை நிலவைச் சூடியவரும், முறம் போன்ற காதுகளை உடையவருமான கணபதி வந்திருக்கிறார். ஐந்து கைகளைக் கொண்டவரும், யானை முகம் படைத்தவரும், பெருவயிறு உள்ளவரும், அனைவராலும் வணங்கப்படுபவரும், ஒற்றைத் தந்தம் உடையவருமாகிய கணபதி வந்திருக்கிறார்.

சரபோஜி உலா

வசனம்

அவன், பிறகு மகாராஜாவின் மகிமையினையும், அவர் பவனி வருகின்றதையும் சொல்லுகிறான்.

நேரிசை ஆசிரியப்பா

பார்கொண்ட தென்திசைப் பரதகண் டத்தில்
சீர்கொண்ட சோழத் திருநா டதனில்
திருமகள் இருக்கும் செந்தா மரையாய்
விரவுபா ரதிக்கு வெண்தா மரையாய்
அளவில்செல் வத்தால் அளகைமா நகராய்
உளமகிழ் சிறப்பில் உம்பர்நா டாகி
வேதமும் வேள்வியும் மிகுந்து அயன் உலகாய்
மாதவன் உறைதலின் வள்அவன் பதியாய்ச்
சேவுயர் கொடியோன் திகழ்தலின் கைலையாய்
யாவரும் உறைதலின் எழிற்சிவ புரியாய் *(10)*

மீதலத்து ஓங்கிய விறல்மிகு மதிலும்
பாதலத்து அணுகிய பரவுநீர் அகழியும்
வேதியர் நியமமும் வேந்தர்தம் வீதியும்
பேதம்இல் வணிகர் பின்னவர் தெருக்களும்
மாடமா ளிகைகளும் மகிழ்அர மியங்களும்

நீடுகைத் தந்திகள் நிலவிடும் பந்தியும்
வளர்பரிக் குலங்கள் மருவிடு சாலையும்
அளவில்பல் பண்டத்து ஆவண நிரையும்
விளங்கெழில் தஞ்சை வியன்பதி யிடத்து
வளம்கொள்போ சலகுல வரோதயன்
ஆகிய

மருவுசீர்த் துளசி மன்னன் புத்திரன்
சரபோஜி என்னத் தகும்இயற் பெயரினோன்
ஆகமம் கலைகள் அருமறை புராணம்
பாகுறு மனுநூல் பலவும் நன்கு உணர்ந்தோன்
படைகுடி கூழ் அமைச்சுப் பகர்ந்திடு நீதி
நட்புஅரண் இவற்றின் நயந்திடும் சிறப்பினோன்
கொடையினில் முகில்அலை கொண்டிட
அலைத்துத்
திடமதில் மேருவைச் சிரம்குனி வித்து
வேள்வியில் சதமகன் வெள்கவிண் அடக்கிக்
கேள்வியில் அனந்தனைக் கீழ்படச்செய்து

வடிவினில் சிலைக்கை மதனனை மறைத்துத்
தடையிலாது உயிர்க்கெலாம் தண்ணளி புரிந்து
புகல்அரி யணைமிசைப் பொருந்துவீற் றிருந்து
மகிதலம் புரப்பவன் மன்னவர் பெருமான்
உலகமன் னவர்கள் உற்றுஎதிர் பணிய
நலமுறு காசி நண்ணிஒண் கங்கை
மென்புனல் படிந்து விச்சுவ நாதன்
தன்பத பங்கயஞ் தனைஎதிர் பணிந்து
வேண்டிய வரங்கள் விருப்புடன் ஏற்று
நீண்டிடும் மகிழ்ச்சி நிலவுற வந்தோன்.

பொன்னெடுந் தேர்களும் பொருந்துகுஞ்
சரங்களும்
பன்உயர் பரிகளும் பதாதியும் சூழ
மன்னவர் குழுவும் மந்திரத் தலைவரும்

தன்நிகர் மந்திரி தந்திரக் கணமும்
சேனைத் தலைவரும் செறிந்திடும் நண்பரும்
தானா பதிகளும் தன்புடை நெருங்கத்
தூரியம் முழங்கத் துலங்குபொன் தொடிக்கை
நாரியர் அளவிலர் நடனம் செய்யப்
பார்எழில் கவரிகள் பாங்கினர் இரட்ட
மேல்உயர் பொற்கால் வெண்குடை நிழற்றக்

கண்கொடு கண்டோர் களிக்கப்
பண்புறு யானைமேல் பவனிவந் தனனே.

பாரதி-கலைமகள்: அளகை - குபேரனின் அளகாபுரி; உம்பர்நாடு - தேவர்நாடு, அமராபதி; அயன் - பிரமன்; சேகாளை; மீதலம் - மேலுலகம்; வணிகர் பின்னவர் - வேளாளர்; அரமியம் - நிலா முற்றம்; நீடுகை - நீண்ட துதிக்கை; தந்தி -- யானை; பந்தி - வரிசை; பரிக்குலம் - குதிரைக் கூட்டம்; ஆவண நிரை - கடைகளின் வரிசை; வரோதயன் - வரத்தால் உதித்தவன்; துளசி மன்னவன் - சரபோஜியின் தந்தை துளஜா; பாகு - பாகுபாடு; கூழ் - உணவு; சதமகன் - இந்திரன்; வெள்க-வெட்கமடைய; அனந்தன் - ஆதிசேடன்; சிலை-(கரும்பு)வில்; மதனன் - மன்மதன்; தண்ணளி - கருணை; புகழ் - பேச, புகழ; குஞ்சரம் - யானை; பரி - குதிரை; பதாதி - காலாட்படை; மந்திரம் - ஆலோசனை; தந்திரக்கணம் - படைகளின் கூட்டம்; தானாபதி - நிதித்துறையினர்; துரியம் - இசைக்கருவிகள்; தொடி - பெண்கள் மேற்கையில் அணியும் அணிகலன்; கவரி - சாமரம்; இரட்ட - விசிற;

உலகின் தென்திசையில் பாரத கண்டத்தில் உள்ள சிறப்பு மிகுந்த சோழநாட்டில் திருமகள் குடியிருக்கும் செந்தாமரை மலர் போலவும். கற்றோர் நாவில் பொருந்திய கலைமகள் வாழும் வெண்தாமரை போலவும், செல்வம் மிகுந்து இருப்பதால் குபேரனின் அளகாபுரி நகர் போலவும், வாழ்கின்ற மக்கள் அனைவரும் மகிழ்ச்சி பொங்கும் உள்ளத்தோடு இருக்கும் சிறப்பினால் தேவர் நாடாகிய அமராவதி போலவும், வேத ஒலிகளும், யாகங்களும்

நிறைந்திருப்பதால் பிரமனுடைய உலகம் போலவும், திருமால் இருந்து காவல்புரிவதால் வைகுந்தம் போலவும், இடபக் கொடியினை உடைய சிவபெருமான் கோயில் கொண்டி ருப்பதால் கைலாயம் போலவும், அனைவரும் விருப்பத்துடன் வாழ்வதால் அழகு மிகு சிவபுரமாகவும் விளங்குகிறது தஞ்சை நகரம்.

மேலும், விண்ணுலகு வரை ஓங்கி உயர்ந்துள்ள கோட்டை மதில், பாதாளம் வரை செல்லக்கூடிய ஆழமான அகழி, வேதம் ஓதிடும் அந்தணர்கள் வாழ்கின்ற வீதி, வேறுபாடில்லாத நேர்மை உணர்வு கொண்ட வணிகர்கள் வாழும் வீதி, வேளாளர் பெருமக்கள் வாழ்கின்ற தெருக்கள், மாடமாளிகைகள், மக்கள் இருந்து மகிழும் நிலா முற்றங்கள், நீண்ட துதிக்கைகள் கொண்ட யானைகளின் வரிசை, நன்கு பராமரித்து வளர்க்கப்படும் குதிரைக் கூட்டங்கள் நிறைந்துள்ள சாலை, பலவகைப் பொருட்களும் அளவின்றி குவித்து வைக்கப்பட்டுள்ள வரிசையான கடைவீதிகள் ஆகியவற்றைக் கொண்டு விளங்குகின்ற அழகு மிக்க பெருநகரம் தஞ்சையாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த தஞ்சை மாநகரில் வளம் நிறைந்த போசல மன்னர் குலம் செய்த தவப்பயனால் விளைந்த வரமாக வந்து உதித்தவர் பெருமை பொருந்திய துளஜாஜி மன்னர். அவருடைய மகன் சரபோஜி என்று பெயர் சூட்டப்பெற்றார். அவர் ஆகமங்கள், அருங்கலைகள், மனுதர்மம், புராணங்கள் போன்றவற்றை நன்கு கற்று உணர்ந்தவர். குடி, படை, உணவு, அமைச்சர்கள், நீதி நெறிமுறைகள், நல்ல நட்பு, பாதுகாவல் அரண்கள் என அனைத்தையும் கொண்டு சிறந்து விளங்குபவர்.

தன்னுடைய கொடைத்திறத்திற்கு நாணப்பட்டு மேகங்கள் வருந்தி அலையும்படி செய்து, தன்னுடைய

திடத்தைக் கண்டு வெட்கப்பட்டு மேருமலை தலை வணங்கும்படி செய்து, தான் நடத்துவித்த அளவற்ற யாகங்களைக் கண்டு, ஆயிரம் யாகங்கள் செய்தவனான இந்திரன் வெட்கப்பட்டு விண்ணுக்குள்ளேயே அடங்கிக் கிடக்கும்படி செய்து, தன்னுடைய கேள்விப் புலமையால் ஆயிரம் தலைகளிலும் காதுகளை உடைய ஆதிசேடன் நாணிப் பூமிக்குக் கீழே மறைந்து கொள்ளச்செய்து, கரும்பு வில் தாங்கிய மன்மதன் தன்னுடைய வடிவழகு கண்டு நாணி உருவமற்று மறையும்படி செய்து, அனைத்து உயிர்களுக்கும் குறைவின்றி கருணைபுரிந்து, மக்கள் புகழ்ந்து பேசச் சிங்காதனத்திலே அழகு பொங்க வீற்றிருந்து இந்த உலகினைக் காப்பவர் மன்னர் சரபோஜி.

உலகத்தில் உள்ள மன்னர்கள் எல்லோரும் எதிர்வந்து பணிய, தெய்வீக நலம் பொருந்திய காசிக்குச் சென்று ஒளி நிறைந்த கங்கை ஆற்றின் மென்மையான நீரில் நீராடி, விசுவநாதக் கடவுளின் குளிர்ந்த தாமரை மலர் போன்ற பாதங்களை வணங்கி தான் கேட்ட வரங்களைப் பெற்றுப் பெரும் மகிழ்ச்சி நிலவ வந்தவர், பொன்னால் செய்யப்பெற்ற பெரிய தேர்களும், படையில் பொருந்திய யானைகளும், பல உயர்ந்த குணம் கொண்ட குதிரைகளும், காலாட்படை களும் சூழ்ந்திருக்க மன்னர்களும், ஆலோசனை வழங்கும் கூட்டத்தினரும், அறிவால் சிறந்த அமைச்சர்களும், படைகளின் அணிகளும், படைத்தலைவர்களும், நெருங்கிய நண்பர்களும், பொருளாதார வல்லுநர்களும் தன் அருகே நெருங்கி வர, இசைக்கருவிகள் ஒலி எழுப்ப, ஒளிபெற்று விளங்கும் பொன்னாலாகிய தொடியினை அணிந்த மங்கையர் நடனமாட, பால் நிறத்திலான வெண்மையான கவரிகளைக் கொண்டு சேடிப்பெண்கள் காற்று வரும்படி வீச, தலைக்கு மேலே பொன்னால் ஆன உயரமான காம்பை உடைய வெண்கொற்றக் குடை நிழல் தர, பார்த்தோர் மகிழும்படியான உயர் பண்பமைந்த யானை மேல் சரபோஜி உலா வந்தார்.

மதனவல்லி வருகிறாள்

வசனம்

இப்படி மகராஜா பவனி வருகின்ற பொழுது, மோகினி வந்து அவரைக் கண்ட செய்தியைச் சொல்லுகிறான்.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தரணி புகழ்ந் திடும்தஞ்சைச் சரபநரேந்
திரன்பவனி தன்னைக் கண்டு
வரியளிசூழ் மலர்க்கூந்தல் மதனவல்லி
எனும்ஒருமின் மறுகி னூடே
பெருமயலும் கிறுகிறுப்பும் கொண்டுஅந்த
மன்னவனைப் பின்தொ டர்ந்து
மருவுதற்குக் காதல்கொண்ட வகைசொல்வேன்
எவர்களுக்கும் வகை சொல்வேனே.

சரப நரேந்திரன் - சரபோஜி மன்னன்; வரிஅளி - வரியுள்ள வண்டு; மின் - மின்னல்; மறுகு - வீதி; மருவுதல் - தழுவுதல்;

உலகம் புகழும் தஞ்சை மாநகர் சரபோஜி மன்னன் உலா வருவதைக் கண்டு, வரிவண்டு மொய்க்கும் மலர்க் கூந்தலைக் கொண்ட, மின்னலைப் போன்ற மதனவல்லி என்னும் மங்கை வீதியிலே பெரும் மையலும், உள்ளக் கிறுகிறுப்பும் கொண்டு அவரைப் பின்தொடர்ந்து சென்று தழுவுவதற்குக் காதல் கொண்ட தன்மையினை அனைவருக்கும் விளங்கும் விதத்தில் சொல்வேன் என்கிறான் கட்டியக்காரன்.

மதனவல்லியின் அழகு

ஆகிரி ராகம் - சாபு தாளம்

அந்த மதனவல்லி
வண்டைநாண் கொண்டிடச் செய் ஓதியாள் - பாரில்

அங்கனையார் தங்களில்உத்
துங்கமுறு பதுமினிச் சாதியாள் -1

கந்தமலர்க் காந்தளினை
முந்துமலை ஏறவைத்த கையினாள் - மாற்றில்
கனத்த கனகத்தைமேல்
அடித்துப் பணிசெயச்செய் மெய்யினாள் -2

தங்கமுலைப் பம்பரத்தை
அம்புவிமீது ஆட்டிடும்மா தங்கமே - இடை
சாயலுறும் நல்துடியை
வாயில்அறை வித்திடும்ஓர் சிங்கமே -3

புங்கமுறும் அம்புயத்தைப்
பங்கமுற்ற தென்னஒளிர் முகத்தினாள் - வரனில்
பொலிந்திலங்கு வெண்பிறையைக்
களங்கமுற்ற தென்றுஓது நகத்தினாள் -4

கண்டோர் மனத்தைத்தன்
சுழிக்குள் அழுத்திடும் உந்தியாள் - கொங்கைக்
களிற்றுத் தறிஎன்ன
வயிற்றின்மேல் உரோம பந்தியாள் -5

விண்டிடும் கன்னலைச்
சாறு பிழிந்திடும் தோழினாள் - மாவின்
விளங்கும் தளிர்கண்டு
பயந்துஅங் கிருக்கச்செய் தாளினாள் -6

மருவுற் றிடும்குமிழை
வனத்தில் ஒதுக்குவித்த மூக்கினாள் - இந்த
வையத்து இராஅமுதம்
வானத்து ஒளிக்கவைத்த வாக்கினாள் -7

தருமன் எனக் கூற்றை
எவரும் சொலக்கூர்த்த நயனத்தாள் - தஞ்சைச்
சரபோஜி நரபாலர்
கருணை தனக்கேற்ற வயனத்தாள் -8

ஓதி-கூந்தல்; அங்கணையார் - பெண்கள்; உத்தங்கம்-உயர்ந்த; பதுமினி - உத்தமசாதிப்பெண்; கந்தம் - மணம்; மாற்று - பொன்னின் தூய்மை அளவு; கனகம் - பொன்; பணி - வேலை, நகை; மெய் - உடல்; அம்புவி - அழகிய தரை; மாதங்கம் - மாதின் அங்கம்; (யானை முலைக்கு உவமை); துடி-உடுக்கை வடிவிலான இசைக்கருவி; இது இடைக்கு உவமை; துடியின் வாய் - அறைந்து முழக்கப்படும் இருபக்கங்கள், தோலினால் ஆனவை; அறைதல் - அடித்தல்; சிங்கம் - பார்ப்பவரை அழகால் அச்சுறுத்துவதால், இடைக்கு உவமை.

புங்கம் - மேன்மை; அம்புயம் - தாமரை; பங்கம் - சேறு பட்டதால் ஏற்பட்ட குறை; உந்தி - தொப்பூழ்; களிற்றுத்தறி-ஆண் யானைகளைக் கட்டி வைக்கும் தூண்கள்; உரோம பந்தி-மயிர்வரிசை; விண்டு -' ஒடித்து; கன்னல் - கரும்பு; பயந்து-- பசந்து; தாள் - கால்; குமிழமலர் - ஒரு காட்டு மலர், இது மூக்கிற்கு உவமை; வையம் - உலகம்; கூர்த்த நயனம் - கூர்மையான கண்; நரபாலர் - மக்களைக் காப்பவர், மன்னர்; வயனம் - வசனம், வார்த்தை.

அந்த மதனவல்லி என்னும் நங்கை தன் கூந்தலின் அழகு கண்டு வண்டுகளை நாணம் கொள்ளச் செய்வாள். உலகில் உள்ள பெண்களில் உயர்ந்த சாதியாகிய பத்மினி என்னும் வகையினாள்.

மன்மதனின் வில் கரும்பு. அந்த வில்லின் நாண் வண்டு. மதனவல்லியின் கூந்தல் கருமை கண்டு வண்டு நாணியது எனவும், மன்மதனின் வில்லுக்கு நாணாகி விட்டது என்பதும் சிலேடை.

மணம் நிறைந்த காந்தள் மலர்கள், அவள் கை விரல்களின் அழகுக்கு ஈடில்லை என்று நாணத்தால் ஒன்றையொன்று முந்திக்கொண்டு, உயர்ந்து நிற்கும் மலைகளின் மீது ஏறி மறைந்து கொள்ளச் செய்த கைகளை உடையவள். மாற்றுயர்ந்த பொன் அவளின் மேனி அழகிற்கு இணையாகாது. அதனாலேயே பொன் பொற்கொல்லனின் உலைக்களத்தில் அடிக்கப்பட்டு அணிகலன்களாகிறது.

காந்தள் மலர் மலைமேல் இருப்பதும், பொன் உலையிலிடப்பெற்று அணியாவதும் இயற்கை. மதன வல்லியின் கைகளுக்கும், மெய்க்கும் ஆற்றாது அவை அப்படியாயின என்பது தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

தங்கநிற முலைகளுக்கு ஒப்பாகாமையால் பம்பரத்தை அழகிய தரையின் மீது ஆட்டிவிடுகின்றது அப்பெண்ணின் அழகிய அங்கம். தன்னைப் போலிருக்கும் துடி தனக்கு ஈடின்மையால் இடை அதனை வாயில் அடிபடச் செய்கிறது.

பம்பரம் முலைக்குத் தோற்றதால் தரையில் ஆட்டப் பெறுகிறது எனவும், இடைக்குத் தோற்றதால் துடி வாயில் அறைப்படுகிறது எனவும் கூறுதல் தற்குறிப்பேற்ற அணி.

மேன்மையான தாமரை இவளின் முக ஒளிக்குத் தோற்றதால் சேறுபட்டது என்று கூறத்தக்க ஒளி பொருந்திய முகத்தை உடையவள். இறைவன் வரத்தினால், பொலிவுடன் விளங்கும் பிறை நிலவைக் களங்கமுடையது எனக் கூற வைக்கும் அழகிய நகத்தினை உடையவள்.

தாமரை சேற்றினால் குறைவடைந்ததும், பிறை நிலவு களங்கமுற்று தோன்றுவதும் இவளின் அழகுக்குத் தோற்றதால் என்பது தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

அவளுடைய தொப்பூழின் அழகு, காண்பவர்களின் மனத்தைத் தன் வயிற்றின் நாபிச் சுழியில் அழுந்தி மயங்கிடச் செய்யும் தன்மை கொண்டது. கொங்கைகளாகிய வலிய யானைகளைக் கட்டும் தறிபோல, வயிற்றின் மேல் மயிர் வரிசையை உடையவள்.

ஒடித்துச் சுவைக்கப்படும் கரும்பு தனக்கு ஒப்பில்லை என்று நசுக்கிச் சாறு பிழியப்படுவதற்குக் காரணமான தோள்களை உடையவள். அவளுடைய பாத அழகு கண்டு

அஞ்சி, மாமரத்தில் அழகுடன் விளங்கும் இளந்தளிர்கள் மரத்திலேயே இருந்து விடும்படிச் செய்யும் மென்மையான பாதங்களை உடையவள்.

கரும்பு சாறு பிழியப்படுதலும், மாந்தளிர் பசுமையாய் மரத்தில் இருப்பதும் மதனவல்லியின் தோளுக்கும், தாளுக்கும் தோற்றதால் என்பது தற்குறிப்பேற்றம் ஆகும்.

மணம் மிக்க குமிழ மலர் இவளுடைய மூக்கின் அழகிற்கு ஈடாக முடியாததால், அவை காட்டில் ஒதுங்கி கிடக்கும்படி செய்த மூக்கினை உடையவள். பூமியில் இருக்க அஞ்சி அமுதம் வானத்திலேயே நாணி ஒளிந்து கொள்ளும்படி செய்த வாக்கினை உடையவள்.

குமிழம்பூ காட்டிலிருப்பது இவள் மூக்கின் அழகிற்கு தோற்றதாலும், அமுதம் பூமிக்கு வராதிருப்பது இவள் வாக்கிற்குத் தோற்றதாலும் என்பது தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

தன்னைக் காண்பவர்கள் உயிரையே உண்ணும் தன்மையில் இவளுடன் ஒப்பிடுகையில், உண்மையிலேயே உயிரைப் பறிக்கும் எமனே நல்லவன் என்று சொல்லலாம் அத்தகு கண்களை உடையவள். தஞ்சை நகரத்தில் இருப்பவரும், மக்களைக் காப்பவருமான சரபோஜி மன்னரின் கருணையை ஒத்த இனிய வார்த்தைகளைக் கொண்டவள்.

மதனவல்லி பந்தாடுதல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அந்தமிகும் மதனவல்லி தஞ்சைவளர்
சரபோஜி அண்ணல் மீதே
சந்தமுறும் கவிப்புலவர் உரைத்தபுகழ்க்
கவிகள் தமைத் தடங்கொள் வீணைத்

தந்திரியின் உறப்பாடிச் செங்கைவளை
கலகலெனத் தனது கொங்கைச்
சுந்தரம்கொள் கந்துகத்தை எடுத்தடித்து
விளையாடத் தொடங்கி னாளே.

சந்தம்-அழகு; வீணைத் தந்திரி-வீணையின் நரம்புகள்; சுந்தரம்-அழகு; கந்துகம்-பந்து;

நிரம்பிய அழகு பெற்ற மதனவல்லி தஞ்சை நகரில் வாழ்கின்ற தலைவனாகிய சரபோஜி மன்னர் மேல் சந்தப் புலமை மிக்க புலவர்கள் பாடிய புகழ்பெற்ற பாடல்களைப் பெரிய வீணையின் நரம்புகளுடன் பொருந்தப் பாடிய வண்ணம் தன்னுடைய சிவந்த கைகளில் அணிந்து இருந்த வளையல்கள் கலகலவென ஒலிக்கத் தன் முலைகளைப் போல அழகு கொண்ட பந்தை எடுத்து அடித்து விளையாடத் தொடங்கினாள்.

சரபோஜி உலா வருவதை

மதனவல்லி காணல்

ஏந்தெழிலார் மதனவல்லி எடுத்தடிக்கும்
கந்துகம்ஏந் திழையார் முன்னம்
கூந்தலினை அவிழ்த்து ஆடை நெகிழ்த்துமணி
வடம்சிதறக் கொங்கை சேர்ந்து
காந்தன்இயற் றிடும்செய்கை செய்தல் கண்டு
வெட்கி அதைக் கைவிட்டு ஆங்கே
வாய்ந்தநெடு வீதியுற்றாள் சரபநரேந்
திரன்பவனி வரல்கண் டாளே.

காந்தன் - கணவன்; நரேந்திரன் - மன்னன்; பவனி-உலா;

உயர்ந்த, பேரெழில் நிறைந்த மதனவல்லி கையி லெடுத்து அடித்து விளையாடும் பந்து, அங்கிருந்த அணிகலன்

பூண்ட மங்கையரின் முன், அவள் கூந்தலை அவிழச் செய்து, ஆடைகளை நழுவ வைத்து, அவள் கழுத்தில் அணிந்திருந்த மணிமாலைகள் அறுந்து சிதற அவை மார்பில் பட்டுக் காதல் கணவன் செய்யும் செயல்களைச் செய்ததால் வெட்கம் அடைந்து, பந்து ஆடுவதை விட்டுவிட்டு அந்த வீடு இருந்த பெருவீதிக்கு வந்தாள். அங்கே சரபோஜி மன்னன் பவனி வருவதைக் கண்டாள்.

உலாவரும் தலைவனைக் கண்டு மதனவல்லி மையல் கொள்ளல்

சௌராட்டிர ராகம் - மிசிர தாளம்

பல்லவி

மோகினி வந்தாள் - அதிரூப
மோகினி வந்தாள்

அனுபல்லவி

வாகு பெறும்உயர் தஞ்சைச் சரபோஜி
மன்னர் தமைக்கண்டு முன்னம் மயல்கொண்ட
-மோகினி

சரணங்கள்

பனிமதி நுதலில் வசிகர திலகம்
முனிவரரு மனம் உருக ஒளிதரக்
கனதனம் மருவு தரள மணிவடம்
மலையின் இழிதரும் அருவி தனைநிகரவே
-மோகினி-1

மகரம் இலகிய துவசன் ரதிஎனும்
வடிவ வனிதையின் அதிகம் இவள்என

அகமதில் எணிஅடி மயிலே குயிலே
அடிமை வருவன்எனப் பிறகே தொடர்ந்திடவே
-மோகினி-2

கமலை இவள்என உருவசி எனநீள்
கயல்விழி மேனகை ஆம்இவள் எனவே
அமரர் மேச்சு திலோத்தமை எனவந்து
அவனியின் உலவும் ஒருமின்னல் எனவே
-மோகினி-3

வாகு - அழகு; மயல் - மையல், காதல்; மதி - நிலவு; நுதல்-நெற்றி; திலகம் - பொட்டு; முனிவரர் - முனிவர்கள்; தனம்--முலை; தரளம் - முத்து; இழிதரும் - விழும், இறங்கும்; துவசம்-கொடி; கமலை - இலட்சுமி; உருவசி - ஊர்வசி; மேச்சு-மெச்சும், பாராட்டும்; அவனி - உலகம்.

அதிரூப சுந்தரி மோகினி போன்ற அழகு கொண்ட மதனவல்லி வந்தாள்.

அழகு நிறைந்த உயர்ந்த தஞ்சை நகர மன்னன் சரபோஜியை முன்பே கண்டு காதல் கொண்ட மதனவல்லி வந்தாள்.

குளிர்ச்சி பொருந்திய நிலவு போன்ற நெற்றியில் கவர்ச்சியான பொட்டுடன், உலகப் பற்றினைத் துறந்த முனிவர்களும் அவளின் அழகினைக் கண்டு மனம் உருக, பெரிய மார்பில் பொருந்திய ஒளிமிக்க முத்துமணி மாலை மலையிலிருந்து விழுகின்ற அருவியினை ஒத்து விளங்க மதனவல்லி வந்தாள்.

மகரமீன் விளங்கும் கொடியினை உடையவனாகிய மன்மதன் ரதி என்னும் அழகு நிரம்பிய மங்கையை விட,

மதனவல்லியே அதிக எழில் உடையவள் என மனத்தில் எண்ணி மயிலே, குயிலே, நான் உன் அடிமையாக இருப்பேன் என்று பின் தொடர்ந்து வர அவள் வந்தாள்.

மதனவல்லி, திருமகள் போலவும், ஊர்வசி போலவும், நீண்ட கயல்விழியினை உடைய மேனகை போலவும், தேவர்கள் மெச்சக்கூடிய திலோத்தமை போலவும், பூமியில் இறங்கி வந்து உலவும் மின்னல் போலவும் வந்தாள்.

மன்மதனின் மலர் அம்பு

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தங்குபெருந் திறல்வீரர் சேனைக்கா
வலர்களொடு தானும் ஓர்பால்
மங்கையர்சே னாபதியாய்ச் சேவித்து
வரும்மதனன் மதன வல்லி
எங்கள்உயர் தஞ்சைநகர்ச் சரபோஜி
மன்னவன்தன் எழிலை நோக்கித்
துங்கமனத் திடைக்காதல் கொண்டிடுமுன்
மலர்வாளி சொரிந்திட் டானே.

திறல் - வலிமை; துங்க - உயர்வான; வாளி - அம்பு;

பெரும் வலிமையுள்ள வீரர்கள், படைக்காவலர்கள் ஆகியோருடன் ஒருபக்கமிருந்து, பெண்கள் தங்கள் சேனாபதி என்று வணங்கும் மன்மதன், எங்களின் உயர்ந்த தலமான தஞ்சை நகர் சரபோஜி மன்னனின் அழகினைக் கண்டு மதனவல்லி உயர்வான தன் மனத்தில் காதல் கொள்வதற்கு முன்னோடியாக மலரம்பை எய்தான்.

தோழியர் உபசாரம்

வசனம்

மகராஜனைக் கண்டு மோகித்த மோகினி மன்மத அம்பினாலே வருந்துவதைக் கண்டு தோழியர்கள் அவளுக்கு சீதள உபசாரம் செய்தார்கள்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

மதனன்விடும் மலர்க்கணையால் துயரம் மேவும்
மதனவல்லி தனைச்சூழ்ந்துஓர் மனைக்குள் சேர்த்து
விதமுறுநல் விளவாழைக் குருத்தைப் பாய்மேல்
விரித்து அதனில் படுக்கவைத்துப் பனிநீர் தொட்டு
வதனமதைத் துடைத்து இலகுதுகிலால் காற்று
வரவீசிச் சிறிதளவு தோற்றச் செய்தார்
இதமுறுசீர்ச் சரபோஜி மன்னன் தஞ்சை
யிடத்தில்அவள் காமனைப்பார்த்து இதுசொல் வாளே.

மன்மதன் விட்ட மலரம்பால் தாக்குண்டு துயரமுற்ற மதனவல்லியை அவள் தோழியர் சூழ்ந்து ஒரு வீட்டினுள் கொண்டு சென்று நல்ல இளவாழைக் குருத்து இலையினைப் பாய்மேல் விரித்து, அதில் படுக்கவைத்து, குளிர்ந்த நீரால் அவள் முகத்தைத் துடைத்து, மெல்லிய ஆடையால் விசிறிச் சிறிது உணர்வு வரச் செய்தார்கள். இதமும் சிறப்பும் நிறைந்த சரபோஜி மன்னனின் தஞ்சையில் மதனவல்லி மன்மதனைப் பார்த்துப் பின்வருமாறு பேசலானாள்.

மன்மதனைப் பழித்தல்

பந்துவராளி ராகம் - திச்ர தாளம்

கண்ணிகள்

பிரபவன் ஆகிப் பிர
ஜோற்பத்தி செய்கின்ற மன்மதா - இன்று
பேதையேன் என்னைப்
பரிதாபி ஆக்கல்என் மன்மதா ! -1

பரவும் கடலினைத்
துந்துபி யாய்க் கொண்ட மன்மதா - நீயும்
பாவைமார் களுக்குவி
விரோதிஆ யினதென்ன மன்மதா ! -2

வானின்மேல் கோடும்துன்
மதியைக் குடைஆக்கி மன்மதா - காற்றாம்
வடக்கோடும் நேர்கொண்டாய்
இதுஎன்ன காலயுத்தி மன்மதா ! -3

மீனகே தனத்தினால்
விஜயம் பெறலாமோ மன்மதா - யார்க்கும்
விகுர்திஆ காதிருந்தால்
மிகவும் ஜயமாமே மன்மதா ! -4

தேனார் மலர்அம் பால்
ஆனந்தம் அடைகின்றாய் மன்மதா - சீறும்
திறஅம்பொன்று உளதாயின்
பிரமாதி ஆவையே மன்மதா ! -5

மான்ஒர் கரம்உற்ற
ஈச்வரன் முன்னாளில் மன்மதா - உன்னை
வாட்டிய காலையில்
காட்டும் குரோதிஅல்லை மன்மதா ! -6

தெரியும்இவ் வுலகத்தில்
ஏவலர்கீ லகத்தினால் மன்மதா - என்மேல்
சித்திர பானுவைப்போல்
மெத்தவும் காய்கிறாய் மன்மதா ! -7

சரபோஜி மகராஜா
தமைநான் மருவச்செய் மன்மதா - நீ
சருவஜித்து ஆகிமேல்
அக்ஷயன் ஆகுவாய் மன்மதா ! -8

பிரபவம்-புகழ்; பிரஜை-மக்கள்; கேதனம்-கொடி; விகுர்தி-வேறுபாடு; பிரமாதி-மிக வலிமை உடையவன்; மான் கரம் உற்றது-சிவபெருமானை அழிக்கத் தாருகாவனத்து முனிவர்கள் அனுப்பிய மானை ஈசன் தன்கையில் பிடித்துத் தாங்கிக்கொண்டார்; ஏவர்-எவர்; கீலகம்-கலகம்; சித்திரபானு-நெருப்பு; சருவஜித்-அனைத்தையும் வெல்பவன்; அட்சயன்-அழிவற்றவன்;

பெரும் புகழுடையவனே! மக்களை உற்பத்தி செய்கிறவனே! மன்மதனே! இன்று பேதைப் பெண்ணாகிய என்னைப் பரிதாபத்திற்குரியவள் ஆக்கியதேன் மன்மதா? பரவிக்கிடக்கும் கடலை முரசாகக் கொண்ட மன்மதனே! நீ பெண்களுக்கு எதிரியாக இருப்பதேன்?

காதலால் தவிக்கின்ற பெண்களுக்கு, வானத்தின் மேல் மேற்கு நோக்கி ஓடி கேடு செய்யும் நிலவினைக் குடையாகக் கொண்டுள்ள மன்மதா! தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வீசும் தென்றல் காற்றை உன் தேராகக் கொண்டிருக்கிறாயே! இது மங்கையருக்குத் துன்பம் விளைக்க நீ செய்கின்ற எந்தக் காலத் தந்திரம் ?

மீன் கொடியைக் கொண்டிருப்பதால் வெற்றி பெற்று விடுவாயோ மன்மதா? யாரிடமும் மன வேறுபாடு இல்லாமல் இருந்தால் மிகவும் வெற்றியாகுமே ?

தேன் நிறைந்த மலர் அம்பு கொண்டிருப்பதால் மகிழ்ச்சி அடைகின்ற மன்மதனே ! சீறிச்செல்லும் அம்பு ஒன்றும் இருந்துவிட்டால் நீ மிகப்பெரியவனாகி விடுவாயே !

தன்னுடைய ஒரு கையினில் மானை ஏந்தி இருக்கும் சிவபெருமான் முன்னொரு காலத்தில் நெற்றிக்கண் நெருப்பால் உன்னை வாட்டிய போது நீ கொண்ட பகைக்கு உரியவள் நான் இல்லையே மன்மதா ?

கண்ணுக்குத் தெரிகின்ற இவ்வுலகில் யார் செய்த கலகத்தால் என்மேல் நெருப்பைப்போல் நிரம்பத் தகிக்கிறாய் மன்மதா? நான், சரபோஜி மன்னனை அணையச் செய் மன்மதா? அப்படிச் செய்தால் நீ அனைத்தையும் வெற்றி கொண்டு அழிவற்றவன் ஆவாய்.

இக்கண்ணிகளில் பிரபவ முதல் அட்சய முடிய பிரஜோற்பத்தி, மன்மத, பரிதாபி, துந்துபி, விரோதி, துன்மதி, விஜய, விகுர்தி, ஜெய, ஆனந்த, பிரமாதி, ஈச்வர, குரோதி, கீலக, சித்திரபானு, சர்வஜித் ஆகிய தமிழ் ஆண்டுகளின் பெயர்கள் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

சந்திரனைப் பழித்தல்

வசனம்

இப்படியாக மன்மதனைப் பார்த்துச் சொன்ன பிறகு, சந்திரனைப் பார்த்துச் சொல்கிறாள்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஒண்முகில்போல் உதவுசர போஜி மன்னன்
உள்ளமகிழ்ந் துறைதஞ்சை யிடத்து மேவும்
தண்ணறுங்கோங்கு அரும்பென்னக் கமலம் என்னத்
தகுமடம் எனச்செம் பொன்கும்பம் என்ன

வண்ணமலை எனமுளைத்துப் பிணைத்தெ ழுந்து
வயங்குமணி வடம்சுமந்து நெருங்கும்
கொங்கைப்
பெண்அமுதம் அனையவள்விண் மதியை நோக்கிப்
பேசுவாள் இந்தவகை ஏசுவாளே.

ஒளி பொருந்திய மேகத்தினைப் போல இரவலருக்கு வழங்கி உதவி செய்யும் சரபோஜி மன்னன் உள்ள மகிழ்ச்சியுடன் வாழும் தஞ்சையில் வசிப்பவளும், குளிர்ச்சியும் நறுமணமும் நிறைந்த கோங்கமலர் அரும்பு எனவும், தாமரை எனவும், பொருத்தமான மகுடம் எனவும், செம்பொன் குடம் எனவும், அழகியமலை எனவும் கூறும்படி முளைத்துப் பருத்து எழுந்து, அழகிய மணி மாலைகள் அணிந்து நெருங்கி இருக்கும் முலைகளைக் கொண்டவளுமான பெண் அமுதம் அனைய மதனவல்லி சந்திரனைப் பார்த்துப் பின்வருமாறு பேசலானாள்.

மதியில்லா மதியே

பிலகரி ராகம் - திச்ர தாளம்

கண்ணிகள்

மதனன் குடையாகி
மடவாரை வாட்டவந்த மதியே - உனக்கோர்
மதியிருந் தால்அலவோ
அறிவாய்இப் போதுநீ மதியே ! -1

அதிரூப ஆண்என்றும்
பெண்என்றும் உனைச்சொல்வார் மதியே - பார்த்தால்
ஆண்அல்லை பெண்அல்லை
அலியாய் இருக்கின்றாய் மதியே ! -2

சதுரன்நீ என்றுரைத்தார்
விருத்தனாய் இருக்கின்றாய் சசியே - பாம்பின்

தன்வாய்ப் படும்துயரம்
சற்றும் நினைக்கிலையே சசியே ! -3

அதன்மம் எவர்க்காகும்
அதுநின் னிடத்துஉளதால் சசியே - தெய்வம்
அந்தரத்தில் விட்டதுன்னை
இந்தவாறு அலைந்திடு என்று சசியே ! -4

மருவஎன்னை மயக்கிஉன்
வசம்செய்யப் பார்க்கிறாயோ இந்துவே-தேவர்
மந்திரியின் மனையாளால்
வந்தகுறை போதாதோ இந்துவே ! -5

உருவில் கறுப்பைஇந்த
உலகம் மான் என்றல்பொய் இந்துவே - உனக்கு
உள்ளக் கறுப்பல்லவோ
மெள்ளமேல் உதித்ததிங்கு இந்துவே ! -6

அரிவையோடு உதித்தும்பெண்
அருமை அறிந்திலையே வெண்ணிலாவே-எண்ணின்
அதுவும்அல் லாதுஉனக்கு
எதிர்அல்ல வேநானும் வெண்ணிலாவே ! -7

இருநிலம் போற்றும் தஞ்சைச்
சரபோஜி மன்னருடன் வெண்ணிலாவே-நாளை
இருந்திடுவேன் அங்கேவா
விருந்திடு வேன்உனக்கு வெண்ணிலாவே! -8

மதி-நிலவு, அறிவு; அதிரூபம்-பேரழகு; சசி-சந்திரன்; சதுரன்-சதுரவடிவினன், சமர்த்தன்; விருத்தன்-வட்ட வடிவினன், வயது முதிர்ந்தவன்; இந்து-சந்திரன்; அரிவை-பெண்;

மன்மதனுக்குக் குடையாகிப் பெண்களைத் துன்புறுத்த வந்த நிலவே! உனக்கு அறிவிருந்தால் அல்லவோ இன்று என் துயரத்தை நீ அறிவாய். பேரழகு கொண்ட உன்னைச் சில

கவிஞர்கள் ஆண் என்பர். வேறு சிலரோ பெண் என்பார்கள். ஆனால் உன் செயலினைப் பார்த்தால் நீ ஆணும் இல்லை, பெண்ணும் இல்லை, அலிபோல இருக்கின்றாய். ஆண், பெண் இருவர் துயரையும் உணர்ந்து கொள்ளாமல் துன்புறுத்துவ தால் அலி என்று ஏசுகின்றாள்.

சந்திரனே உன்னைச் சதுரன் என்கிறார்கள். நீயோ விருத்தனாய் இருக்கிறாய், ராகு, கேது என்னும் பாம்புகளின் வாயிலினில் சிக்கி நீ அடைந்த துன்பத்தைச் சிறிதும் நினையாது என்னை வருத்துகிறாயே. உன்னை சமர்த்தன் என்கிறார்கள். நீயோ அறிவு குழம்பி வயோதிகனாய் இருக்கிறாய் என்றும் உன்னைச் சதுர வடிவினன் என்று கூற நீயோ வட்டமாய் இருக்கிறாய். சதுரன், விருத்தன் ஆகிய சொற்கள் சிலேடையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

உன்னிடமே அதர்மம் முழுமையாகக் குடிகொண்டு விட்டதால், வேறு யாரிடம் இருக்கும்? அதனால் தான் தெய்வம் உன்னை இப்படி அந்தரத்தில் அலைய விட்டு இருக்கிறது. சந்திரனே, என்னைத் தழுவ ஆசை கொண்டு என் மதியினை மயக்கி உன் வசமாக்கிக் கொள்ளப்பார்க்கிறாயா? தேவர்களுக்கு மந்திரியான வியாழனின் மனைவி தாரையுடன் கள்ள உறவு கொண்டதால் அவரிடம் சாபம் பெற்ற குறை போதாதா?

உன் உள்ளத்தில் இருக்கும் களங்கமே மெள்ள உன் உடலின் மேற்புறத்தில் தோன்றுகிறது. உன் உருவில் காணப்படும் கறுப்பு நிறத்தை உலகினர் மான் என்று கூறுவது பொய். வெண்ணிலவே திருப்பாற்கடலில் இலக்குமி என்னும் பெண்ணோடு நீ உடன் பிறந்திருந்தும் பெண்ணின் அருமையை உணரவில்லை நீ, அதுவுமின்றி நான் உனக்கு எதிரியும் இல்லையே!

இருநிலம் போற்றும் தஞ்சை அரசர் சரபோஜியுடன் நாளை நான் இருப்பேன். அப்போது அங்கே வா, நான் உனக்கு விருந்து வைக்கிறேன். வெண்ணிலவே.

தென்றலைப் பழிக்கிறாள்

வசனம்

இப்படிச் சந்திரனைப் பார்த்துச் சொல்லி பிறகு, தென்றலைப் பார்த்துச் சொல்லுகிறாள்.

வெண்பா

வென்று மதவேளை விண்மதியை நோக்கிமனம்
கன்றி வெறித்துரைத்த காரிகையாள் - பின் தொடர்ந்து
தென்றலை நோக்கித் தியங்கி உரைக்கின்றாள்
என்றனை வாட்டுதல்ஏன் என்று.

மதவேள்-மன்மதன்; தியங்கி-வருந்தி;

வெற்றி பொருந்திய மன்மதனையும், வானில் உலவும் நிலவினையும் நோக்கி மனம் வருந்திக் கோபத்துடன் உரைத்த மதனவல்லி, பின்னர் தென்றலை நோக்கி ஏன் என்னை வாட்டுகிறாய் என்று வருந்திக் கேட்டாள்.

நேர்மை அறியாத தென்றலே

காம்போதி ராகம் - ஆதி தாளம்

கண்ணிகள்

கந்தமிகும் சந்தமல
யந்தனில் இருந்துவந்தாய் தென்றலே - தமிழ்க்
காரிகையின் சீர்மைஉறு
நேர்மைஅறி யாததுஎன்னே தென்றலே -1

மந்தமுறு மாருதமாய்
முந்தியெல்லாம் நின்றனையே தென்றலே-வந்து
மண்டுபிர சண்டகுணம்
கொண்டுலவு வந்ததென்ன தென்றலே. -2

வாடையொடு கோடையுமேல்
ஊதையும்இங் குன்னைப்போலத் தென்றலே-வந்து
வருத்தம்எதிர் விளைத்திடலை
ஒருத்தரும் முன் கண்டதில்லை தென்றலே -3

நீடுதிரைக் கடல்ஒலிக்கும்
குயிலிசைக்கும் பரிதவிப்பேன் தென்றலே-இங்கு
நீயும்ஒரு வாதமதாய்
மோதுவதை ஏதுசொல்வேன் தென்றலே. -4

ஒருகுணத்தின் மருவிலைநீ
பிரிவிலவர்க்கு அமுதாவாய் தென்றலே-பிரிந்தோர்க்கு
ஓங்குவிடம் ஆகிமயல்
ஆங்குறவே தீங்குசெய்வாய் தென்றலே -5

விரவுதழல் சொரிவதுஉன்தன்
மருவியற்கைக் குணந்தானோ தென்றலே-பொதியம்
மேவுசந்த னாடவியில்
சூழ்அரவின் தீவிடமோ தென்றலே -6

மருவிமுன்பு கந்தவகன்
மதனன்வா கனம்ஆனாய் தென்றலே-இன்று
வன்னிவகன் ஆயினைமேல்
கன்னிவா கனமும் ஆவாய் தென்றலே -7

சரபோஜி மன்னர் என்னை
மருவுவார் நாளைக்குத் தென்றலே-அங்கே
சார்ந்திளைப்புத் தீர்ந்திடலாம்
போந்திடுகிப் போதினிநீ தென்றலே. -8

கந்தும்-மணம்; சந்தம்-சந்தனம்; மலயம்-பொதிகை மலை; காரிகை-பெண்; மாருதம்-காற்று; மந்தம்-மெதுவாக; பிரசன்ட குணம்-பெருங்காற்றின் பலமாக வீசும் தன்மை; வாடை-வடக்கிலிருந்து வீசும் குளிர்காற்று; கோடை-மேற்கிலிருந்து வரும் வெப்பக்காற்று; ஊதை-ஊதற்காற்று;

வாதம்-காற்று; மருவிலை-பொருந்தி இருப்பதில்லை; விடம்-நஞ்சு; அடவி-காடு; அரவு-பாம்பு; கந்தவகன்-மணத்தை சுமந்து வரும் வாயு; மதன் வாகனம்-மன்மதனின் வாகனம் தென்றல் காற்று; வன்னி-நெருப்பு; கன்னி-என்றும் கன்னியாக இருக்கும் துர்க்கை; கன்னி வாகனம்-சிங்கம்.

மணம் மிகுந்த சந்தனம் நிறைந்த பொதிகை மலையில் இருந்து வந்த தென்றலே! தமிழ் முனிவன் அகத்தியன் இருந்த மலையிலிருந்து வந்தும் இந்தக் காரிகையின் சீரிய நேர்மையை நீ ஏன் உணரவில்லை? முன்பெல்லாம் நீ மென்மையான காற்றாய் இருந்தனையே, தென்றலே! இன்று ஏன் சுழன்று அடிக்கும் குணம் கொண்டு வந்திருக்கிறாய்.

வடதிசையில் இருந்து வரும் வாடைக்காற்றும், மேற்குத் திசையிலிருந்து வரும் கோடைக்காற்றும், மேலும் ஊதக்காற்றும் வந்து, எனக்கு உன்னைப் போல வருத்தம் விளைவித்ததை எவரும் கண்டதில்லை தென்றலே !

நீண்ட கடலின் அலை ஓசை, குயிலின் இனிய குரல் இசை ஆகியவற்றைக் கேட்டு என் காதல் ஏக்கத்தால் தவித்துக்கொண்டிருக்கிறேன். தென்றலே நீயும் ஒரு வாதமாய் என்னோடு மோதுவதை என்னவென்று சொல்லுவது? நீ ஒரே குணத்தில் பொருந்தி இருப்பதில்லை? பிரியாமல் சேர்ந்திருக்கும் காதலர்க்கு அமுதமாய் இன்பம் அளிக்கிறாய். பிரிந்து இருப்பவர்களுக்கோ நஞ்சாகி அவர்கள் மையல் கொண்டு தவிக்கும்படித் தீங்கு செய்கிறாய்.

தென்றலே, பரவும் நெருப்பை நீ சொரிவது உன்னிடம் பொருந்திய இயற்கைக் குணமோ? அல்லது நீ பிறந்த பொதிகை மலையில் உள்ள சந்தனக்காட்டு மரங்களைச் சுற்றிக்கொண்டிருக்கும் பாம்புகளின் தீய நஞ்சிடம் அக்குணத்தைப் பெற்றுக்கொண்டாயோ?

முன்பு நீ நல்ல மணத்தை சுமந்து வரும் வாயுவுக்கும், மன்மதனுக்கும் வாகனம் ஆனாய். ஆனால் இப்பொழுதோ

நெருப்புக்கு வாகனமாகி என்னைத் தகிக்கிறாய். கன்னியாகிய துர்க்கையின் வாகனமான சிங்கத்தைப் போல என்னை அச்சுறுத்துகிறாயே? தென்றலே! சரபோஜி மன்னர் நாளை என்னை ஏற்பார். நீ அங்கு வந்து களைப்பாறலாம். இப்போது போய்வா.

கழிக்ரைப் புலம்பல்

வசனம்

இந்தப்படி தென்றலைப் பார்த்துச் சொன்ன பிறகு, குயிலையும், மாலைப்பொழுது முதலியவற்றையும் நோக்கிச் சொல்லுகிறாள்.

சங்கராபரண ராகம் - திச்ர தாளம்

கண்ணிகள்

ஏற்ற மன்மதன் காளமே - இன்று
எனக்கு நீஒரு காளமே - 1

போற்றிடு அந்திமுன் மாலையே - துகப்
போதச் செய்வதுஎன் மாலையே -2

தோற்று சோலைநல் லலர்களே - கூடித்
தூற்று வார்சிலர் அலர்களே -3

ஆற்றல் கொண்டுஇரை வேலையே - மாதர்க்கு
அல்லல் செய்வதுஉன் வேலையே -4

ஓத வேலைஉள மச்சமே - மிக
உள்ளது என்றும்உள மச்சமே -5

மீது சென்றிடு வங்கமே - நின்று
மெலியும் என்வடி வங்கமே -6

கோதில் மாதவள அன்னமே - இங்குக்
கொண்டி லேன்இவளவு அன்னமே -7

மாதண் போதுறு காசையே - சரப
மன்னர் மேல்எனக் காசையே -8

காளம்-ஊதும் இசைக்கருவி, எக்காளம், மன்மதனின் எக்காளம் குயில்; காளம் எனில் நஞ்சுமாம்-அச்சொல் சிலேடை; துக-வருந்த; போத-அதிகரிக்க; மால்-மயக்கம்; மாலை-மாலை நேரம்; தோற்றும்-காட்சி அளிக்கும்; அலர்-காதலர்கள் பற்றி ஊரார் பழிசொல்லுதல்; வேலை-கடல், பணி; அல்லல்-கேடு, தீமை; ஓதம்-அலை; மச்சம்-மீன்; உள அச்சம்-மனதிலுள்ள பயம்; வங்கம்-கப்பல்; வடிவு அங்கம்-அழகிய உறுப்புகள்; கோதில்-குற்றமற்ற; மா-பெரிய; தவள-வெண்மையான; அன்னம்-ஒரு பறவை, சோறு; தண்போது-குளிர்ந்த அரும்பு; காசை-காயாமரம்;

தான் ஊதுகின்ற இசைக்கருவியாக உன்னை ஏற்றுக் கொண்ட மன்மதன் கையிலிருக்கும் எக்காளமாகிய குயிலே! இன்று நீ எனக்கு ஒரு கொடிய நஞ்சாக இருக்கிறாய். இளங்காதலர்கள் போற்றும் முன் அந்தி மாலைப் பொழுதே நான் வருந்தும்படி என் மயக்கத்தை மிகுதியாக அதிகரிப்பது ஏன்? சோலைதனில் காட்சிதரும் நல்ல மலர்களே ! சிலர் கூடிநின்று என்னைப் பற்றி அலர் தூற்றுகிறார்கள். பேராற்ற லுடன் இரைச்சலிடும் கடலே! பெண்களுக்குத் துன்பம் விளைவிப்பதே உனக்கு வேலையாகிவிட்டது. அலை யடிக்கும் கடலிடத்தே உள்ள மீனே ! என்றும் என் உள்ளத்தில் உன்னால் அச்சம் ஏற்படுகிறதே ! கடலின் மீது செல்லும் கப்பலே! காதல் ஏக்கத்தால் அழகிய என் அங்கங்கள் மெலிகின்றனவே !

குற்றமற்ற பெரிய வெள்ளை அன்னப்பறவையே ! இந்த துயரத்தால் என்னால் இங்கு கொஞ்சம் சோறு கூட உண்ண முடியவில்லை. பெரிய குளிர்ந்த அரும்புகளை உடைய காயா மரங்களே! சரபோஜி மன்னன் மேல் எனக்கு கொள்ளை ஆசை.

தோழியின் வருகை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

மன்மதனே வெண்மதியே தென்ற லேபார்
வளைகடலே கடற்கரையே குயிலே காவே
என்றுஇவற்றை நோக்கிமிக வெறுத்துப் பேசும்
எழில்மதன வல்லிஉயர் தஞ்சைமேவும்
மன்னர்பிரான் சரபோசி மன்னர் என்னும்
மணாளருக்குஎன் செய்தியெலாம் வகுத்துக்கூற
இன்னகைதோற் றிடும்சகியை வரக்கா ணோம்என்று
எண்ணினாள் அவளும்எதிர் நண்ணி னாளே.

பார்-உலகம்; கா-சோலை; இன்னகை-இனிய சிரிப்பு; சகி-தோழி; நண்ணினாள்-நெருக்கமாய் வந்தாள்.

மன்மதனே! வெண்ணிலவே! தென்றலே! உலகைச் சுற்றி வளைத்து சூழ்ந்திருக்கும் கடலே! கடற்கரையே! சோலையே! என்று இவை அனைத்தையும் பார்த்து மிக வெறுப்புடன் பேசும் அழகி மதனவல்லி உயர்ந்த தஞ்சை மாநகரில் வாழும் மன்னாதி மன்னன் ஆகிய, சரபோஜி மன்னராகிய என் மணாளரிடம் நான் கொண்ட காதல் பற்றிய செய்திகளை எல்லாம் எடுத்துக்கூற இனிய புன்னகை புரியும் என் தோழி இன்னும் வரவில்லையே என்று எண்ணினாள். அப்பொழுதே தோழி எதிரே வந்தாள்.

சாவேரி ராகம் - ஆதி தாளம்

பல்லவி

சகி வந்தாள் ஐயா - மதனவல்லிக்கு இசைந்த சகி வந்தாள் ஐயா.

அனுபல்லவி

மகிதலம் போற்றிடும் சரபோஜி மன்னவன்
மருவும் உயர்தஞ்சை நகரம் இதுதன்னில்-சகி -1

சரணங்கள்

கலிர்கலிர் என்னச் சிலம்புகள் ஆர்க்க
கடுநடை யுடனே மலர்முகம் வேர்க்க
பலபல பெண்கள்அங் கேநின்று பார்க்க
பட்சமாம் மதனவல்லி மனத்துயர் தீர்க்க -சகி-1

சரசமா கக்கூடி விளையாடப் பண்டு
சரபோஜி மகராஜா தயவுனக் குண்டு
பரவச மாய்அழைத்து வருகின்றேன் கண்டு
பயந்திடா தேஎன்று திடம்சொல்லிக் கொண்டு -சகி-2

மகிதலம்-உலகம்; சிலம்பு-காலில் அணியக்கூடிய அணிகலன்; ஆர்க்க-ஆரவாரம் செய்ய;கடுநடை-விரைவான நடை; பட்சம்-அன்பு; சரசம்-காதல் களியாட்டம்; திடம்-உறுதி;

உலகம் போற்றும் சரபோஜி மன்னன் வாழும் உயர்வான தஞ்சை நகரில் தோழி வந்தாள்.

கலீர் கலீர் என்று காற்சிலம்புகள் ஒலிக்க விரைந்து நடப்பதால் மலர் போன்ற முகம் வியர்க்க, அவள் வருவதைப் பல பெண்கள் ஆங்காங்கு நின்று பார்க்க, அன்புடன் மதனவல்லியின் மனத்துயரைத் தீர்க்க அத்தோழி வந்தாள்.

உன்னோடு காதலால் கூடி விளையாட முன்பே சரபோஜி மன்னனின் கருணை உண்டு. அவரைக் கண்டு பேசி மகிழ்ச்சியுடன் உன்னிடம் அழைத்து வருகிறேன். அஞ்சாதே என மதனவல்லிக்கு உறுதி கூறிக்கொண்டு தோழி வந்தாள்.

மதனவல்லி உரை

வசனம்

வந்த சகியைப் பார்த்து மோகினி சொல்கிறாள்.

நாதநாமக்கிரியை ராகம் - ஆதி தாளம்

பல்லவி

மதன்கல கத்தில்என்னைத் தனிஇங்கே வைத்தென்ன
விதமாகப் புறம்சென்றாய் அடிநீ சகியே - மதன்

அனுபல்லவி

கதிஎனக்கு உன்னையல்லால் காணேனே வேறுநான்
அதுதான்உன் மனம்அறி யாததோ சகியே - மதன்

சரணம்

சரபோஜி மகராஜா பவனிதன் னைக்கண்டேன்
மருவநான் அவர்மேல் மால்கொண்டேன் சகியே
பருவ மடந்தையர் பலர்நின்றார் எனைப்போல்
ஒருவரும் மயல்கொள்ளக் காணேனே சகியே-மதன்

தன் கலகத்தால் மன்மதன் என்னைத் துன்பமுறச் செய்யும் இவ்வேளையில் என்னை இங்கே தனியாக விட்டு விட்டு ஏன் வெளியே சென்றுவிட்டாய், தோழி ?

உன்னை விட்டால் எனக்கு வேறு கதியார் என்று தெரியவில்லையே! அது உன் மனதுக்குத் தெரியாதா, தோழி?

சரபோஜி மன்னர் உலாவருவதைக் கண்டேன், அவரைத் தழுவ நான் காதலால் மயக்கம் கொண்டேன். தோழி, என்னைப் போல இளம்பருவப் பெண்கள் பலர் வீதியில் நின்றார்கள். ஆனால் அவர்கள் யாரும் என்னைப் போல் சரபோஜி மன்னரிடம் மையல் கொள்ளவில்லையே.

தோழிவிடு தூது

வசனம்

மோகினி பின்னும் அந்தச் சகியைப் பார்த்துத் தூது போக வேண்டுகிறாள்.

கல்யாணி ராகம் - ஆதி தாளம்

பல்லவி

இந்த மட்டும் செய்யடி - சகியே நீ
இந்த மட்டும் செய்யடி

அனுபல்லவி

சந்தம் வளரும்தஞ்சைச் சரபோஜி மன்னர் தம்பால்
சார்ந்தென் விரகமெல்லாம் ஓர்ந்திடச் சொல்ல
வேண்டும் - இந்த

சரணங்கள்

அவருக்கு எனைபோலும் மடந்தையார்? ஒருக்காலே
அறியாமல் மயல்கொண்டேன் சிறியாள் ஆகையினாலே
கவலையுற் றிடமதன் எறிகிறான் மலர்க்கோலே
கருதும் இதைஅவர்க்கு உரைநடந்து அனம்போலே
இந்த-1

தென்றல்அம் புலிகட்டுஎன் செய்தேன்நான் அபசாரம்
தெரிக்கும் அவைசெய்வது ஏதுஇப் படிகோரம்
நன்று அவர்க்கு இவைஎல்லாம் நவிலுவாய் இந்நேரம்
நாம்இருவ ரும்இருந்த நன்மைக்குஇங் குபகாரம்
இந்த-2

மனத்தினைத் தூதுவிட்டேன் அதன்செய்தி ஓராமல்
மகிழ்ந்துஅவ ரிடத்தினில் இருந்தது வாராமல்
அனத்தினை அனுப்பலாம் அதுசெல்லும் சேராமல்
அதுநிற்க நீயேசெல் வருத்தத்தைப் பாராமல் - *இந்த-3*

சாந்தம்-அழகு, நறுமணம்; விரகம்-காதல் ஏக்கம்; ஓர்தல்-ஆராய்தல்; மலர்க்கோல்-மலர் அம்பு; அனம்-அன்னம்; அம்புலி-நிலவு; அபசாரம்-தீங்கு; கோரம்-கொடுமை; நவிலுவாய்-கூறுவாய்; ஓராமல்-ஆராய்ந்து பாராமல்.

தோழி! நீ எனக்கு இந்த உதவியை மட்டும் செய். அழகும், நறுமணமும் நிறைந்த தஞ்சை நகர் சரபோஜி மன்னரிடம் சென்று என் காதல் நோயினை ஆய்ந்து பார்க்கச் சொல்.

அவருக்கு என்னைப் போல பொருத்தமான பெண் வேறு யார்? சிறியவளாக இருப்பதால் என்னை நானே அறியாமல் அவரிடம் மையல் கொண்டுவிட்டேன். இப்போதோ நான் கவலைப்படும்படி மன்மதன் என்மீது மலர் அம்புகளை வீசுகிறான். நீ அன்னப்பறவையைப் போல் நடந்து சென்று நான் அணையக் கருதும் அவரிடம் இதை எல்லாம் கூறு.

தென்றல் காற்றிற்கும், நிலவிற்கும் நான் என்ன தீங்கு செய்துவிட்டேன். அவை ஏன் இப்படிக் கொடுமை செய்கின்றன? இதனைப் பற்றி எல்லாம் அவரிடம் நன்றாக எடுத்துச்சொல். இவ்வளவு காலம் நாம் இருவரும் கொண்டிருக்கும் நல்ல நட்பிற்காக இந்த உதவியினைச் செய். மனத்தின் தன்மையினை ஆய்ந்து அறியாமல் அதை அவரிடம் தூது அனுப்பினேன். என் மனமோ திரும்ப வராமல் மகிழ்ச்சியுடன் அவரிடமே இருந்துவிட்டது. அன்னத்தைத் தூது அனுப்பலாம், அதுவும் செல்லும். ஆனால் சென்று அங்கே சேராமல் நின்றுவிடவும் கூடும். உன் மெய் வருத்தம் பாராமல் என்பொருட்டு நீயே செல்.

தூதுச் செய்தி

வசனம்

பின்னும் சகியைப் பார்த்து மோகினி தூது சொல்லும் வகையினைச் சொல்கிறாள்.

தோடி ராகம் - சாபு தாளம்

பல்லவி

சொல்லும் வகைஎல்லாம் முறையாய் உனக்குநான்
சொல்லுகின் றேன்அடி தேனே.

அனுபல்லவி

வல்லோர் புகழ்தஞ்சைச் சரபோஜி மகராஜர்
மனத்துக் கிசைந்திடும் தூதுநீ இனிதாக - சொல்லும்

சரணங்கள்

செஞ்சுடர் உதிக்குமுன் எழுந்து புனல்படிந்து
திருநீ றணிந்துருத் ராட்ச மணிபூண்டு
நெஞ்சினில் எழும்அன்பி னொடுசந்தி வந்தனம்
நிலைதரு சிவபூஜை புரிகுவ ருடன் ஆண்டு-சொல்லும்-1

விஞ்சை தருவேத புராணங்கள் ஓதிடுவோர்
விருப்புடன் பெரியோர்பால் இருப்பார்கேள் வியின்நீண்டு
கஞ்சமலர்த் தாரினர்க்கும் செம்பொன்முதல் தானங்கள்
கணக்கவே செய்வர்இந்தக் காலங்களில் கூறாதே
-சொல்லும்-2

மச்சம்கொங் கணம்ஈழம் மலையாளம் சாளுவம்
வங்காளம் துளுக்காணம் மராடம்சீ னத்தோடு
கொச்சி முதலானதேசமன் னவர்வந்து
கூடிப் பணிந்துநிற்கும் சமயத்தில் உரையாதே
-சொல்லும்-3

மெச்சும்மதி மந்திரிமார் தளகர்த்தர் முதலான
மேலோர்தம் செய்கைசொல்லி வினவுங்கால் பகராதே
கச்சணி முலைமாதர் நடனம்செய் வேளையினும்
கவிவாணர் பிரசங்கம் செய்போதும் புகலாதே
-சொல்லும்-4

நீலத் தடங்கண்மாதர் தூதுகள் அங்கங்கே
நீள்கடை தோறும்நிற்கும் சமயம்பார்த்து அன்பாலே
சாலப் பெருஞ்சேனை சூழப் பவனிவரத்
தாம்வரு மகராஜர் சபையதன் முன்பாலே
-சொல்லும்-5

பாலுற் றிடும்போதுஅவ் வாசற் புறம்நின்று
பணிந்துரைத் தால்அது பலித்திடும் நம்பாலே
மாலுற் றதுவும்நான் மேலுற் றதுவும்சொல்லி
மாலைகைக் கொண்டுஇங்கு வந்திடுக என்பாலே
-சொல்லும்-6

செஞ்சுடர்-சூரியன்; சந்தி வந்தனம்-காலை, மாலை வேளைகளில் செய்யும் சந்தியா வந்தனம் என்ற பூஜை; ஆண்டு-அங்கே; விஞ்சை-வித்தை; கஞ்சமலர்-தாமரை மலர்; தார்-மாலை; கனக்க-நிறைய; மச்சம்-விராடதேசம்; துலுக்காணம்-துருக்கி; மெச்சும்-பாராட்டும்; தளகர்த்தர்-படைத்தலைவர்; கச்சு-மேலாடை;கடை-வாசல்; பால்-பக்கம்; மால்-மயக்கம்;

தேன்போல் இனியவளே! நீ அவரிடம் எப்படிச் சொல்ல வேண்டும்; என்ன சொல்லவேண்டும் என்பதை உனக்கு முறையாகச் சொல்லித் தருகிறேன். வலியவர்கள் புகழும் தஞ்சை நகர் சரபோஜி மன்னரின் மனத்திற்கு இசைந்த தூதாக சென்று நீ தூது சொல்லும் வகையை நான் உனக்குக் கூறுகிறேன்.

சூரியன் எழும்முன் எழுந்து நீராடித் திருநீறு அணிந்து, உருத்திராட்ச மணிமாலை பூண்டு, உள்ளத்தினில் பெருகும் அன்போடு சந்தியாவந்தனம் செய்கின்ற சரபோஜி மன்னரிடம் சென்று அங்கே நீ சொல்லும் வகை உரைப்பேன்.

வித்தைகள் பல நிறைந்த வேதங்களையும், புராணங் களையும் ஓதுபவர்கள், பெரியவர்கள், தன் அருகில் விருப்பமுடன் இருப்பவர்கள், கேள்விப் புலமையுடைய, நீளமாகத் தொங்கும் தாமரை மலர்மாலை அணிந்த அந்தணர்கள் ஆகியவர்களுக்கு அவர் உயர்ந்த தானம் செய்வார். இந்த நேரங்களில் என் காதல் பற்றிப் பேசாதே.

விராடம், கொங்கணம், ஈழம், மலையாளம், சாளுவம், வங்காளம், துலுக்காணம், மராட்டியம், சீனம், கொச்சி

முதலிய நாடுகளைச் சேர்ந்த மன்னர்கள் வந்திருந்து சரபோஜி மன்னரை வணங்கி நிற்பார்கள். அப்போது என் காதல் பற்றிப் பேசாதே.

பாராட்டும்படியான அமைச்சர்கள், தளபதிகள் போன்ற அலுவலர்கள் தாங்கள் செய்யவேண்டிய செயல் களைச் சொல்லி அனுமதி கேட்டு நிற்பார்கள். அப்போதும், கச்சணிந்த மார்பகங்களை உடைய இளம் பெண்கள் நடனமாடும் நேரத்திலும், புலவர்கள் உரையாற்றிக் கொண்டிருக்கும் போதும் தூதைச் சொல்லாதே.

நீலநிறமான பெரிய கண்களைக் கொண்ட இளம் பெண்கள் அனுப்பி வைத்த காதல் தூதர்கள் அவருடைய நீண்ட பெரிய வாயில்கள் தோறும் நிற்கும் வேளை பார்த்து, அன்புமிக்க மிகப்பெரிய தன் சேனைகள் சூழ்ந்துவர உலாவரும் சரபோஜி மன்னர் அவையின் முன் சென்று நீ சொல்லவேண்டிய தூதுச் செய்தியினை நான் சொல்கிறேன்.

அவர் நீ இருக்கும் இடத்தருகே வரும்பொழுது அவ்வாசல் புறத்தில் நின்று பணிவுடன் தூதைச் சொன்னால் அது பலிக்கும். நான் அவர்பால் காதல் மயக்கம் கொண்டுள்ளதையும், அதன் பிறகு எனக்கு நடந்தவற்றையும் கூறி அவர் என்னுடைய காதலை ஏற்றுக்கொண்டதன் அடையாளமாக அவரிடம் இருந்து ஒரு மாலையினை வாங்கிக் கொண்டு இங்கே வா,

எதிர்பார்த்து நின்றாள்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சொன்னஇந்த வகையெல்லாம் மதன வல்லி
சொல்லிஅந்தப் பாங்கிதனை விடுத்தாள் அந்த
மின்னிடையாள் மதயானைக் குலம்சூழ் தஞ்சை
வீதிதனில் பிடிஎனவே நடந்துஆங் கெய்தி

மன்னர்பிரான் சரபோஜி மன்னன் தன்பால்
வகுத்துரைக்கும் சமயம்எதிர் பார்த்து நின்றாள்
அன்னதற்குள் அவள்அவளை வரக்கா ணேன்என்று
ஆற்றாமல் சிலசொற்கள் அறைகின்றாளே.

பாங்கி-தலைவியின் தோழி; மின்னிடையாள்-மின்னல் போன்ற இடையினை உடையவள்; பிடி-பெண் யானை;

மேலே குறிப்பிட்ட விதமெல்லாம் சொல்லி மதனவல்லி அந்தத் தோழியை அனுப்பி வைத்தாள். மின்னலை நிகர்த்த இடையினை உடைய அந்தத் தோழி மதயானைக் கூட்டங்கள் உலவும் தஞ்சைநகர் வீதியில் ஒரு பெண் யானையைப் போல நடந்து சென்று அரண்மனையை அடைந்து சரபோஜி மன்னரிடம் தூதுச் செய்தியினை வகைப்படுத்திக் கூற பொருத்தமான சமயம் எதிர்பார்த்துக் காத்திருந்தாள். அதற்குள் தோழி இன்னும் வரவில்லையே என்று மனம் பொறுக்காமல் மதனவல்லி சில வார்த்தைகள் பேசலுற்றாள்.

மதனவல்லி இரங்கல்

வசனம்

தூது சொல்லப் போனவள் இன்னும் வரவில்லை என்று மோகினி சொல்லுகின்றாள்.

அடாணா ராகம் - சாபு தாளம்

பல்லவி

இன்னம்வரக் காணேனே - சகியைநான்
இன்னம்வரக் காணேனே

அனுபல்லவி

மன்னர் புகழும்தென் தஞ்சைச் சரபோஜி
மன்னன்பால் தூதுசென்ற கன்னிகை தனைஇங்கே
-இன்னம்

சரணங்கள்

பாவாய்என் றேன்இங்குப் பாவாய்என் றாள்அந்தப்
பாவிக்குஎன் ஆவி பதைப்புத் தெரியாதே
காவாய்க் குயிலினம் கூவி வதைக்குது
காமன் கணைஎன்மேல் ஓவாது தைக்குது -இன்னம்-*1*

பாலனம் செய்திடுஅன் பாலனமே என்றேன்
பாலனம் கொண்டுநின் பால்வரு வேன்என்று
மேல்அகன் றாள்மதி தாமதி யாள்சொல்லும்
வேலை தெரிந்துநிற்பாள் போலஇருக்குது -இன்னம்-*2*

சகியேஎன் றேன்சற்றுச் சகியேஎன் றாள்அவள்வஞ்
சகியேஇப் படிஎன்னைத் தவிக்கவிட் டுச்சென்றாள்
மகிபாலன் சரபோஜி மன்னன் தனக்கிசைத்தால்
வருவான் வரச்சொல்வான் மாலையா கிலும்
கொடுப்பான் -இன்னம்-*3*

பாவாய்-பெண்ணே; பா+ஆய்-பாடலை ஆய்ந்துபார்; கா+வாய்-சோலையிடத்தில்; ஓவாது-ஓயாமல்; பாலனம்-பாதுகாப்பு; அன்பால் அனமே-அன்னம் போன்ற தோழியே உன் அன்பால்; பால் அன்னம்-பால்சோறு;

தோழி இன்னும் வரவில்லையே ! மன்னர்கள் எல்லோரும் புகழும் தென்தஞ்சை சரபோஜி மன்னரிடம் தூது சென்ற பெண் இன்னும் வரவில்லையே !

பெண் பாவையே என்றேன். இங்கு நீ பாடல்களை ஆராய்ச்சி செய்துகொண்டிரு என்றாள். அந்தப்பாவி, அவளுக்கு என் உயிர் துடிப்பது தெரியவில்லையே ! சோலைகளில் குயில் கூட்டங்கள் கூவிக் கூவியே என்னை வதைக்கின்றன. மன்மதனின் மலர் அம்புகள் என்மேல் இடைவிடாமல் பாய்கின்றன. பாவாய் என்ற சொல் பாவையே என்றும் பாடல்களை ஆராய்ந்து பார் என்றும் சிலேடையாகப் பயன்படுத்தப்பெற்றுள்ளது.

அன்னமே என்னை உன் அன்பால் காத்திடு என்றேன். பால்சோறு எடுத்துக்கொண்டு உன்னிடம் வருகிறேன் என்று கூறிவிட்டு விலகிச் சென்றுவிட்டாள். அவள் காலதாமதம் செய்யும் எண்ணம் உடையவள் அல்ல. தூது சொல்லும் சமயத்தை எதிர்பார்த்து காத்திருக்கிறாள் எனத் தோன்றுகிறது. பாலனம்-பாதுகாத்தல், பால்சோறு, பால் அன்னமே என ஒரே சொல், பல்வேறு பொருட்களில் பயன்படுத்தப் பெற்றுள்ளது. சொற் பின்வரு நிலையணி ஆகும்.

தோழியே என்றேன், சற்றுப் பொறுத்துக் கொள் என்றாள். அவள் வஞ்சகி, இப்படி என்னை விரகத்தால் தவிக்கும்படி விட்டுச் சென்று விட்டாள். உலகை ஆளும் சரபோஜி மன்னவன் என்னுடைய காதலை ஏற்க இசைந்தால் இங்கு என்னிடம் வருவார். அல்லது என்னை அங்கு வரச்சொல்லுவார், இல்லை என்றால் தன் அன்பின் அடையாளமாக ஒரு மாலையினையேனும் கொடுத்து அனுப்புவார். சகி என்ற சொல் சொற்பின் வருநிலையணியாக வந்துள்ளது.

குறத்தி வருகை

வசனம்

இப்படித் தூதுபோன சகியை வரக்காணேன் என்று மோகினி சொல்லிக்கொண்டிருக்கிற வேளையில் அங்கே ஒரு குறத்தி வருகிறாள்.

நேரிசை ஆசிரியப்பா

இப்படி இவர்கள் இருந்திடு காலையில்
மைப்படி விழியள்ஓர் மலைக்குற மடந்தை
மும்மதக் களிற்றின் முகபடாம் என்ன
வெம்முலைத் தடத்தின் மேற்கச்சு அணிந்து
மதன்கொலு மண்டபம் வளைத்திடு திரைபோல்
விதமுறு சித்திர மென்துகில் உடுத்துப்
பிரியல்என்று அவ்வேள் பிடித்தகை விரல்கள் போல்
மருவிடும் முன்கை மணிவளை வளைந்து

சந்திரன் இரண்டெனத் தந்திவெண் கோட்டுச்
சுந்தரத் தோடு தொகுசெவி அணிந்து

குன்றிமா மணியும் குலச்சங்கு மணியும்
துன்றிடு சுவடியும் தொகுத்திடு பணிகளும்
புலிப்பல் தாலியும் புனைந்துமாத் திரைக்கோல்
வலக்கையில் ஏந்தி மணிக்குறக் கூடை
மருங்கினில் இடுக்கி வசிகரத் திலகம்
இருங்கதிர் நெற்றி யிடைத்தரித்து எய்தி
சீருறு பொருளால் திடத்தினால் தனக்கு
நேரிலாது ஓங்கிய நேரிமா மலையும்
ஞாலந் தன்னில் நண்ணிடும் உயிர்க்கெலாம்
காலம்ஓர்ந் துதவும் காவிரி நதியும்

பொன்னுல கென்னப் புவிபுகழ் சிறப்பு
மன்னிய சோழ வளநா டதுவும்
சக்கர வாளமும் தகுபுறக் கடலும்
இக்குவ லயத்தை இனிதுசூழ்ந் திடுதல்போல்
கார்வளர் மதிலும் நீர்நிறை அகழியும்
மஞ்சுறச் சுலவும் தஞ்சைமா நகரும்
பற்றலர் குழுவைப் பகர்புறத்து ஒதுக்கி
வெற்றிக்கொண் டிலகும் வெற்றிமா விகையும்
உச்சைச் சிரவமாம் உயர்பரி என்ன
விச்சையின் எழிலின் மிகுபரித் திரளும்

நிலவும்எண் திசையினும் நிலவுறும் இபங்கள்போல்
குலவிடும் முன்றில்சூழ் குஞ்சரக் குலங்களும்
பூமிவாழ் அரசர் பொருந்துசீர் எவற்றினும்
நாம்உயர் வினம்என நாட்டிய பதாகையும்
மன்றல்பே ருதவி வலனுறு வெற்றியால்
முன்றிலின் முழங்கு மூவகை முரசும்
மானமுற் றிலங்கு மனுநூல் முறையே
நானிலம் துதிக்க நடத்துசெங் கோலும்
பிரகதீ சுரர்தம் பேரரு ளால்பெறு
சரபோஜி மன்னர் தமைஎதிர் போற்றி.

அன்னவர் உதவிய அளவில்பொற் பணிகளும்
மன்எழிற் கலைகளும் வரிசையாக் கொண்டே
ஆவணம் சந்திகள் அணிநெடு வீதிகள்
மேவிஅங் கிருக்கும் மின்னார் எவர்க்கும்
கையினில் காலில் கலந்திடு ரேகையும்
மெய்யுறு மறுவொடு விளங்கிடு தழும்பும்
சுழிகளும் இன்னும் தோற்றுசில் குறிகளும்
விழியினால் நோக்கி மெய்ப்பலன் உரைத்திட்டு
அவர் அவர் உதவிடும் அணிகளும் கலைகளும்
குவிதரு நிதியும் கொடுவர அன்னாள்

குறிப்புவரும் நெறிப்பும்மொழி
முறுக்கும்அதில் உருக்கும்நிறை
களிப்பும்இசை நெளிப்பும்இயல்
பசப்பும்முலை அசைப்பும்எதிர்

கண்டுஇளைஞர் ஆனவர்கள்
மண்டிஅரு கேஉலவ
கெண்டைவிழி யாய்ஒருசொல்
நின்றுசொல்ல டீஉரிய

தொண்டர்அல வோஎளியம்
இன்பமுற வேபுகலும்
உனது மனம்அறிய
மனது பதறுதடி

எனமுன் நவிலமிக
அவளும் நலதுபினர்
வந்துசொலு வேன்அதுங்கள்
சிந்தைமகிழ் கூரஇங்கு

நின்றிடுக நின்றிடுக
என்றுஉரைசெய்து அந்தமிகு
கயல்இரண்டு இலகு கலைமதி தன்மேல்
புயல்புறம் சூழப் பூத்ததோர் கொடியோ

புவியினில் வந்து பூண்பல புனைந்து
நவில்அனம் போல நடந்திடும் மின்னோ
இரதியோ அரம்பையோ எழில்ஊர் வசியோ
திருவெனும் மடந்தையோ திலோத்தமை தானோ
என்னஒண் ணுதலார் இயல்கணம் நடுவே
மன்னிவீற் றிருக்கும் மதன வல்லிதன்
பொன்மனைக்கு எதிர்உறப் பொற்பு
மன்னிடு மறுகினில் வந்துஅணைந் தனளே.

மைப்படி - மைபூசிய; மும்மதக்களிறு - கன்ன மதம், கபால மதம், குறிமதம் என்ற மூன்று மதங்களைப் பொழியும் ஆண் யானை; மேற்கச்சு - மேலாடை; மதன் கொலு மண்டபம் - அல்குல்; வேள் - மன்மதன்; தந்தி - யானை; கோடு- தந்தம்; துன்றிடு - நெருங்கிய; கவடி - சூதாடப் பயன்படும் சோழிகள்; பணிகள் - நகைகள்; மாத்திரைக் கோல்- குறிசொல் வோர் வைத்திருக்கும் கோல்; மருங்கு - இடுப்பு; நேரிலாது - நிகரில்லாது; நேரிமலை - சோழநாட்டில் இருந்த தாகக் கூறப்படும் மலை; ஞாலம் - உலகம்; சக்கர வாளம்- உலகைச் சுற்றிச் சூழ்ந்திருப்பதாகப் புராணங்களில் கூறப்படும் மலை; குவலயம் - உலகம்; கார் - மேகம்; மஞ்சு - மேகம், அழகு; சுலவும் - சுற்றி இருக்கும்; பற்றலர் - பகைவர்; பகர் - பக்கம்; மாலிகை - மலை, மாளிகை; உச்சை சிரவம் - இந்திரனின் குதிரை, திருப்பாற்கடலில் தோன்றியது; பரி - குதிரை; விச்சை - வித்தை; திரள் - கூட்டம்; எண்திசை இபங்கள் - உலகை எட்டு திசைகளிலும் தாங்கி நிற்கும் யானைகள் குஞ்சரம்; இபம் - யானை; பதாகை - கொடி; மன்றல் - திருமணம்; பொற்பணி - பொன் நகை; கலை - ஆடை , சேலை; வரிசை - பரிசு; ஆவணம் - கடைத்தெரு; சந்தி- சாலைச் சந்திப்புக்கள்;

மின்னார் - மின்னல் அனைய பெண்கள்; மெய்யுறு - உடம்பில் உள்ள; மறு - மச்சம்; குவிதருநிதி - செல்வக் குவியல்; கொடுவர -கொண்டுவர; பசப்பு - சாகசம்; மண்டி - முந்திக் கொண்டு, நெருங்கி; நலது - நல்லது; பினர் - பின்னர்; கயல் -

கெண்டைமீன்; கலைமதி - அழகிய நிலவு; புயல் - மேகம்; பூண் - ஆபரணம்; அனம் - அன்னம்; திரு - இலக்குமி; ஒண்ணுதல் - ஒளியுள்ள நெற்றி; பொற்பு மன்னிடு - அழகு நிறைந்த; மறுகு - வீதி.

இவர்கள் இப்படி இருக்கிற நேரத்தில், மையணிந்த விழிகளுடைய மலைக் குறப்பெண் ஒருத்தி, மும்மதங்களைப் பொழியும் ஆண் யானைக்கு அணிவிக்கும் முகபடாம் போலத் தன் கொடிய மார்பகங்களின் மீது கச்சணிந்து, மன்மதன் கொலுவீற்றிருக்கும் மண்டபத்தைச் சுற்றி வளைத்துக் கட்டிய திரைச்சீலையைப் போலத் தன் இடையைச் சுற்றி பலவித ஓவிய வேலைப்பாடு நிறைந்த மெல்லிய ஆடை உடுத்தி, பிரியாத வண்ணம் பிடித்திருக்கும் மன்மதனின் கை விரல்கள் போல் அவளுடைய முன் கையில் பொருந்தி இருக்க மாணிக்க வளையல்கள் அணிந்து, பிறைச் சந்திரர்கள் இரண்டு போன்றுள்ள யானை வெண் தந்தங்களால் செய்யப்பெற்ற அழகிய தோடுகளைக் காதுகளில் அணிந்து, குன்றிமணியும், உயர்சாதிச் சங்கு மணியும், நெருக்கமாகச் சோழிகள் தொடுத்த மாலையும், நெருங்கிப் பின்னிக் கிடக்கும் பல அணிகளும், புலிப்பல் தாலியும் அணிந்து, குறி சொல்வதற்குப் பயன்படும் மந்திரக் கோலை வலது கையில் ஏந்திக்கொண்டு குறவர்களுக்கு உரிய அழகிய கூடையினை இடை இடுக்கினில் பிடித்து, ஒளி பொருந்திய தன் நெற்றியில் கவர்ச்சியான பொட்டு இட்டுக் கொண்டு வந்தாள்.

களிற்றின் முகபடாம் முலைமேல் கச்சுக்கு உவமை

> "கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்
> படாஅ முலைமேல் துகில்"

எனும் குறளினை ஒப்புநோக்குக..

சிறப்பு மிக்க பொருள்களால், வலிமையால் தனக்கு நிகரில்லாது உயர்ந்து விளங்கும் நேரிமலை, உலகில் உள்ள

உயிர்களுக்கு எல்லாம் காலமறிந்து உதவும் காவிரிநதி, தேவர்களின் அமராபதி என்று உலகினர் புகழும் சிறப்புப் பொருந்திய சோழநாடு, சக்கரவாள மலைத்தொடரும், பல புறங்களிலும் கடலும் இப்பூவுலகினைச் சூழ்ந்திருப்பதைப் போல் மேகங்கள் உலவும் உயரமான மதில் சுவரும், நீர் நிரம்பிய அகழியும் அழகுடன் சுற்றிச் சூழ்ந்திருக்கும் தஞ்சை நகர்.

எதிரிகள் கூட்டம் பயந்து பக்கங்களில் ஒதுங்கி நிற்க வெற்றிச் சிறப்புடன் விளங்கும் மலை போன்ற மாளிகை, இந்திரன் குதிரையான உச்சை சிரவத்தை ஒத்த வித்தைகளிலும் அழகிலும் மிகுந்து விளங்கும் குதிரைக் கூட்டங்கள், எட்டுத் திசைகளிலும் இவ்வுலகைத் தாங்கி நிற்கும் திசை யானை களைப்போல் அரண்மனை முற்றத்தில் நிற்கும் யானைக் கூட்டங்கள், இவ்வுலகில் வாழ்கின்ற மன்னர்களிடம் பொருந்திய சிறப்புக்கள் எவற்றையும் விட நாமே உயர்ந் தவர் என்பதாக நாட்டப்பெற்ற கொடி, திருமணங்கள், இரவலருக்குக் கொடை வழங்கல், போர்களில் பெற்ற வெற்றி ஆகியவற்றை அறிவிக்க அரண்மனை முற்றத்தில் முழங்கும் மூன்று முரசங்கள், தன்மானத்துடன் மனுதர்ம நீதி சாத்திர நெறிமுறைப்படி உலகம் புகழ ஆட்சி செய்யும் செங்கோல் என அனைத்துச் சிறப்புகளையும் பிரகதீசப் பெருமான் அருளால் பெற்றுள்ள சரபோஜி மன்னரைக் கண்டு, போற்றி, அவர் வழங்கிய அளவற்ற பொன் அணிகள், அழகிய ஆடைகள் முதலிய பரிசுகளைக் கையில் கொண்டு கடைவீதிகள், சாலைச் சந்திப்புக்கள், அழகிய பெரிய இராஜவீதிகள் முதலிய இடங்களுக்குச் சென்று.

இவ்வடிகளில் சரபோஜி மன்னன் ஆளும் நாட்டின் மலை, நதி, நாடு, நகர், மாளிகை, குதிரை, யானை, கொடி, முரசு, செங்கோல் ஆகிய பத்து சிறப்புக்கள்(தசாங்கங்கள்) கூறப்பட்டுள்ளன.

அங்கிருந்த அழகுநிறைந்த பெண்கள் அனைவருக்கும் கைகளிலும் கால்களிலும் உள்ள இரேகைகள், உடம்பில் உள்ள

மச்சங்கள், தழும்புகள், சுழிகள் இன்னும் தெரிகின்ற சில குறிகள் ஆகியவற்றைத் தன் கண்களால் பார்த்து உண்மையான பலன்களைக் கூறி, அவரவர் வழங்கிய நகைகள், சேலைகள், நிதிக்குவியல்கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு வருகின்றாள்.

அவளுடைய உள்ளக்குறிப்பைக் காட்டும் புருவ நெறிப்பும், வார்த்தைகளின் கம்பீரமும், அதிலிருந்த உள்ளமுருக்கும் மகிழ்ச்சியும், இடையில் நெளிப்பும், அவளின் இயல்பான சாகசமும், மார்பின் அசைவும் ஆகியவற்றை எதிரே கண்டு இளைஞர்கள் ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு அவளை நெருங்கி வந்து உடன் உலவிய வண்ணம், கெண்டைமீன் அனைய விழிகளை உடையவளே! இங்கே நின்று ஒரு சொல் கூறு! உனக்கு நாங்கள் தொண்டர்கள் அல்லவோ? எளியவர்களாகிய நாங்கள் இன்பமுறப் பேசும் உன் மனதை அறிய எங்கள் உள்ளம் பதறித்தவிக்கிறது என்று கூற, அவளோ நல்லது உங்கள் சிந்தை மகிழப் பின்னர் வந்து பேசுவேன். இங்கேயே நில்லுங்கள் என்று கூறிவிட்டு அங்கிருந்து நடந்தாள்.

அழகு நிரம்பிய கெண்டைமீன்கள் இரண்டு எழிலுடன் விளங்கும் முழு நிலவின் பின்புறம் கார்மேகம் சூழ்ந்திருக்கப் பூத்த ஒப்பற்ற பூங்கொடியோ, உலகினில் வந்து நகையணி பல பூண்டு அன்னம்போல நடந்திடும் மின்னலோ, ரதியோ, ரம்பையோ, அழகான ஊர்வசியோ, இலக்குமியோ, திலோத்தமையோ என்று எண்ணும்படி ஒளிபொருந்திய நெற்றியினை உடைய பெண்கள் கூட்டத்தின் நடுவில் இம் மண்ணுலகில் இருக்கும் மதனவல்லியின் வீட்டிற்கு எதிரில் உள்ள அழகு பொருந்திய வீதியில் அக்குறவஞ்சி வந்து சேர்ந்தாள்.

கயல் கண்களுக்கும், கலைமதி முகத்திற்கும், புயல் கூந்தலுக்கும், கொடி இடைக்கும் உவமை. மின்னல் மதனவல்லிக்கு முழுமையான உவமை. கயல் போன்ற

கண்களும், மதி போன்ற முகமும், மேகம் அனைய கூந்தலும், கொடி போன்ற இடையும் கொண்டு வானத்து மின்னல் பூமிக்கு வந்தது போல மதனவல்லி வீற்றிருக்கிறாள் என்ற கற்பனை மகிழத்தக்கது. இது இல்பொருள் உவமை ஆகும்.

இதுபோன்ற வருணனை நைடதத்திலும்

வாய்ந்த மின்னை மடந்தையர் ஆக்கி
விண்போந்திடாமல் இருக்க ஆங்கே
மலர்ப்புங்கவன் சாந்தணிந்த தமனியக்
குன்றென ஏந்து வெம்முலை பாரம் இயற்றினான்

காணப்படுகிறது.

குறத்தி வருகையினை அறிவிக்கிறாள் தோழி

வெண்பா

இந்தவகை இக்குறத்தி எய்தும்இதை யேஒருபூங்
கொத்திலகு கோதையினாள் கூறுகின்றாள்-வந்துநின்று
மண்டலம் போற்றும் சரபோஜி மன்னவனைக்
கண்டுமயல் கொண்டவளைக் கண்டு.

உலகம் போற்றும் சரபோஜி மன்னனைக் கண்டு மையல் கொண்டுள்ள மதனவல்லியின் எதிரில் வந்து நின்று, பூங்கொத்தைச் சூடி இருக்கும் தோழி ஒருத்தி மேற்குறிப்பிடும் விதமாக இக்குறத்தி வருவதைக் கூறுகிறாள்.

குறத்தி வருகிறாள் குறிசொல்ல

பியாகடை ராகம் - ஆதி தாளம்

பல்லவி

குறத்தி வருகிறாளம்மா - குறி சொல்லும்
குறத்தி வருகிறாளம்மா.

அனுபல்லவி

பொறுத்த புகழ்த்தஞ்சை புரத்தின் வளர்சர
போஜி நரபதி மேவும் எழில்கண்டு
திறத்தின் மிகுமயல் பரித்த சிலைநுதல்
கறுத்த கயல்விழி சிறுத்த கொடியிடைக் - குறத்தி

சரணங்கள்

தங்கக் குடம்அன
கொங்கைத் துணைகளில்
சந்தக் களபம் இலங்கவே
சங்கக் குலவளை
செங்கைப் புதுமலர்
தங்கிக் கலின்என் றலங்கவே
சிங்கத் - துவள்இடை
பொங்குற் றிடும்எழில்
சிந்தித் தெவரும் மயங்கவே
கங்குற் கணும்ஒளிர்
கஞ்சப் பதநடைக்கு
அஞ்சப் பெடைகள் உயங்கவே-குறத்தி *1*

கன்ன மதில்அணி
பொன்னின் உறுகுழை
மின்னும் ஒளிவுற மின்னவே
வன்ன நறுமலர்
நண்ணு குழல்எழில்
மன்னு தனதடி பின்னவே
பன்னு குழல்மிசை
அண்ணல் அளிகுலம்
முன்னும் இசைஎதிர் துன்னவே
அன்ன நடைபுனை
சொன்ன பரிபுரம்
இன்னள் பதுமினி என்னவே -குறத்தி *2*

மாசு தவிர்பிறை
ஆசை கொளும்நுதல்
ஈசர் மகிழ்பொடி பூசியே
பாச இளைஞர்கள்
தாசர் எனஉற
மோச விழிவலை வீசியே
கோசு களின்இயல்
வாச முளகுறி
நேச முடனேவி லாசியே
தேசின் உயர்சர
போசி எனும்மக
ராசன் உறுபுகழ் பேசியே -குறத்தி 3

நரபதி-மன்னன்; சிலை-வில்; நுதல்-நெற்றி; துணை-இரட்டை; சந்தம்-மணம்; களபம்-கலவைச் சந்தனம்; அலங்க-அசைய; சிங்கம்-இடைக்கு உவமை; கங்குல்-இரவு; கஞ்சம்-தாமரை; அஞ்சப்பெடை-பெண் அன்னங்கள்; உயங்கல்-மனம் தளரல்; கன்னம்-கர்ணம், காது; மன்னுதன்-மன்மதன்; அண்ணல்-தலைமை வாய்ந்த; அளிக்குலம்-வண்டுக் கூட்டம்; எதிர்துன்ன-எதிரே நெருங்கிவர; சொன்ன-சொர்ண, தங்கம்; பரிபுரம்-காற்சிலம்பு; மாசுதவிர் பிறை-அவள் நெற்றிக்கு ஈடாக வேண்டும் எனும் ஆசையினால் பிறை நிலவு தன் களங்கத்தைத் துடைத்துக் கொள்கிறது. கோசு-மணப் பொருட்கள் வைக்கும் செம்பு; தேசு-ஒளி, புகழ், தேஜஸ்.

குறிசொல்லும் குறத்தி வருகிறாள் அம்மா !

பெரும்புகழ் தாங்கிய தஞ்சை நகரில் சரபோஜி மன்னர் வாழும் அழகினைக் கண்டு அவர் திறத்தால் பெருகிய மையலுடன், அழகிய வில் போன்ற நெற்றி கரிய கெண்டை மீன் போன்ற கண்கள், குறுகிய கொடி போன்ற இடை இவற்றை உடைய குறத்தி வருகிறாள் அம்மா.

தங்கக் குடங்களைப் போன்ற இரண்டு முலைகளிலும் மணமுள்ள கலவைச் சந்தனம் விளங்க, உயர்ந்த சாதிச் சங்கு கொண்டு செய்யப்பெற்ற வளையல்கள் புத்தம் புதுமலர் போன்ற சிவந்த கைகளில் இருந்து கலீர் கலீர் என்ற ஒலியுடன் அசைய, இளைஞர்கள் கூட்டத்தினைத் தன் அழகால் சிங்கம் என பயமுறுத்தும் துவளும் இடையில் பொங்கி வரும் பேரழகை நினைக்கின்ற எவரும் மயங்க, இரவில் கூட ஒளிரும் தாமரை போன்ற பாதங்களின் நடையழகு கண்டு பெண் அன்னங்கள் மனம் தளரக் குறத்தி வருகிறாள். இரவிலும் ஒளிரும் தாமரை என்பது இல்பொருள் உவமை.

காதுகளில் அணிந்துள்ள பொன்னால் ஆன குழை என்னும் அணிகலகன்களின் ஒளியினைக் கண்டு மின்னலே நாணி ஒளிந்து கொள்ளும்படி பளிச்சிட, வண்ண நறுமலர்களைச் சூடியுள்ள அவள் கூந்தலின் அழகினைக் கண்டு தொடர்ந்து நடக்கமுடியாமல் மன்மதனின் கால்கள் பின்னிக்கொள்ள, புகழ்ந்து பேசக்கூடிய கூந்தலின் மீது மொய்க்கும் உயர்ந்த இன வண்டுகளில் எழும் இசை நெருங்கிவர, அன்னம்போல் நடைபயிலும் கால்களில் அணிந்துள்ள தங்கச் சிலம்புகள் இவள் பெண் இனத்தில் உயர்ந்த பதுமினிச் சாதியாள் என்று இயம்பக் குறத்தி வருகிறாள்.

களங்கத்தை நீக்கிக் கொண்டு பிறை நிலவு ஆசை கொள்ளும் தன் நெற்றியில் சிவபெருமானுக்கு உரிய திருநீற்றைப் பூசிக்கொண்டு, அவளிடம் ஆசை கொண்ட இளைஞர்கள் உன் அடிமைகள் நாங்கள் என்று கூறியபடி வந்து நிற்கத் தன் மோசம் புரியும் கண் வலையை வீசிய வண்ணம், புனுகு, கோரோசனை, கஸ்தூரி போன்ற மலை வாசனைத் திரவியங்கள் நிறைந்த செம்புகளில் உள்ள மணங்களை அன்புடன் விசிறியபடி புகழ் ஒளியில் சிறந்த சரபோஜி எனும் மன்னரின் புகழைப் பேசிக்கொண்டு குறத்தி வருகிறாள்.

குறவஞ்சி வருகிறாள்

வசனம்

இப்படி குறத்தி வருகிறாள் என்று சொன்ன சகியைப் பார்த்து, மோகினி அவளை இங்கே அழை என்றாள். அவளும் அழைக்க குறத்தி வருகிறாள்.

கௌளி பந்து ராகம் - சாபு தாளம்

பல்லவி

குறவஞ்சி வந்தாள் - மோகனக்
குறவஞ்சி வந்தாள்

அனுபல்லவி

திறமும் திருவும் நெறியும் உறைதஞ்சைச்
செழுநகர்ச் சரபோஜி மகராஜன்அருள்பெற்ற
-குறவஞ்சி

சரணங்கள்

தரணியில் எங்கணும் மதமொடு சென்று
தண்மலர்க் கணைகொண்டு எவரையும் வென்று
வரும்மத னனேஅடா வாய்த்ததோ இன்று
வாளதிர் ஒருகை பார்ப்போம்இங் கென்று -குறவஞ்சி 1

கூடைகட் டலைமுறம் கட்டலையோ என்னக்
குயில்கூ வுதல்போலக் கூவிக்கொண்டு அன்னப்
பேடென்ன நடந்துஎழில் மயில்என மின்னப்
பெருமய லுடன்மகிழ்ந்து ஆடவர் துன்னக்-குறவஞ்சி 2

பச்சைகுத் தலையா அடியம்மே பிச்சை
பகர்குறி கேளுங்கள் சொல்கிறேன் விச்சை
இச்சகத்து அனைவரும் கேட்பவர் இச்சை
எனச்சர பேந்திரன் தனைப் போற்றி மெச்சக்
-குறவஞ்சி 3

தரணி-உலகம்; மதம்-செருக்கு; பகர் குறி-சொல்லும் குறி; விச்சை-வித்தை;

அழகிய குறவஞ்சி வந்தாள்.

திறமைகளும், செல்வத் திருவும், நெறிமுறைகளும் நிறைந்த தஞ்சை என்னும் வளமிக்க நகரின் மன்னன் சரபோஜியின் அருள்பெற்ற குறவஞ்சி வந்தாள்.

உலகம் எங்கும் செருக்குடன் சென்று குளிர்ந்த மலர் அம்புகளின் உதவியால் எவரையும் வென்று வரும் மன்மதனே! அடேய்! உன்னோடு போரிட இன்று, வாய்ப்பு கிட்டியது. எதிரே வா ! ஒரு கை பார்க்கிறேன் இங்கு, என்று மன்மதனுக்குத் தன் அழகால் அறைகூவல் விடுத்தவளாய் குறவஞ்சி வந்தாள்.

கூடை கட்டுகிறீர்களா? முறம் கட்டுகிறீர்களா? என்று குயில் போன்று இனிமையாகக் கூவிக்கொண்டு பெண் அன்னத்தைப் போல் நடந்து, அழகு மயில் என ஒளிவீச, ஆண்களெல்லாம் பெரு மையலுடன் மகிழ்ச்சியாய் நெருங்கி வரக் குறவஞ்சி வந்தாள்.

பச்சைக் குத்திக் கொள்கிறீர்களா? பெண்களே எனக்குப் பிச்சை இடுங்கள். நான் சொல்லும் குறிகேளுங்கள். நான் கற்றுள்ள வித்தைகளைப் பாருங்கள். இவ்வுலகினர் அனைவரும் தங்கள் இச்சைப்படி குறிகேட்கலாம் என்று சரபோஜி மன்னரைப் போற்றி புகழ்ந்த வண்ணம் குறவஞ்சி வந்தாள்.

குறத்தி வாசல் வளம் கூறுதல்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

நண்ணுபுகழ்ச் சரபோஜி மன்னன் தஞ்சை
நகர்உறையும் மதனவல்லி மானே அந்த
வண்ணமலைக் குறத்திதனை அழைத்திடு என்றாள்
வந்துரைத்தாள் சென்றுரைத்தாள் வந்து நின்று

விண்ணிடைச்சென்று உடுக்கணத்தைத் துகிற்ப தாகை
மேதினியில் உதிர்க்கும்உயர் மனையை நோக்கி
ஒண்ணுதற்சிற் றிடைத்தொடிக்கை அனைய வஞ்சி
உளம்கனிந்து மணிவாசல் வளம்சொல் வாளே.

புகழ் நிறைந்த சரபோஜி மன்னரின் தஞ்சை மாநகரில் வாழும் மதனவல்லி தன் தோழியினைப் பார்த்து, மானே! அந்த அழகிய மலைக் குறத்தியை இங்கே அழைத்து வா என்றாள். குறவஞ்சியின் வருகை பற்றி வந்து கூறிய தோழி சென்று குறத்தியிடம் கூறினாள். துணியால் ஆன பெருங் கொடிகள் வானத்தை எட்டிச் சென்று அங்குள்ள விண்மீன்கள் கூட்டத்தை உரசி, அவற்றை மண்ணில் உதிர்க்கும் உயர்ந்த மாளிகை நோக்கி வந்து நின்று, ஒளியுள்ள நெற்றி, சிறிய இடை, வளையல்கள் பூண்ட கைகள் இவற்றை உடைய குறவஞ்சி உள்ள மகிழ்ச்சியுடன் அழகு நிறைந்த வாசலின் வளம் கூறலானாள். துகிற் பதாகை உடுக்கணத்தை உதிர்த்தது எனல் உயர்வு நவிற்சி அணி ஆகும்.

வாசலிது வாசலிது

பரசு ராகம் - திச்ர தாளம்

கண்ணிகள்

வாசலிது வாசலிது மகராஜன் வாசலிது
தேசுறுபோ சலகுலத்தைச் செழிக்கவைக்கும் வாசலிது
-வாசலிது 1

நன்னயம்சேர் தஞ்சைதனில் நலம்பெருகும் வாசலிது
மன்னுசர போஜிமன்னன் மகிழ்ந்திருக்கும் வாசலிது
-வாசலிது 2

திருமகளும் நாமகளும் சிறந்திருக்கும் வாசலிது
வரம்உதவும் பெரியோர்கள் வாழ்த்திசைக்கும் வாசலிது
-வாசலிது 3

விதிதரும்வே தாகமங்கள் விளங்கும்மணி வாசலிது
சதுரங்க சேனைகளும் சந்ததம்சூழ் வாசலிது
-வாசலிது 4

நேசமுறு சேனைகட்கு நிதியளக்கும் வாசலிது
பூசுரர்க்கும் புலவோர்க்கும் பொன்சொரியும் வாசலிது
-வாசலிது 5

இத்தரணி மன்னரெல்லாம் இறைஞ்சிநிற்கும் வாசலிது
மொய்த்திடுசீர் மும்முரசு முழங்கும்மணி வாசலிது
-வாசலிது 6

தேசுறு-ஒளியுள்ள; திருமகள்-இலக்குமி; நாமகள்-சரசுவதி; சந்ததம்-எப்பொழுதும்; பூசுரர்-அந்தணர்கள்; இறைஞ்சி-வணங்கி.

இது சரபோஜி மன்னன் அரண்மனையின் வாசல். ஒளிபொருந்திய போசல மன்னர் குலத்தைச் செழிப்படைய வைக்கின்ற வாசல் இது. நன்மையே சேர்ந்திருக்கும் தஞ்சை நகரில் நலம் எல்லாம் பெருகி நிற்கும் வாசல் இது. நிலைபேறுடைய சரபோஜி மன்னன் மகிழ்ச்சியுடன் வாழும் அரண்மனையின் வாசல் இது.

இலக்குமியும், சரஸ்வதியும் சிறப்புடன் தங்கி இருக்கும் வாசல் இது. தவ வலிமை கொண்டு வரம் அருளக்கூடிய பெரியவர்கள் வாழ்த்திக்கொண்டு இருக்கும் வாசல் இது. மக்களின் விதியினைக் கூறும் வேதங்களும், ஆகமங்களும் எப்போதும் விளங்கும் வாசல் இது. யானை, குதிரை, தேர், காலாள் என்னும் நான்கு வகைப் படைகளும் எப்பொழுதும் சூழ்ந்து நிற்கும் வாசல் இது.

மன்னரிடம் அன்பு கொண்டிருக்கும் சேனைகளுக்கு நிதியினை அளந்து கொடுக்கும் வாசல் இது. அந்தணர் களுக்கும், புலவர்களுக்கும் பொன்னை வாரி வழங்கும் வாசல் இது. இவ்வுலகில் உள்ள எல்லா மன்னர்களும் வந்து வணங்கி

நிற்கும் வாசல் இது. மக்கள் எந்த நேரமும் கூட்டமாக நிற்கும் வண்ணம் கொடை முரசு, மண முரசு, வெற்றி முரசு மூன்றும் முழங்கிக் கொண்டே இருக்கும் அழகான வாசல் இது.

மதனவல்லி கேள்வி

வசனம்

இப்படி வளம் கூறிய குறத்தியைப் பார்த்து, மோகினியாகிய மதனவல்லி, நீயார்? என்று கேட்டாள்.

சகானா ராகம் - அட தாளம்

பல்லவி

வாசல் வளம் இங்கே
நேச முடனே சொல்லும்
மடந்தையே நீ யாரடி

அனுபல்லவி

தேசம்எங் கும்புகழ்
வீசும் எழில்தஞ்சை
வாசன்சர போஜிமக
ராசன் உயர்மனை - வாசல்

சரணங்கள்

வானுலக கத்துறு மேனகை யோஎன்று
வையகத் தோர்எண்ண மறுகு தொறும்சென்று
மானினி யார்கைக் குறிகள் சொல்லிஇன்று

வடிவம் உற்றிடு
மடமை மென்மயில்
எனமுன் வந்துபின்
இனிது கந்திட - வாசல் -1

கனத்திடு குறக்கூடை எடுக்கும்மின் னிடையும்
கைவீச் சுடன்அன்னம் அன்னமென் னடையும்
சினத்திடு வேள்கணை அனவிழிக் கடையும்

திருக ஆடவர்
மனது நாடொறும்
உருக மாமயில்
பெருக வந்தெழில் - வாசல் -2

மருவிநின் பேரொடு வளர்தேசப் பேரும்
மலைவளத் துடன்உங்கள் ஒருசாதிச் சீரும்
திருவும்நீ அறிந்திடும் நதிகளும் ஊரும்

திரமும் நீபெறும்
வரமும் மேல்அதன்
உரமும் நான்எதிர்
அறிய ஓதிடு - வாசல்

மறுகு-வீதி; மடமை-இளமை; அன்னம் அன்ன- அன்னம் போன்ற; வேள்-மன்மதன்; கணை-அம்பு; திரு-செல்வம்; திரம்-நிலை; உரம்-வலிமை;

இங்கே வந்து அன்புடன் வாசல் வளம் கூறுகின்ற பெண்ணே நீ யார் ?

நாடெங்கும் புகழ் பரப்பும் அழகு நிறைந்த தஞ்சை நகரில் வாழும் சரபோஜி மன்னரின் உயர் மாளிகையின் வாசல் வளம் கூறும் பெண்ணே நீ யார் ?

வானிலிருந்து வந்துதித்த மேனகையோ என இவ்வுலகினர் எண்ண, வீதி தோறும் சென்று, மான் போன்ற அழகிய பெண்களின் கைகளைப் பார்த்துக் குறி சொல்லிய வண்ணம் இன்று அழகிய வடிவு கொண்ட இளமையான மென்மயில் போல் வீட்டிற்கு வந்து நின்று அனைவர் மனமும் இனிமையாய் மகிழ்ந்திட வாசல் வளம் கூறும் பெண்ணே நீ யார் ?

பெரிய குறக்கூடையினைச் சுமந்துள்ள மின்னல் போன்ற இடையும், கையை வீசி நடக்கும் அன்னம் போன்ற மென்மையான நடையும், மன்மதனின் கோபம் மிகுந்த அம்பு போன்ற விழியோரமும் திருகி மறுக, ஆண்களின் மனம் நாள் தோறும் அதைக் கண்டு உருக அவர்களுக்கு உன்னிடம் பெருமளவு மையல் பெருக வந்து நின்று வாசல் வளம் கூறும் பெண்ணே நீ யார் ?

உனக்குப் பொருந்திய பெயர், நீ வசிக்கும் நாட்டின் பெயர், மலை வளம், உங்கள் சாதிச்சிறப்பு, செல்வம், உனக்குத் தெரிந்த நதிகள், ஊர்கள், உங்கள் நிலை, நீ பெற்றுள்ள வரம், அதன் வலிமை ஆகிய அனைத்தையும் நான் அறியும்படிக் கூறு பெண்ணே !

சாதி வளம்

வசனம்

இப்படிக் கேட்ட மோகினியைப் பார்த்துக் குறத்தி தன் குறக்குலத்தின் சிறப்பைக் கூறுகின்றாள்.

சௌராஷ்டிர ராகம் - திச்ர தாளம்

பல்லவி

எங்கள்குறச் சாதிவளம்
எடுத்திசைப்பேன் அம்மே - சாதிவளம்
எடுத்திசைப்பேன் அம்மே.

அனுபல்லவி

மங்களம்சேர் தஞ்சைநகர்ச்
சரபநர பாலன்
மகிழ்ச்சியுடன் ஆளும்இந்தப்
புவிக்குள்உயர் மின்னே - எங்கள்

சரணங்கள்

மானினொடு பன்றிமரை
ஒளிவிருந்து கொல்வோம்
வந்தெதிர்த்தோர் தங்களைமேல்
மிஞ்சவிடோம் வெல்வோம்
கானகத்திற் கிழங்குஆனை
மருப்பதனால் கெல்வோம்
கைக்குறிகள் மெய்க்குறிகள்
எக்குறியும் சொல்வோம் -எங்கள்-1

வாவும்ஒரு முயலைவிட்டு
மதக்களிற்றைப் பிடிப்போம்
மணலதனைத் தகவறுத்து
வருதயிலம் வடிப்போம்
மேவும்அவல் இடிப்பதுபோல்
உரலதனை இடிப்போம்
மேன்மைதனக்கு இழிவுவரின்
மிக அதற்குத் துடிப்போம் -எங்கள்-2

செந்திருமால் என்தனக்கு
மைத்துனன்காண் அம்மே
திங்கள்அணி சிவன்எனக்குத்
தமையன்முறை அம்மே
அந்தமிகும் கந்தன்எங்கள்
மருமகன்காண் அம்மே
அன்னநடை வள்ளிஎங்கள்
கன்னிகைகாண் அம்மே -எங்கள்-3

மாமனைமுன் கைப்பிடிப்போம்
கொழுந்தனொடு படுப்போம்
வாழும்எங்கள் சாதிமெத்த
மானமுள்ள சாதி
நாமமுறு மாமிதனைத்
தாய்எனவே மதிப்போம்
நாத்திஎனும் சொல்உரையோம்
போற்றிடுவோம் நீதி -எங்கள்-4

மரை-மான்; மருப்பு-தந்தம்; கெல்லுதல்-தோண்டுதல்; வாவும்-தாவும்; களிறு-ஆண் யானை; திங்கள்-சந்திரன்; அந்தம்-அழகு; நாமம்-அச்சம்;

எங்கள் குறச்சாதியின் சிறப்பினை எடுத்துக் கூறுகிறேன் அம்மா.

மங்களம் பெற்ற தஞ்சைநகர் மன்னர் சரபோஜி, மக்கள் மனம் மகிழ ஆட்சி செய்யும் இந்தச் சோழநாட்டில் வாழும் மின்னல் அனைய உயர்ந்த பெண்ணே ! எங்கள் சாதியின் சிறப்பினை உரைக்கின்றேன்.

மான், பன்றி, மரை எனும் ஒருவகை மான் ஆகியவற்றை ஒளிந்திருந்து கொல்வோம். எதிர்த்து வருவோர் யாராயினும் எங்களை வெல்வதற்கு இடம் கொடோம். நாங்களே வெல்வோம். காட்டினிலே உள்ள கிழங்கு வகைகளை யானைத் தந்தம் கொண்டு தோண்டி எடுப்போம். கைரேகை, உடற்குறிகள் என எக்குறிகளையும் பார்த்துப் பலன் சொல்வோம்.

தாவி ஓடுகின்ற முயல்களைப் பிடிக்க மாட்டோம். விட்டுவிடுவோம். மதம் கொண்ட ஆண் யானைகளையே பிடிப்போம். மணலை நன்றாக வறுத்துத் தைலம் வடித்தெடுப் போம். அவலை இடிப்பது போல உரலை இடிப்போம். எங்கள் மேன்மைக்கு இழிவு ஏற்பட்டால் மிகவும் வருந்தித் துடிப்போம். முயலை விட்டுவிட்டு யானையைப் பிடிப்பதை குறள்,

> "கான முயல் எய்தஅம்பினில் யானை
> பிழைத்த வேல்ஏந்தல் இனிது"

என்கின்றது.

செம்மையுள்ள திருமால் எனக்கு மைத்துனன் முறை. பிறையினை அணிந்துள்ள சிவபெருமான் எனக்கு அண்ணன் முறை. அழகு நிறைந்த முருகன் எங்கள் மருமகன். அன்னம்

போல் நடையழகு கொண்ட வள்ளி எங்கள் குறக் குலத்தில் தோன்றிய பெண் ஆவாள். வேடர் வடிவு தாங்கி சிவபெருமான் அர்ச்சுனனுடன் போர் செய்தான். அதனால் சிவன் வேடுவர்களாகிய எங்கள் தமையன், சிவனின் மைத்துனன் ஆகிய திருமால் எங்களுக்கும் மைத்துனன் முறை. எங்கள் குல வள்ளியை மணந்ததால் முருகன் எங்கள் மருமகன்.

மாமன் முறை உள்ளவர்களை மணம் புரிந்து கொள்வோம். கொழுந்தனொடு படுப்போம், எங்கள் சாதி முறைப்படி வாழும் எங்கள் குலம் மானம் மிக்கதாகும். நீங்கள் கண்டு அஞ்சும் மாமியாரை நாங்கள் தாய்போல் மதிப்போம், நாத்தி என்று சொல்லி வேறுபாடு காட்டாது நீதியுடன் போற்றுவோம். குறச்சாதிப் பெண்கள் கொழுந்தனோடு படுப்போம் எனப்பாடுவது குறவஞ்சி இலக்கிய மரபு ஆகும்.

மலைவளம்

வசனம்

அதன் பிறகு மலைவளம் கூறுகிறாள்

பைரவி ராகம் - ஆதி தாளம்

பல்லவி

மலைவளம் சொல்வேன்கேள் அம்மே - நானறிந்த
மலைவளம் சொல்வேன்கேள் அம்மே

அனுபல்லவி

சிலைவளம்கொள் சரபோஜி மன்னர்தென் தஞ்சைத்
திருநகர் தனில்வாழும் மருமலர்க் கோதாய்-மலைவளம்

சரணங்கள்

மல்லிகார்ச்சுனம் எனஓர் விண்டு
மனத்துஒன்று அதில் எண்ணிக் கொண்டு
மகிழ்ந்தேறி விழுந்தவர்கள் பண்டு
மதித்ததெல் லாம்அடைவர் கண்டு-மலைவளம்-1

சொல்லும்அதைப் புகழும்இந்த ஞாலம்
தொகுபணிக்கு மயில்களின்நீள் சாலம்
தோகைநிழல் உதவிஅனு கூலம்
தோற்றிடவே ஆற்றும்பகற் காலம்
-மலைவளம்-2

கனமாம் பொதியமலைச் சித்தர்
கருத்தினில் வெகுபரி சுத்தர்
கறைக்கண்டர் தமக்குஅவர் பத்தர்
காலங்கள் பலகண்ட நித்தர் -மலைவளம்-3

தினமும் சிவாகமம் படிப்பார்
சிந்தாந்த மேபெரிதாய் முடிப்பார்
செறிந்திடும்ஐம் புலன்களை அடிப்பார்
சிவபதம் நிலைபெறப் பிடிப்பார்
-மலைவளம்-4

இனும்அதில் ஒருநெல்லி அடுக்கும்
எடுத்துஅருந் திடின்மூப்பைத் தடுக்கும்
எழிலுறும் இளமையைக் கொடுக்கும்
இமையவர் உணவினைக் கெடுக்கும்
-மலைவளம்-5

தனுவாய் வளைந்ததுஒரு வெற்பு
தழலாய் எழுந்ததுஒரு வெற்பு
சலமாய் நிறைந்ததுஒரு வெற்பு
தனிக்குடை ஆனதுஒரு வெற்பு
-மலைவளம்-6

திருவுடன் ஒருமலை வாழும்
தேறுஇரு கழுகுஅதில் சூழும்
தெரிசிக்கின் அதைப்பிறப்பு ஏழும்
சேர்ந்துமேல் தொடராமல் ஆழும்
-மலைவளம்-7

தரணியில் பலஉள நாகம்
தகும்அதி சயங்கள்அ நேகம்
தம்நிகர் சரபோஜி மன்னர்
தஞ்சைக்கு அணிதரும் வஞ்சி-மலைவளம்-8

மருமலர் - மணமுள்ள மலர்; கோதை - மாலை; மல்லிகார்ச் சுனம் - ஆந்திர மாநிலத்தில் உள்ள ஸ்ரீசைல மலை; விண்டு - மலை; பணி-பாம்பு; தொகு - கூடும்; நீள்சாலம்- பெருங்கூட்டம்; கனம் - பெருமை; கறைக்கண்டர் - கழுத்தில் ஆலகால நஞ்சின் நீலக் கறையைக் கொண்டவர்; நித்தர் - நித்தமும் வாழ்பவர்; அடுக்கும் - அருகில் இருக்கும்; இமையவர் - தேவர்; தனு - வில்; வெற்பு - மலை; சலம் - நீர்; திரு - செல்வம், தெய்வீகம்; தெரிசிக்கின் - தரிசித்தால்; ஆழும் - அழியும்;

நான் அறிந்த மலைகளின் வளம் பற்றிச் சொல்கிறேன், அம்மா.

வேலைப்பாடு நிறைந்து சிறப்புடன் சிற்பங்கள் அமைந்து வளம்பெற்றுத் திகழும் சரபோஜி மன்னருக்கு உரிய தஞ்சைத் திருநகரில் வாழும், மணமுள்ள மலர் சூடிய பெண்ணே! நான் இனி மலைகளின் வளம் பற்றிச் சொல்கிறேன்.

மல்லிகார்ச்சுன மலை என்று ஒருமலை உண்டு மனத்தில் ஒன்றை அடையக் கருதிக்கொண்டு, முற்காலத்தில் அம் மலையின் மீதேறி விழுவார்கள். அவர்கள் விரும்பியதை எல்லாம் அடைவார்கள். மேற்குறிப்பிட்ட அந்த மலையை இந்த உலகமே புகழும். வெயில் சுடுகின்ற பகல் நேரங்களில் பாம்புக் கூட்டங்களுக்கு மயில்களின் பெருங்கூட்டம் தம் தோகையின் நிழலைத் தந்து உதவி செய்யும்.

பெருமை நிறைந்த பொதிகை மலைச்சித்தர் மிகவும் தூய்மையான கருத்துக்களைச் சொல்பவர், நீலகண்டரான சிவனின் பக்தர், நிரந்தரமாய் வாழும் அவர் பல காலங்களைக்

கண்டவர். அவர் தினமும் சிவ ஆகமங்களைப் படிப்பார். சைவ சித்தாந்தமே பெரிதென முடிவெடுக்க வைப்பார். உடனிருந்தே துயர் செய்யும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐம் புலன்களையும் தம் மனோ சக்தியால் அடக்கி வைப்பார். சிவபெருமான் பாதங்களையே, தாம் உயர்நிலை அடையத் துணையாகப் பிடிப்பார்.

அம்மலையில் ஒரு நெல்லிமரம் அருகே இருக்கும், அதன் கனியை எடுத்துத் தின்றால் அது மூப்பு வராமல் தடுக்கும், அழகு நிறைந்த இளமையைக் கொடுக்கும். தேவர்களின் உணவான அமுதத்தைத் தன் சுவையாலும், உயிர்காக்கும் தன்மையாலும் அது தோற்கடிக்கும்.

வில்லாக வளைந்தது சிவபெருமானின் மேரு என்னும் ஒருமலை, நெருப்பாக எரிந்த திருவண்ணாமலை எனும் ஒரு மலை, நீராக நிறைந்திருந்த தீர்த்தகிரி எனும் ஒருமலை, பெருமழைக்கு இணையற்ற குடையாய் இருந்த கோவர்த்தனகிரி எனும் ஒருமலை. செல்வச் சிறப்பு மிக்க திருக்கழுக்குன்றம் என்று ஒரு மலை உண்டு. அம்மலையை அதன் சிறப்பு உணர்ந்து இரண்டு கழுகுகள் சுற்றி வரும் அம்மலையினைக் கண்டு வணங்கினால் மனிதருக்கு வரும் ஏழு பிறவிகளும் தொடராமல் அழியும்.

உலகத்தில் மலைகள் பல உண்டு. அந்த மலைகளில் அதிசயங்கள் மிக உண்டு. தமக்குத் தாமே நிகரான சரபோஜி மன்னரின் தஞ்சைக்கு அழகு சேர்க்கும் குறவஞ்சியான, நான் அறிந்த மலைகளின் வளம் சொன்னேன்.

உன் சொந்த மலை எது

வசனம்

மோகினி உன் சொந்த மலை எது என்று கேட்கிறாள்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

நிலவுமதி புனைவேணிப் பிரக தீசர்
நிகழ்கருணை ஏற்று இனிய வரங்கள் பெற்றே
உலகுபுரந் தருள்சரப நிருபர் தஞ்சை
உயர்நகரில் அனம்போல நடந்து வந்து
திலகநுதல் மயில்போல நின்று நீடு
சிறந்தபசுங் கிளிபோலப் பேசும் மின்னே
குலவும்இந்த மலைகளுக்குள் உனது சொந்தக்
குடிசைஎந்த மலையில் அதைக்கூறு வாயே.

வேணி-சடை; நிருபர்-அரசர்; நுதல்-நெற்றி;

ஒளி திகழும் நிலவைச் சூடிய சடைமுடிகொண்ட பிரகதீசப் பெருமானின் அருளினால் நல்ல வரங்கள் பெற்று, உலகைக் காத்தருளும் சரபோஜி மன்னரின் தஞ்சை நகரினில் அன்னம் போல நடந்து வந்து பொட்டு வைத்த நெற்றியுடன் மயில்போல அழகுடன் நின்று கிளிபோலப் பேசும் மின்னல் பெண்ணே ! இப்புவியில் உள்ள மலைகளில் உன்னுடைய சொந்தக் குடிசை எந்த மலையில் உள்ளது என்று சொல்.

வாழும் மலை

ஆனந்த பைரவி ராகம் - திச்ரதாளம்

பல்லவி

குடிசைவைத்து வாழும் மலை
கூறுவன்பூங் கொடியே
கோகிலமே அனப்பெடையே
குலவும் இளம்பிடியே

சரணங்கள்

தங்கமகா மேருவினில்
தண்குடிசை தொடுத்தோம்
சாபமலை என்றுரைத்தார்
தாபமொடு விடுத்தோம்

சங்கரனார் கைலைமலை
தனில்உறையச் சென்றோம்
தவப்பூத கணங்கள்கண்டோம்
சிவப்ரீதி என்றோம்
-குடிசை-1

திங்கள்அணி காளத்தி
கண்டுஅதனை நயந்தோம்
திண்ணன்விழி பறித்ததுமுன்
இன்னது என்றார் பயந்தோம்
அம்குலவு குற்றால
மலையின்உறப் போனோம்
அருவியின்மூழ் கிடுவர்என்றார்
நழுவிவர லானோம்
-குடிசை-2

ஏறிவட வேங்கடத்தில்
இருக்கஇடம் பார்த்தோம்
இன்னதுமால் கொண்டமலை
என்றுரைத்தார் தீர்த்தோம்
ஈறில்உயர் பழனிமலை
இனிதெனவே குறித்தோம்
இடும்பன்மலை எனப்புகன்றார்
திடம்கொள்அதை வெறுத்தோம்
-குடிசை-3

தூறுமுகில் சூழும்ஒரு
தூயமலை தொட்டோம்
தூங்கல்மலை ஈங்கிதுஎன்றார்
ஆங்கதனை விட்டோம்
கூறுபுகழ்ச் சேரலன்தன்
குவடணைந்தோம் அப்பால்
கொல்லிஇது என்றுரைத்தார்
தள்ளிவந்தோம் இப்பால் -குடிசை-4

விராலிமலை சோலைமலை
சாமிமலை அம்மே
விளங்கும்எங்கள் குலவள்ளிக்கு
உகந்தளித்தோம் அம்மே
பிரான்மலையும் சிராமலையும்
பிறமலையும் அம்மே
பிறைமுடிமேல் வைத்திருக்கும்
பிரான்மலைகள் அம்மே -குடிசை-5

தராதலம்போற் றிடமேவும்
தஞ்சையில்எந் நாளும்
தங்குசர போஜிமன்னர்
சிந்தைமகிழ்ந்து ஆளும்
புராதனமா மலையாகிப்
புகழ்தவத்தோர் முந்தப்
பொருந்திவளர் நேரிஎங்கள்
சிறந்தமலை அம்மே -குடிசை-6

நேரிமலை மேல்குடிசை
நிலைக்கவைத்தோம் அம்மே
நீடும்அது எங்கள்குடி
தழைக்கவைத்தது அம்மே
தாரகைகள் போலமுத்தம்
தயங்கும்அதில் அம்மே
சந்தமுறும் நேரிஎங்கள்
சொந்தமலை அம்மே -குடிசை-7

கோகிலம் - குயில்; பிடி - பெண்யானை; சாபம் - வில்; பெரியோர் இடும் சாபம் எனச் சிலேடை; அம் - அழகு; மால் - மயக்கம், திருமால், சிலேடை; திடம் - வலிமை; தூறு - மழை தூறும்; தூங்கல் - யானை மலை, தூங்கும் மலை சிலேடை; குவடு - மலை; தராதலம் - உலகம்; புராதனம் - பழமை; நேரி- இம்மலை சோழநாட்டில் இருந்ததாம், அகத்திய முனிவரால் அமிழ்த்தப்பெற்றதாம்; தாரகை-விண்மீன்; முத்தம் - முத்து; சந்தம் - மணம்.

பூங்கொடி அனையவளே! குயிலே! பெண் அன்னமே! இளம் பெண் யானையே! நான் குடிசை கட்டி வாழும் மலைபற்றிக் கூறுகிறேன் கேள்.

நாங்கள் தங்கி வாழ்வதற்காகப் பொன்மயமான மேருமலையில் குளிர்ச்சியாய் குடிசை அமைத்தோம். முப்புர தகனத்தின் போது சிவபெருமானின் வில்லாக அம்மலை அமைந்ததால் அதனைச் சாபமுடைய மலை என்றார்கள். வருத்தத்துடன் அம்மலையினை விட்டு வந்தோம். சிவ பெருமானின் கயிலாய மலையில் வாழச்சென்றோம். அங்கே தவம்புரியும் பூதகணங்களைக் கண்டோம். அவையே சிவனுக்குப் பிரியமானவை என எண்ணி வந்துவிட்டோம்.

நிலவு உலவுகின்ற திருக்காளத்தி மலையைக் கண்டு அதில் வசிக்க விரும்பினோம், கண்ணப்பர் எனப் புகழ் பெற்ற திண்ணனின் கண்ணை இறைவன் முன்பு பறித்தது இம்மலையில்தான் என்றார்கள். பயந்து அம்மலையை விட்டுவிட்டோம். அழகு நிலவும் குற்றால மலையில் வாழப் போனோம். அங்குள்ள அருவியில் மூழ்கிடுவீர்கள் என்றார்கள். அவ்விடத்தைவிட்டு நழுவி வந்துவிட்டோம்.

வடவேங்கட மலையில் வாழ்ந்திருக்க இடம் தேடினோம். இது திருமால் குடிகொண்ட மலை என்றனர். மயக்கம் தரும் மலை என்று அம்மலையையும் விட்டு வந்து விட்டோம். முடிவற்ற உயர்ந்த பழனிமலை நல்ல இடம் என எண்ணிப் புறப்பட்டோம். அது இடும்பன் என்ற அசுரன் மலை என்றார்கள். வலிய அம்மலையையும் வெறுத்து விட்டோம்.

மழைத்தூற்றல்களைப் பொழியும் மேகங்கள் சூழ்ந்த யானை மலைக்குச் சென்றோம். அதைத் தூங்கல் மலை என்றனர். அது தூங்கவைத்து விடுமே என்று விட்டு விட்டோம். புகழ் நிறைந்த சேரர்களின் மலைக்குப் போனோம். அதனைக் கொல்லிமலை என்றார்கள். அதனால் கொன்றுவிடுமே என்று விலகி வந்துவிட்டோம்.

விராலிமலை, சோலைமலை, சாமிமலை ஆகிய மலைகளை எங்கள் குறக்குலத்தில் பிறந்த வள்ளிக்குச் சீதனமாகக் கொடுத்துவிட்டோம். பிரான்மலை, திருச்சிராப்பள்ளி மலை ஆகியவை சந்திரனின் பிறையைத் தலையில் சூடியுள்ள சிவபெருமானுக்கு உரியவை. எனவே அம்மலைகளுக்கு நாங்கள் குடிபோகவில்லை.

உலகம் போற்றிடத் தஞ்சையில் என்றும் பொருந்தி வாழும் சரபோஜி மன்னர் உள்ளம் நிறைந்த மகிழ்ச்சியுடன் ஆட்சிபுரியும் பழம்பெரு மலை, உலகம் புகழும் நல்ல தவமுடையோர் முந்திக்கொண்டு விரும்பி வந்து தங்கி வாழும் நேரிமலையே எங்கள் சிறந்த மலையாகும். நேரிமலையின் மேல் எங்கள் குடிசையினை நிலைத்திருக்க அமைத்து உள்ளோம். அது எங்கள் குறக்குடியை நெடிது தழைத்திருக்க வைத்தது. அம்மலையில் விண்மீன்களைப் போன்ற முத்துக்கள் நிறைய உள்ளன. நறுமணம் நிரம்பிய அந்த நேரிமலையே எங்கள் மலை ஆகும்.

குறத்தி தலமகிமை கூறுதல்

வசனம்

இப்படி சொந்த மலை கூறிய குறத்தி தலமகிமை சொல்லுகிறாள்.,

அசாவேரி ராகம் - ஆதி தாளம்

பல்லவி

தாரணியில் நான்அறிந்த
　　தலங்களைக்கேள் அம்மே
நான் அறிந்த
　　தலங்களைக்கேள் அம்மே

அனுபல்லவி

சீருறுதென் தஞ்சைநகர்ச்
　　சரபோஜி மன்னர்
செழிக்கஅருள் சரபேசன்
　　திரிபுவனம் அறிவேன் - தாரணி

சரணங்கள்

தேசுதரும் தழல்மலையாய்ச்
சிவன்விளங்க மாலும்
திசைமுகனும் பாதம்முடி
தேடுஅருணை யுடனே
நேசமுடன் இமயவல்லி
நீடும்ஒரு மாவின்
நிழலிருந்து தவம்புரிஏ
காம்பரம் நான் அறிவேன் -தாரணி-1

குலவும்இரா வணன்கரத்தால்
எடுத்தசிவ லிங்கம்
கோவினது செவியுருவாம்
கோகரணத் துடனே
இகலுறு வரணைஅசி
இருநதியின் பேரால்
இசைவார ணாசிஎனும்
எழிற்காசி யறிவேன் -தாரணி-2

கனத்தமறக் குலத்தினர்சங்
கரன்விழியில் தமது
கண்ணையெடுத் தணிந்ததிருக்
காளத்தி யுடனே
சினத்தின்மிகு திரிபுரத்தைக்
கணப்பொழுதில் ஈசன்
சிறுநகைசெய்து எரித்திருக்கும்
திருஅதிகை அறிவேன் -தாரணி-3

பதஞ்சலியும் உயர்புலிக்காற்
பண்ணவனும் காணப்
பரமசிவன் நடம்புரியும்
சிதம்பரத்தி னுடனே

கதம்கொடுசூழ் கடலுலகைக்
        கட்டழிக்கும் போதோர்
கப்பல்வடி வாய்மிதந்த
        காழிநகர் அறிவேன்   -தாரணி-4

ஒருகோவி லிடைமூன்று
        குளமிருக்கும் அந்த
ஊரறிவேன் பேரறிவேன்
        ஓதும்அத னுடனே
கருதும்ஒரு மறையவனைத்
        தொடர்காலன் தன்னைக்
கண்ணுதல்கால் கொண்டுதைத்த
        திருக்கடவூர் அறிவேன்   -தாரணி-5

உமைமயிலாய்ப் பூசித்த
        ஒருதலத்தி னுடனே
ஓங்கிடும்ஓர் அரசுசிவன்
        கோயில்உறை தலமும்
கமலைதவம் செய்தலமும்
        இடைமருதும் குடந்தைக்
கடிநகரும் ஏரண்ட
        நகரமும்நான் அறிவேன்   -தாரணி-6

ஐயாறும் சிரகிரியும்
        திருவரங்க நகரும்
ஆனைக்கா வுடன்மதுரைப்
        பெரும்பதியும் இராமன்
மெய்யான பக்தியொடு
        சிவனைஅருச் சித்து
வேண்டுவரம் பெற்றஇரா
        மேசுரமும் அறிவேன்   -தாரணி-7

சரபேசன்-சிவன்; திசைமுகன்-பிரமன்; இமயவல்லி-பார்வதி; ஏகாம்பரம்-காஞ்சிபுரம்; கோ-பசு; கோகரணம்-சிவத்தலம்; இகல்-மாறுபாடு; வரணை, அசி-காசியில் ஓடும்

நதிகள்; இசை-புகழ்; புலிக்கால் முனிவர்-வியாக்கிர பாதமுனிவர்; பண்ணவர்-முனிவர்; கதம்-கோபம்; காழிநகர்-சீர்காழி; சீர்காழி- தோணிபுரம் என்றும் வழங்கப்படும். காலன்-எமன்; கண்ணுதல்-நெற்றிக்கண்; கமலை-திருமகள், இலக்குமி; கடி-காவல், மணம்; ஏரண்ட நகரம்-கொட்டையூர்; சிரகிரி-திருசிரமலை.

அம்மா, இவ்வுலகில் நான் அறிந்த தலங்களைப் பற்றிச் சொல்கிறேன் கேள்.

சிறப்புமிக்க தஞ்சை மன்னர் சரபோஜி வளத்துடன் வாழ்ந்திருக்க அருள்புரியும் சிவபெருமானுக்கு உரிய திரிபுவனம் என்ற ஊரை நான் அறிவேன்.

ஒளிவீசும் நெருப்பு மலையாகச் சிவபெருமான் விளங்கி நிற்கத் திருமாலும், பிரமனும் சிவனுடைய அடி, முடி ஆகியவற்றைத் தேடிச் சென்ற திருவண்ணாமலையை நான் அறிவேன். இமய மலையின் மகளான பார்வதி சிவனை அடைய விரும்பி ஒரு மாமர நிழலில் வீற்றிருந்து தவம்புரியும் ஏகாம்பரம் என்னும் காஞ்சி நகரையும் அறிவேன்.

இராவணன் தன் கையில் எடுத்த சிவலிங்கம் பசுவின் காது போன்று இருக்கும் திருக்கோகர்ணம், இரண்டு மாறுபட்ட வரணை, அசி ஆகிய நதிகள் ஓடுவதால் வாரணாசி என்று புகழுடன் அழைக்கப்படும் அழகான காசி ஆகிய தலங்களை அறிவேன். இராவணன் கயிலை சென்று சிவபெருமானிடம் பெற்று வந்த சிவலிங்கத்தை பிள்ளையார் தரையில் வைத்துவிட்டார். அதை எடுக்க இராவணன் முயன்றபோது அது பசுவின் காதுபோலக் குழைந்தது. அதை அகற்ற முடியவில்லை. அத்தலமே திருக்கோகர்ணம் ஆகும்.

பெரும் வீரர்களாகிய வேடர் குலத்தில் பிறந்த கண்ணப்ப நாயனார் சிவபெருமானின் புண்பட்ட விழியில் தன் கண்ணை அம்பினால் தோண்டியெடுத்து அணிவித்த திருக்காளத்தி, மூன்று கொடிய அசுரர்களின் பொன், வெள்ளி,

இரும்பால் ஆன மூன்று கோட்டைகளைத் தன் உள்ளத்தில் மூண்டெழுந்த கோபத்தின் காரணமாய் புன்சிரிப்பால் எரித்து அழித்த திருவதிகை வீரட்டானம் ஆகிய தலங்களையும் அறிவேன்.

பதஞ்சலி முனிவரும், புலிக்கால் முனிவரும் கண்டு மகிழப் பரமசிவன் நடனம் புரியும் சிதம்பரம், ஊழிக் காலத்தில் கடல் கோபத்துடன் உலகத்தைச் சூழ்ந்து கொண்டு அழித்தபோது ஒரு தோணி வடிவாய் மிதந்து தப்பிய சீர்காழி நகரம் ஆகிய தலங்களையும் அறிவேன். இதன் காரணமாகவே சீர்காழிக்கு தோணிபுரம் என்ற பெயர் ஏற்பட்டது.

முக்குளங்களான சோம புஷ்கரணி, சூரிய புஷ்கரணி, அக்கினி புஷ்கரணி இவை அமைந்த கோயில் உள்ள ஊர் திருவெண்காடு ஆகும். அந்த ஊரையும், அதன் பேரையும் அறிவேன். (திருமூலரின் தாய் தந்தையர் இந்த முக்குளங்களில் மூழ்கி எழுந்த பின்னரே திருமூலர் பிறந்ததாகவும் ஒரு செய்தி உண்டு) அவ்வூர் தவிர சிவனையே தன் கருத்தில் இருத்தி இருந்த அந்தணன்ான் மார்க்கண்டேயனின் உயிரைப் பறிக்கத் தொடர்ந்து வந்த எமனை நெற்றிக் கண்ணனாகிய சிவபிரான் காலால் உதைத்த திருக்கடவூரையும் அறிவேன்.

மயில் வடிவினில் உமையவள் ஈசனைப் பூசித்த மாயூரம் என்னும் தலம், சிவபெருமான் ஓங்கி உயர்ந்த ஓர் அரசமர நிழலில் கோயில் கொண்டு உறையும் திருவாவடுதுறை என்னும் தலம், இலக்குமி தவம் புரியும் திருஆரூர், திருவிடைமருதூர், குடந்தை, ஏரண்ட நகரம் என்று அழைக்கப்படும் கொட்டையூர் ஆகியவற்றையும் அறிவேன்.

திருவையாறு, சிரசிகிற திருவரங்கம், திருவானைக்கா, பெருநகர் மதுரை, இராமன் உண்மையான பக்தியுடன் சிவனைத் துதித்து வேண்டிய வரங்களைப் பெற்ற இராமேசுவரம் ஆகிய தலங்களை நான் அறிவேன்.

நதி வளம்

வசனம்

அதன் பிறகு நதி வளம் சொல்லுகிறாள்.

மோகன ராகம் - திச்ர தாளம்

பல்லவி

நான்அறிந்த நதிகள்எல்லாம்
நயந்துரைப்பேன் அம்மே
நதிகள் எல்லாம்
நயந்துரைப்பேன் அம்மே

அனுபல்லவி

வானவர்போற் றிடும்தஞ்சை
நீடுசர போஜி
மன்னவர்காத் திடும்இந்த
மன்னுபுவி மீதே - நானறிந்த

சரணங்கள்

பன்னிடுதாம் பிரவருணி பரவுபெரு வைகை
பொன்னிநதி முத்தாறு புகழ்ந்திடுபா லாறு
சொன்னமுகி கம்பைநதி துலங்கிடுசே யாறு
கன்னிநெடு யமுனைநதி கண்டறிவேன் அம்மே
-நானறிந்த-1

பொங்குதுங்க பத்திரையே போற்றும்நரு மதையே
மங்களம்செய் கெடிலநதி மருவுகோதா விரியே
சங்கநதி கபிலநதி சரஸ்வதிகிட் டினையே
கங்கைநதி யாதிநதி கண்டறிவேன் அம்மே
-நானறிந்த-2

இந்தநெடு நதிகள்எல்லாம் மூழ்கிவந்தேன் இங்கே
முந்திஒரு சோழன்மயல் மூண்டகொடும் பிணியே
சிந்திடச்சேர்த்து இன்பம்அருள் சிவகங்கை தனிலே
அந்தமிலா வினைதீர்தற்கு ஆடவந்தேன் அம்மே
-நானறிந்த-3

பன்னிடும்-பேசப்படும்; பொன்னி-காவிரி; முத்தாறு-மணிமுத்தாறு; சொர்ணமுகி-திருக்காளத்தியில் ஓடும் பொன் முகரியாறு; கம்பை-காஞ்சி அருகே உள்ள ஆறு; கபிலநதி-கர்நாடகத்தில் உள்ளது; கிட்டினை-கிருஷ்ணாநதி; சிந்திட-நீங்கிட; அந்தம்-முடிவு.

நான் அறிந்த நதிகளைப் பற்றி நயமாகச் சொல்கிறேன். தேவர்களும் போற்றும் தஞ்சைச் சரபோஜி மன்னர் நெடிது காத்திடும், நிலைபேறுடைய இந்த உலகில் ஓடும் ஆறுகளைப் பற்றிக் கூறுகிறேன் அம்மா.

மக்களால் புகழ்ந்து பேசப்படும் தாமிரபரணி, பெருகிப் பரவும் வைகையாறு, காவிரியாறு, மணிமுத்தாறு, உலகம் புகழும் பாலாறு, சொர்ணமுகியாறு, சம்பையாறு, வளமிக்க சேயாறு, மாசுபடாது என்றும் தூய்மையுடன் விளங்கும் யமுனை நதி இவைகளை எல்லாம் பார்த்து அறிந்துள்ளேன்.

பொங்கிப் பெருகும் துங்க பத்திரை நதி, உலகம் போற்றும் நருமதை நதி, மங்களமே செய்யும் கெடிலம் ஆறு, பூமியில் பொருந்தியோடும் கோதாவரி ஆறு, துங்கநதி, கபிலநதி, சரஸ்வதி நதி, கிருஷ்ணா நதி, கங்கை நதி முதலான நதிகள் பலவற்றையும் நான் அறிவேன்.

இந்தப் பெருநதிகளில் எல்லாம் நீராடி இங்கே வந்துள்ளேன். முன்னர் சோழ மன்னருள் ஒருவராகிய கரிகாலனுக்கு ஏற்பட்ட கொடிய நோய் தீரச் செய்து இன்பமளித்த இத்தஞ்சை நகரிலுள்ள சிவகங்கை என்னும் குளத்தில் முடிவில்லாத என் கர்மவினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக, நீராட வந்தேன்.

குறத்தி தேசவளம் கூறுதல்

வசனம்

அதன்பிறகு தேசவளம் சொல்லுகிறாள்.

சங்கராபரண ராகம் - திச்ரதாளம்

பல்லவி

தேசங்கள் மருவிய பேரும் வளமையும்
தெரியக் கூறுவன் மின்னே - தேசங்கள்

அனுபல்லவி

வாச மலர்ச்சோலை சூழும் உயர்தஞ்சை
வாழும் சரபோஜி மன்னவர் போற்றிடு - தேசங்கள்

சரணங்கள்

வங்க தேசமோ டரபி குச்சரம்
மாக தம்புகழ்வி தேகமே
துங்கம் உற்றிடு கொங்க ணம்திகழ்
துளுவ தேசம்எனும் தேகமே
சிங்க ளம்கவு டம்க லிங்கம்நல்
தெலுங்கம் நீடுவி வேகமே
இங்கி தம்தரு சோழ தேசமும்
இலங்கு தேசம்அ நேகமே -தேசங்கள்-1

அங்க தேசமதில் ஆறு கோட்டையுண்டு
அவற்றுள் ஒன்றுஉறு வட்டமே
தங்கும் அன்னதில் காவல் ஐங்கரன்
சதுர மேல்ஒன்று திட்டமே
பொங்கும் அன்னது காவல் செய்வது
புகலும் நான்முகற்கு இட்டமே
மங்க ளம்கொள்மேல் ஒன்று வெண்பிறை
வடிவம் மால்அதில் பட்டமே
-தேசங்கள்-2

மீது கோணம்ஓர் மூன்றில் ஒன்றதின்
　　மேல்உ ருத்திரன் நீடுமே
ஓதும் மேல்இரு மூன்று கோணத்துஒன்று
　　ஓங்கும் ஈசுரன் கூடுமே
ஏத மில்அதன் மூன்று வட்டம்ஒன்று
　　இறைச தாசிவன் ஆடுமே
போதும் இன்னவை மூலம் ஆதிய
　　பொருந்து நாமங்கள் சூடுமே

-தேசங்கள்-3

குச்சரம்-கூர்ஜரம், குஜராத்; மாகதம்-மகதநாடு; விதேகம்-மிதிலையைத் தலைநகராகக் கொண்ட நாடு; கவுடம்-வங்கப் பகுதியில் ஒருநாடு; துங்கம்-உயர்வான; தேகம்-தேசம்; அங்கதேசம்-ஒருநாடு, இங்கே உடலைக் குறிப்பிடுகிறது.

நாடுகள் அனைத்தின் பெயர், வளம் ஆகியவற்றை உனக்கு விளங்கக் கூறுகிறேன் பெண்ணே. மணமிக்க மலர்ச் சோலைகள் சூழ்ந்துள்ள உயர்வான தஞ்சை நகரில் வாழும் சரபோஜி மனனர் புகழும் நாடுகள் பற்றி விளக்கமாகக் கூறுகிறேன்.

வங்க தேசம், அரபுநாடு, குஜராத், மகதநாடு, புகழுக்குரிய விதேகநாடு, உயர்வுள்ள கொங்கணநாடு, வளம் திகழும் துளுவநாடு, சிங்களநாடு, கவுடதேசம், கலிங்க நாடு, நல்ல தெலுங்குநாடு, பெரிய விவேகநாடு, மக்கள் வாழச் சிறந்த சோழநாடு என உலகில் உள்ள நாடுகள் பலவாகும்.

அங்கதேசத்தில் ஆறு கோட்டைகள் உண்டு. ஒரு கோட்டை வட்ட வடிவமானது. அதில் தங்கும் காவலன் ஐந்து கரங்களை உடையவன். அதற்கு மேல் திடமான நாற்சதுரக் கோட்டை ஒன்று உண்டு. அதைக் காத்திருப்பது வேதம் உரைக்கும் நான்முகனுக்கு விருப்பம் உடைய செயலாகும். அதற்குமேல் மங்கலமான வெண்பிறை வடிவக் கோட்டை

ஒன்று உள்ளது. அக்கோட்டைக்குப் பட்டத்து உரிமை கொண்டவர் திருமால். இப்பாடல் யோகிகள் கூறும் உடலின் ஆதார மையங்களைக் குறிப்பிடுகிறது. அங்கதேசம் எனப்படுவது மனிதனின் உடல் மூலாதாரம், சுவாதிஷ்ட் டானம், மணிபூரகம், அனாகதம், விசுக்தி, ஆக்ஞை எனப்படும் ஆறும் ஆறு கோட்டைகள் இதில் மூலாதாரம் வட்ட வடிவமானது இதன் காவல் தெய்வம் ஐங்கரன் ஆகிய பிள்ளையார். சதுர வடிவமானது சுவாதிஷ்ட்டானம் இதன் தெய்வம் பிரமன், மணிபூரகம் பிறைவடிவில் அமைந்தது இதன் தெய்வம் திருமால்.

அதற்கும் மேல் முக்கோண வடிவக்கோட்டை உள்ளது. அதற்கு அதிகாரி ருத்தரன். இங்கு குறிப்பிட்ட அதன்மேல் ஆறுகோண வடிவக்கோட்டை ஒன்று உள்ளது. அங்கு கூடி இருந்து ஆள்பவர் ஈசுவரன். குறைவற்ற அதற்கு மேல் மூன்று வட்டங்கள் இணைந்த வடிவில் கோட்டை ஒன்று உள்ளது. அதன் இறைவன் சதாசிவன். முக்கோண வடிவமுடையது அனாகதம். கழுத்தின் முடிச்சில் உள்ளது விசுக்தி, இது அறுகோண வடிவம் உடையது. புருவ மத்தியில் மூன்று வட்டங்கள் இணைந்த தோற்றம் அளிப்பது ஆக்ஞை ஆகும்.

குறத்தி சோழநாட்டு வளம் கூறுதல்

கேதார கௌளை ராகம் - ஆதி தாளம்

பல்லவி

சோழ நாட்டின் வளமை உனக்குநான்
சொல்லுவேன் கேளடி மானே - சோழ

அனுபல்லவி

வாழும் உயர்மதில் தஞ்சைச் சரபோஜி
மகராஜன் மனுநூல்சொல் முறையே உளமகிழ்ந்து
-சோழ

சரணங்கள்

நாடு தனில்ஊர்கள் எல்லாம் நகரங்கள்
        நண்ணிடும் அந்நகர் தம்மில் இலங்கிடும்
வீடுகள் யாவையும் சந்தனத் தாருவின்
        மேலிடும் உத்தரம் தூண்கள் இசைந்திடும்
மாடமா ளிகைகளும் நீணிலா முற்றமும்
        வாதாய னங்களும் ஆகிவிளங்கிடும்
நீடும்அம் மாளிகை எங்கும் மனிதரும்
        நெல்லும் மணிகளும் பொன்னும் மலிந்திடும்
-சோழ-1

நகரங்கள் தோறும் மருவி இருக்கின்ற
        நால்வகைச் சாதியி னோரும் பிறர்களும்
தகும்அவர் தங்கட்கு இசையும் தொழிலொடு
        சந்ததம் வாழ்வர்கள் மங்கள மாகவே
புகலும்தே வாலயம் எங்கும்நல் மண்டபம்
        போற்றும் விமானம்கோ புரங்களெல்லாம்
பொன்னின்
சிகரம் இலங்கும்எந் நாளும் துலங்கிடும்
        தேரும் உயர்திரு விழாவும் நடந்திடும் -சோழ-2

நன்னக ரின்புறம் எங்கும் மலர்க்காவும்
        நளினத் தடாகமும் நதியும் வயல்களில்
கன்னல் எனச்செழுஞ் செந்நெல் பொலிந்திடும்
        கன்னல்கள் யாவும் கமுகின் எழுந்திடும்
மின்னிடை யார்துடை காட்டும் கதலியும்
        மேனி யழகினைக் காட்டும் தளிர்மாவும்
அன்னவர் கொங்கை எழில்காட்டு இளநீர்கள்
        அங்குறு தெங்கமும் எங்கும் நெருங்கிடும்.
-சோழ-3

சந்தனத்தாரு-சந்தன மரம்; வாதாயனம்-காற்று வரும் வழி, பலகணி; சந்ததம்-எப்போதும்; மலர்க்கா-மலர் சோலை; நளினம்-தாமரை; கன்னல்-கரும்பு; கமுகு-பாக்கு; கதலி-வாழை; தெங்கம்-தென்னை.

சோழநாட்டின் வளம் பற்றிச் சொல்கிறேன் கேளடி மானே! உயர்ந்த மதில்களால் சிறந்த தஞ்சை நகரில் மனுதர்ம நூல் கூறும் நெறியில் சரபோஜி மன்னர் உள்ள மகிழ்ச்சியுடன் வாழும் சோழநாட்டின் வளம் கூறுகிறேன்.

சோழநாட்டின்கண் அமைந்த ஊர்கள் அனைத்தும் நகரங்கள் போல் வசதிகள் நிறைந்து பெருமையுடன் விளங்கும். அங்கு அமைந்துள்ள வீடுகள் எல்லாம் சந்தன மரத்தாலான உயர்ந்த உத்தரங்களும், தூண்களும் கொண்டு கட்டப்பட்டிருக்கும். அங்கே மாடமாளிகைகளும், பெரிய நிலாமுற்றங்களும், காற்று வரக்கூடிய பலகணிகளும் நிறைந்து விளங்கும். பெரிய அழகிய மாளிகைகளில் மணிகளை நிகர்த்த நெல்லும் பிற தானிய மணிகளும், பொன்னும் நிறைந்திருக்கும்.

நகரங்களில் வாழ்கின்ற நால்வகைச் சாதியினரான அந்தணர், வீரர், வணிகர், வேளாளர் ஆகியோரும், மற்றவர்களும் அவரவர்க்குப் பிடித்த பொருத்தமான தொழில்களைச் செய்துகொண்டு எப்போதும் மங்கலமாக வாழ்ந்து வருகின்றனர். கோயில்களில் எல்லாம் மண்டபங்கள், போற்றும் விமானங்கள், கோபுரங்கள் அனைத்தும் பொற் கலசங்கள் அமைந்து விளங்கும். அனைத்து நாட்களிலும் தேரும் உயர்திருவிழாக்களும் நடந்த வண்ணம் இருக்கும்.

நல்ல நகரங்களின் வெளிப்புறம் எங்கும் மலர்ச் சோலைகளும், தாமரைக் குளங்களும், ஆறுகளும் காணப்படும். வயல்களிலே விளைந்த நெற்கதிர்கள் கரும்பு போலப் பொலிவுடன் திகழும், கரும்புகளோ பாக்கு மரங்களைப் போன்று விளங்கும். மின்னலை ஒத்த இடையினைக் கொண்ட பெண்களின் தொடை போல இருக்கும் வாழையும், அவர்கள் உடலின் அழகினைக் காட்டும் இளந்தளிர்களைக் கொண்ட மாமரங்களும், அப்பெண்களின் முலைகளைப் போல் அழகு கொண்ட இளநீர்கள் நிறைந்த தென்னை மரங்களும் எங்கும் மிக நெருக்கமாகக் காட்சி அளிக்கும்.

மதனவல்லி வினாவுதல்

வசனம்

பின் மோகினியானவள் குறத்தியைப் பார்த்துக் கேட்கிறாள்.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பலகலைகள் உணர்ந்ததஞ்சைச் சரபோஜி
மன்னவர்தம் பார்மேல் உள்ள
மலைவளமே முதலான வளங்களெலாம்
எடுத்தெனக்கு வளமாச் சொன்னாய்
சிலைவளம்கொள் நுதல்அணங்கே என்னஎன்ன
தேசங்கள் சென்றாய் அங்கே
இலகுளவர்க்குக் குறியுரைத்தாய் அவர்கள்
என்ன
கொடுத்திட்டார் இசைவாய்ச் சொல்லே.

சிலை-வில்; அணங்கு-பெண்.

பல கலைகள் கற்றறிந்துள்ள தஞ்சைச் சரபோஜி மன்னரின் உலகத்தில் உள்ள மலைவளம் முதலியவற்றை எனக்கு எடுத்துச் சொன்னாய். வில் அனைய நெற்றியினை உடைய பெண்ணே ! நீ எந்த எந்த நாடுகளுக்குச் சென்றாய்? அங்கே வாழ்கின்ற யாருக்கெல்லாம் குறிசொன்னாய்? அவர்கள் உனக்கு என்ன பரிசில்கள் கொடுத்தார்கள்? இதமாகச் சொல்.

குறத்தி பெற்ற வரிசைகளைக் கூறுதல்

வசனம்

அப்படிக் கேட்ட மோகினிக்குக் குறத்தி சொல்லுகிறாள்.

சுத்த சாவேரி ராகம் - ஆதி தாளம்

பல்லவி

சொன்ன குறிகளும் பெற்ற வரிசையும்
சொல்லுகி றேனடி கண்ணே - சொன்ன

அனுபல்லவி

கொங்கு தேசமுதல் எங்கும் ஏகிமுன்
குறியு ரைத்தனன் அங்கே
கோதை மார்மன மகிழ்ந்து மாநிதி
குலவு நற்றுகில் ஈந்தார்- சொன்ன

சரணங்கள்

கங்கை மா்தினுக்கு உனக்கொர் காதலன்
கைகள் ஆறிரண் டுடனே
கடிது தோன்றுவன் எனஉ ரைத்தனன்
சுடிகை இன்னது தந்தாள் - சொன்ன-1

மங்க ளம்கொள்சீ மந்தி னிக்குஉன்
மணாளன் வந்திடும் என்று
மலர்க்கை பார்த்துரைத் தேன்எ னக்குஅவள்
கனத்த பொற்குடம் ஈந்தாள்-சொன்ன-2

அங்க யற்கணாள் செங்கை பார்த்துமேல்
அரன்உ னக்குஇறை ஆவன்என்று
அறிந்து ரைத்தனன் மகிழ்ந்துஎ னக்குஅவள்
அளவி லாவரிசை தந்தாள் -சொன்ன-3

தண்ம லர்ப்புனல் அகழி சூழ்ந்திடும்
தஞ்சை யாம்இது தன்னில்
தாம ரைத்திருக் கோயில் மேவிய
தையல் போல்வளர் மின்னே-சொன்ன-4

நண்ணி அங்கொரு தெலுங்க மானினி
நாசெய் சூடுஎனச் சொன்னாள்
நாடி நற்குறி ஓதி னேன்இந்த
நாசி காபரணம் ஈந்தாள் -சொன்ன-5

வன்ன மார்ஒரு மராட மாதுமஜ
ஹாத்ப ஹாவ்கே என்றாள்
மற்ற வட்குஇசை கைக்கு றிக்குஅவள்
வச்சி ரத்தொடி தந்தாள் -சொன்ன-6

கன்னி இங்கொரு கன்ன டப்பெண்நன
கையின நோடே என்றாள்
கருதுஅ வட்குஇசை குறித னக்குஅவள்
காதின் ஓலைஅ ளித்தாள் -சொன்ன-7

அண்ணல் அம்கொள்ஓர் துலுக்க வஞ்சிமே
ஹாத்தேக்கர் போல்நா என்றாள்
அன்ன கைக்குறி சொன்ன தற்குஅவள்
மின்னும் ஆரம்அ ளித்தாள் -சொன்ன-8

ஒண்ணு தல்பெறும் இங்கி லீஷ்மாது
ஒருத்தி லுக்மைஹாண்ட் என்றாள்
ஓதி னேன்அவள் பாணி ரேகைக்கண்டு
உதவி னாள்இந்த மேகலை -சொன்ன-9

கோதை-மலர்மாலை: துகில்-ஆடை; கங்கைமாது-கங்கையாகிய பெண், கங்கை முருகனுக்கு அன்னை முறை; காதலன் - அன்பு மகன்: சுடிகை - தலையிலணியும் ஓர் ஆபரணம்: சீமந்தனி - ஒரு கற்பரசி; அங்கயற்கண்ணாள்-மீனாட்சி; அரன் - சிவன்; இறை - நாயகன், தலைவன்; வரிசை-பரிசு; தாமரைத் தையல் - இலக்குமி; மானினி - பெண்; மான்-மான் போன்ற பெண்; நாசிகாபரணம் - மூக்குத்தி; மராடம்-மராட்டியம்; வச்சிரத்தொடி-வைர வளையல்;

கண்ணே! நான் சொன்ன குறிகளையும் பெற்ற பரிசுகளையும் பற்றிச் சொல்கிறேன். கொங்குநாடு முதல் எல்லா நாடுகளுக்கும் சென்று குறி சொன்னேன். அங்கே மலர்மாலை சூடிய மங்கையர் மனம் மகிழ்ந்து பெருநிதி, நல்ல ஆடைகள் முதலியவற்றைத் தந்தார்கள்.

கங்கைப் பெண்ணுக்கு, உனக்கு பன்னிரண்டு கைகளுடன் அன்பு மகன் ஒருவன் விரைவில் பிறப்பான் எனக் குறி சொன்னேன். அவள் எனக்குத் தலையில் அணியும் உச்சிச் சுடிகை என்னும் ஆபரணத்தைப் பரிசாகத் தந்தாள். மங்கலம் நிறைந்த கற்பரசியாகிய சீமந்தனிக்கு உன் கணவன் உறுதியாக வந்துவிடுவான் என்று அவள் மலரனைய கையைப் பார்த்துச் சொன்னேன். அவள் எனக்கு கனத்த பொற்குடம் தந்தாள்.

அங்கயற் கண்ணம்மையின் சிவந்த கையைப் பார்த்துச் சிவபெருமான் உன் நாயகன் ஆவான் என்று அறிந்து கூறினேன். அவள் மனம் மகிழ்ந்து எனக்கு அளவற்ற பரிசுகள் தந்தார்.

குளிர்ந்த மலர்களும், நீரும் நிறைந்த அகழியால் சூழப் பெற்றிருக்கும் இத்தஞ்சையில், தாமரையைத் திருக் கோயிலாகக் கொண்ட இலக்குமியைப் போல் வாழும் பெண்ணே !

நான் சென்ற இடத்தில் தெலுங்குப் பெண் ஒருத்தி நாசெய் சூடு (என் கையைப்பார்) என்று தெலுங்கில் கூறினாள். ஆராய்ந்து பார்த்து நல்ல குறி சொன்னேன். அவள் மூக்கில் அணியும் இந்த மூக்குத்தியைத் தந்தாள். அழகு நிரம்பிய மராத்திப் பெண் மஜ ஹாத் பஹாவ்கே (என் கையைப் பார்) என மராத்திய மொழியில் கேட்டாள். அவளுக்கு நான் கூறிய இசைவான குறிக்கு அவள் எனக்கு வைர வளையல் பரிசு தந்தாள்.

கன்னியாகிய கன்னடப்பெண் ஒருத்தி, நன கையின நோடே (என் கையைப் பாரேன்) என்று கன்னடத்தில் கூறினாள். அவளுக்கு இசைவான குறி சொல்லியதால், அவள் எனக்குக் காதோலை அளித்தாள். உயர்ந்த அழகு வாய்ந்த இசுலாமியப் பெண் மை ஹாத்தேக்கர் போல்நா (என் கை பார்த்துச் சொல்) என்று இந்துஸ்தானி மொழியில் கேட்டாள். அவள் கை பார்த்துக் குறி சொன்னதற்கு ஒளியுடன், மின்னும் மாலை ஒன்றினைப் பரிசளித்தாள்.

ஒளி மிகுந்த நெற்றியையுடைய ஆங்கிலேயப் பெண் ஒருத்தி லுக் மை ஹாண்ட் (என் கையைப் பார்) என்றாள். அவளின் கைரேகை பார்த்துக் கூறினேன். அப்பெண்மணி சேலைக்கு மேலே அணியும் மேகலை எனும் இடை அணியைத் தந்தாள்.

மன்னர் சரபோஜி மகிழ்ந்தளித்த வரிசை

வசனம்

இப்படி அங்கங்கே சிலருக்குக் குறி சொன்னதும் அவர்கள் கொடுத்த வரிசையும் சொன்ன பிறகு, சரபோஜி மன்னர் கொடுத்த வரிசையைக் குறத்தி சொல்லுகிறாள்.

தன்யாசி ராகம் - சாபு தாளம்

பல்லவி

மன்னர் சரபோஜி மகராஜர் எனக்கீந்த
வரிசையைக் கேளடி மானே - மன்னர்

அனுபல்லவி

அன்னம் வளர்சோலை மன்னும் உயர்தஞ்சை
அணிநகர் தனில்மேவும் தனபதி எனச்சொல்லும்
-மன்னர்

சரணங்கள்

அந்தணர் தங்களு டன்புல வோருக்கும்
அனைவர்க்கும் பொன்னும் மணியும் மிகக்கொண்டு
சந்தத மும்சொரி அன்னவர் கைம்மலர்
தனில்ஊற் றிருந்திடும் ரேகையெல் லாம்கண்டு
முந்திடும் ஆதிரை நாளின் உதித்திட்டீர்
முன்னும் கவியுடன் பொன்னும் பதினொன்றில்
சுந்தர மாக இருந்தத னால்வெகு
சுகத்துடன் சிரஞ்சீவி யாய்இருப் பீர்என்றேன்
-மன்னர்-1

மகுடரே கையுடன் விஜயரே கையும்வளம்
வாய்த்திடு பாக்கிய ரேகைய துவும்மேலே
தகவின்உற் றிடும்உயர் புகழி னுடன்வித்தை
தருமணி ரேகையும் மருவின அதனாலே
புகழுடன் இப்புவி ஆளுவீர் செல்வமும்
புகழும்வெற் றியும்பெற்று இந்திரன் போலே
அகமகிழ் கொண்டுஎன் றுரைத்தேன் அதனுக்குஎன்
அகமகிழ் வெய்தவே உதவினர் மெத்தவே -மன்னர்-2

இலங்கிரு சால்வையும் உயர்முத்து மாலையும்
ஏறும் சிவிகையும் ஈரா யிரம்பொன்னும்
நலம்கொள் கடகமும் பலவர்ணச் சேலையும்
நவிலும்பொற் காறையும் நல்கி அதன்பின்னும்
புலன்கொள் மதிதோறும் இருபது இருபது
பொன்னும் பெறும்படி அருள்செய் தனர்துன்னும்
வலன்கொண் டிடுவிளை நிலமும் உதவினர்
மகிழ்ச்சி யுடன்கொண்டு இணக்கமுற் றேன்முன்னம்
-மன்னர்-3

தனபதி-குபேரன்; கவி-சுக்கிரன், வெள்ளி; பொன்-வியாழன், குரு; சிவிகை-பல்லக்கு; கடகம்-முன்கையில் அணியும் பருத்த வளையல்; காறை-கழுத்தை ஒட்டி அணியும் நகை; மதி-மாதம்.

மன்னர் சரபோஜி எனக்குத் தந்த பரிசில்களைக் கூறுகிறேன். மானே கேள். அன்னங்கள் திரியும் சோலைகள் நிறைந்த தஞ்சை எனும் அழகிய நகரில் குபேரனைப் போல் வாழும் சரபோஜி மன்னர் அளித்த பரிசில்கள் பற்றிச் சொல்கிறேன் கேள்.

அந்தணர்களுக்கும், கற்றறிந்த புலவர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் பெருமளவில் பொன்னும் மணியும் எப்போதும் வழங்கும் அந்த மன்னவரின் மலரனைய கைகளில் இருக்கும் ரேகையினைக் கண்டு நீங்கள் திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தீர்கள். உங்கள் ஜாதகத்தில் சுக்கிரனும், வியாழனும் பதினொன்றாம் இடத்தில் எழிலுடன் இருப்பதால் உடல் நலத்துடன் என்றென்றும் சிரஞ்சீவியாக வாழ்ந்திருப்பீர்கள் என்று கூறினேன்.

கையில் கிரீடரேகை, வெற்றிரேகை, வளங்களைத் தரும் பாக்கிய ரேகை, தகுதியால் கிட்டும் புகழ், கல்வி தரும் மணிரேகை ஆகியவை பொருந்தி உள்ளன. ஆகவே புகழுடன் இப்புவியை ஆள்வீர்கள். செல்வமும், புகழும், வெற்றியும் கொண்டு இந்திரன் போல அக மகிழ்ச்சியுடன் வாழ்வீர்கள் என்று கூறினேன். என் மனம் மகிழும்படி நிறையப் பரிசில்கள் தந்தார்.

பெரிய இரு சால்வைகளும், உயர்ந்த முத்து மாலையும், ஏறிச் செல்லப் பல்லக்கும், இரண்டாயிரம் பொன்னும், கையில் அணிய நல்ல கடகம் என்னும் முன் கை வளையலும், பல வண்ணங்கள் கொண்ட சேலையும், பொன்னாலான கழுத்தணியும் வழங்கினார். மேலும் மாதம் தோறும் நாற்பது பொன் பெறும்படி அருள்புரிந்தார். நெருக்கமாய் விளையும் வளமான விளைநிலமும் கொடுத்தார். இவற்றை எல்லாம் பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியுடன் இங்கே வந்தேன்.

மதனவல்லி பேச்சு

வசனம்

மோகினி குறத்தியைப் பார்த்து என்னுடைய கையையும் பார்த்துச் சொல்லு என்றாள்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

குலவுமல யத்துதித்து வந்த தென்றல்
குழவிமலர் பறித்துவிளை யாடும் சோலை
சுலவும்எழில் தஞ்சைநகர் தன்னில் வாழும்
தோன்றல்எனும் சரபோஜி மன்னர் செங்கைத்
தலம்இனிது பார்த்துரைத்தாய் எனது கையும்
தகவுபெறப் பார்த்துஉள்ளது உரைப்பாய் என்னின்
அலகில்கலை கற்றகுற மாதே உன்றன்
அகம்மகிழ வேண்டுபொருள் உதவு வேனே.

பொதிகை மலையில் தோன்றி இங்கு வந்த தென்றல் என்னும் இளங்காற்று மலர்களைப் பறித்து உதிர்த்து விளையாடும் சோலைகள் சூழ்ந்த அழகிய தஞ்சை நகரில் வாழும் நற்குடிப் பிறந்த சரபோஜி மன்னரின் சிவந்த உள்ளங்கையினைப் பார்த்துக் குறி சொன்னவளே! என் கையையும் நன்றாகப் பார்த்து எனக்கு வரவுள்ளது என்னவென்று கூறு. அளவற்ற கலைகளைக் கற்ற குறக்குலப் பெண்ணே! அப்படிக் குறி கூறினாய் என்றால் உன் மனம் மகிழ நீ கேட்கும் பொருள்களைத் தருகிறேன்.

குறத்தி பேச்சு

வசனம்

குறத்தி குறிசொல்லுவதற்கு வேண்டிய காரியங்களைச் சொல்லுகிறாள்.

பரசு ராகம் - திச்ர தாளம்

கண்ணிகள்

சாணகத்தால் முழச்சதுரம்
எழுதிவிளக் கேற்றிவைத்திடு அம்மே -அதில்
தந்திமுக மைந்தனையே
சந்தனம்பூ அறுகணிந்திடு அம்மே -1

காணஒரு கனிவகைஎள்
பொரிதேங்காய் நிவேதனம்செய் அம்மே-பின்பு
கவினுறுவெற் றிலைதுவர்க்காய்
வைத்துஒருபொற் காசும்வைத்திடு அம்மே-2

மாணுறுதூ பம்கட்டு
மந்திரத்தால் அருச்சனைசெய் அம்மே-எதிர்
வந்தனம்செய்து ஏத்திடு உன்றன்
மனக்குறிப்பைக் குறித்துக்கொள்வாய் அம்மே-3

நீணிலம்கொள் சரபோஜி
மன்னவர்வாழ் தஞ்சைவளர் அம்மே-உன்றன்
நீள்மலர்க்கை தன்னைஇங்கே
நீட்டுகுறி பார்த்துரைக்க அம்மே-4

சாணகம்-சாணம்; எழுதி-மெழுகி; தந்தி முகம்- யானை முகம்; மைந்தன்-வலிமை உடையவன், கடவுள்; கவின்-அழகு; துவர்க்காய்-பாக்கு; மாணுறு-மாட்சிமை உடைய; தூபம்- நறும்புகை, அகில், சாம்பிராணி போன்றவை.

நீள அகலங்கள் ஒரு முழம் இருக்கச் சதுரமாகச் சாணத்தால் மெழுகி விளக்கேற்றிவை. பிள்ளையாருக்கு சந்தனம், மலர், அறுகம்புல் ஆகியவற்றை அணிவித்திடு அம்மா. எல்லோரும் கண்டு வணங்க, பழவகை, எள், பொரி, தேங்காய் முதலியவற்றைப் படைத்து, பின்பு அழகிய வெற்றிலை, பாக்கு இவற்றுடன் ஒரு பொற்காசும் வைத்திடு.

மாட்சிமை நிறைந்த நறும்புகை போடு. மந்திரம் சொல்லி அர்ச்சனை செய். எதிர் நின்று வணங்கி இறைவனைத் துதி. உன் மனதில் என்ன தெரியவேண்டும் எனக் குறித்து வைத்துக்கொள்.

பெரும் நிலத்தை வெற்றி கொள்ளும் சரபோஜி மன்னரின் தஞ்சை நகரில் வாழும் பெண்ணே! உன் நீண்ட மலரனைய கையைப் பார்த்துக் குறிசொல்ல ஏதுவாக உன் கையை இங்கே நீட்டு.

குறிசொல்ல வேண்டிய பொருள்கள்

சாரங்கா ராகம் - திச்ர தாளம்

கண்ணிகள்

உள்ளபடி குறிஉனக்குக்
கூறிடுவேன் அம்மே-முன்னம்
ஒருசிறங்கைக் கஞ்சிபசி
ஆறிட வார் அம்மே -1

பிள்ளைதலைக்கு ஒருகரண்டி
எண்ணெய்ஊற்றிடு அம்மே-அந்த
பிள்ளையார்க்குப் படைத்தவெல்லாம்
எடுத்துதவு இங்க ம்மே -2

தள்ளவொண்ணா வெற்றிலைபாக்கு
இத்தனைதா அம்மே-கௌளி
சத்தமிட்டுஉன் வலப்புறத்தில்
கத்துதல்கேள் அம்மே -3

கள்ளமிலாச் செல்வம்மிக
வருகுதுபார் அம்மே-அங்கோர்
காரிகைதான் வீதியில்வந்து
ஏன்எனல் ஓர்அம்மே -4

கந்தனுக்குப் படைத்ததினை
மாவைஉதவு அம்மே - உன்றன்
கையதனால் வைத்தநிறை
நாழியும்நல்கு அம்மே -5

இந்தவகை எலாம்எங்கட்கு
ஈந்திடுதல் அம்மே - பாரில்
எங்கும்உள்ள முறைமையதாம்
இன்றைக்கல்ல அம்மே -6

சுந்தரமார் நினதுகையை
நீட்டிடும்முன் அம்மே - குறி
சொல்லுசொல்என்று ஆந்தைபல்கால்
சொல்லுதல்காண் அம்மே -7

சந்ததமும் செம்பொன்மழை
பொழிந்துமகிழ்ந் தம்மே - நாளும்
தஞ்சையில்வாழ் சரபமன்னர்
அருள்உனக்கு உண்டு அம்மே -8

சிறங்கை-சிறுஅங்கை, உள்ளங்கை அளவு; இத்தனைதா-இவ்வளவே, கொஞ்சமே தா; கௌளி-பல்லி; காரிகை-கன்னிப் பெண்; ஏன் எனல்-யாராவது கூப்பிட்டால் ஏன் எனல் மரபு. கன்னிப்பெண் வந்தேன் என்று கூறுவதைக் கேட்டல் நல்ல சகுனம் எனக் கருதப்பட்டது. ஓர்-ஆராய்; நிறைநாழி- நெல் நிரப்பியபடி, இது ஒரு மங்கலச் சின்னம்.

உள்ளது உள்ளபடி உனக்குக் குறி சொல்லுகிறேன். அதற்குமுன் நான் பசியாற ஒரு கையளவு கஞ்சி வார்த்திடு. என் பிள்ளையின் தலையில் தேய்க்க ஒரு கரண்டி எண்ணெய் ஊற்று. இப்போது நீ பிள்ளையாருக்குப் படைத்த எல்லாவற்றையும் எடுத்து எனக்குக் கொடுத்து உதவு.

எந்த விழாக்களிலும் தள்ள முடியாத வெற்றிலை, பாக்கு இவ்வளவு தா. பல்லி உனக்கு வலப்பக்கத்தில்

சத்தமிடுகிறது கேள். கள்ளமில்லாத செல்வம் உனக்கு நிறைய வர இருக்கிறது பார். வீதியில் ஓர் இளங்கன்னி அவளை அழைப்பவர்களுக்கு இதோ வருகிறேன் என்கிறாள் ஆராய்ந்து பார்.

முருகனுக்குப் படைத்த தினை மாவைக் கொடு. நீ உன் கைகளாலேயே நெல் நிறைத்து வைத்த படியினையும் தா, நான் இன்றைக்கு புதிதாக இவற்றையெல்லாம் உன்னிடம் கேட்கவில்லை. குறிசொல்கிற எங்களுக்கு இவற்றை எல்லாம் வழங்குதல் உலகில் எங்கும் உள்ள முறைதான்.

அழகு மிக்க உன் கையை என்னிடம் நீட்டுவதற்கு முன் உனக்குக் குறி சொல்லும்படி ஆந்தை பலமுறை சொல்வதைப் பார். எப்பொழுதும் அண்டியவர்களுக்குப் பொன்னை மழைபோல வழங்கி மகிழ்ந்தபடி தஞ்சை நகரில் வாழும் சரபோஜி மன்னரின் அருள் உனக்கு உண்டு.

குறத்தி குறி கூறுதல்

வசனம்

குறத்தி குறி சொல்லுகிறாள்.

பௌளி ராகம் - திச்ர தாளம்

கண்ணிகள்

ஈது வச்சிரரேகை முன்இதை
    இந்தி ராணிகை யில்கண்டேன்
இன்ன தால்உன் மணாளன் இந்திரன்
    எய்து போகம் உளன்அம்மே -1

மாது கேள்இந்த மகுடரேகையை
    வள்ளி யம்மைகை யில்கண்டேன்
மருவுஇ தால்உன்தன் கொழுநன் வேள்என
    வருவன் இன்புற அம்மே -2

ஓதும் இன்னதுசூல ரேகைஈது
உமைம லர்க்கையில் கண்டேன்
ஓங்கும் இன்னத னால்உன் காதலன்
உயர்ச்சி பெற்றிருப்பான் அம்மே -3

கோதில் சக்கரரேகை ஈதுஇதைக்
குலவு செல்விகையில் கண்டேன்
குறிக்கின் நின்மண மகன்இம் மேதினி
புரப்பன் இன்னதால் அம்மே -4

குமரியாகிய துர்க்கை கைதனில்
குலவு ரேகைஈது அம்மே
கூறும் இன்னது தேறு வெற்றிநின்
கேள்வற்கு ஈந்திடும் அம்மே -5

கமல ரேகைஈது இரதி தன்கையில்
கண்ட ரேகையாம் அம்மே
கருதும் நின்கணவன் நீடுஇ தால்வெகு
காமி யாய்இருப்பன் அம்மே -6

தமரு கத்தனி ரேகை யாம்இது
சங்க ரேகைஈது அம்மே
தங்குநின் நெடுமனையில் என்றும் வாத்தியம்
தகமு ழக்கும்இவை அம்மே -7

விமல முற்றிடும் வாணி செங்கையில்
விளங்கு ரேகைஈது அம்மே
மேவும் இன்னது யாரும் மெச்சிடும்
வித்தை நல்கிடும் அம்மே -8

ஓர்வ லஞ்சுழி உனது மார்பினில்
உற்றி லங்கும்ஈ தம்மே
உன்த னக்குஇஃதென்று மன்னிடும்
நன்றி யேதரும் அம்மே -9

தார்வி ளங்கும்உன் வலமு லைக்கண்ஓர்
தழும்பு தோற்றியது அம்மே
தாங்கு பெண்கள்ஓர் நான்கு மைந்தனும்
உனக்க ளித்திடும் அம்மே -10

வார்பொ ருந்திடத் தோளி லேஒரு
மறுவி ருக்கிறது அம்மே
மற்றுஇ தால்உனை எவரும் மெச்சிட
மகிழ்ந்தி லங்குவை அம்மே -11

பார்வை நீடுறும் ஏரி னால்வெகு
பாக்கி யம்வரும் அம்மே
பன்னு சீர்ச்சர போஜி மன்னவன்
மன்னு தஞ்சைவளர் அம்மே -12

வேள்-முருகன்; சூல ரேகை-திரிசூல வடிவ ரேகை; செல்வி-இலக்குமி; மேதினி-உலகம்; புரத்தல்-பாதுகாத்தல்; தேறு-நிச்சயமான; கேள்வன்-கணவன்; கமலம்-தாமரை; காமியாய்-காதலனாய், காமம் உடையவனாய்; தமருகம்-உடுக்கை; சங்கம்-சங்கு; விமலம்-நிர்மலம், தூய்மை; மண்ணிடும்-நிலையான; ஒன்றி-நன்மை; தார்-மாலை; வார்-கச்சை; மறு-மச்சம்; ஏர்-அழகு.

இது வைர ரேகை. இதனை இதற்கு முன்னர் இந்திராணியின் கையில் பார்த்திருக்கிறேன். ஆகவே உன்னை மணப்பவன் இந்திர போகத்தினை அடைவான்.

பெண்ணே கேள்! இதோ உன் கையில் இருக்கும் கிரீட ரேகையினைப் போன்று வள்ளியின் கையினில் கண்டேன். எனவே உன், கணவன் முருகனைப் போல், நீ இன்பமுற வருவான்.

இது சூல வடிவ ரேகை. இதனை உமையவளின் மலர்க்கையில் பார்த்திருக்கிறேன். இதனால் உன் காதலனும் சிவபெருமானைப் போல உயர்வுடன் இருப்பான். குற்ற மற்ற இது சக்கர வடிவ ரேகை. இதனை இலக்குமியின் கையினில் பார்த்தேன். இதனைக் குறித்துப் பலன் சொன்னால் உன்னை மணப்பவன் திருமாலைப் போன்று இவ்வுலகைக் காப்பவனாக இருப்பான்.

இதோ இந்த ரேகை என்றும் கன்னியாக விளங்கும் துர்க்கையின் கையில் உள்ளது. உன் கையிலுள்ள இந்த ரேகை உன் கணவனுக்கு நிச்சயம் வெற்றியினைத் தரும். இது தாமரை ரேகை. இதை நான் ரதியின் கையினில் பார்த்துள்ளேன். இந்த ரேகை இருப்பதால் உன் கணவன் உன்னிடம் பெருங்காதலுடன் இருப்பான்.

உடுக்கை ரேகை இது. இது சங்கு ரேகை. நீ வாழும் உன்னுடைய பெரிய இல்லத்தில் இந்த சுப இசைக்கருவிகள் என்றும் ஒலித்துக்கொண்டு இருக்கும். தூய்மை மிகுந்த சரசுவதியின் சிவந்த கையில் உள்ள ரேகை இது. இந்த ரேகை எவரும் பாராட்டும் வித்தைகளை அருளக்கூடியது.

உன்னுடைய மார்பினில் வலதுபுறமாகச் சுழித்த மயிர் ரேகை உள்ளது. உன்னிடம் பொருந்தியுள்ள இது உனக்கு என்றும் நிலைத்திருக்கும் நன்மைகளைத் தரும். மாலை சூடியுள்ள உன் வலது முலையில் ஒரு தழும்பு உள்ளது. அதனால் உன் குடியைத் தாங்க உனக்கு நான்கு பெண்களும், ஒருமகனும் பிறப்பார்கள்.

இடது தோளிலே கச்சு பொருத்துமிடத்தில், ஒரு மச்சம் உள்ளது. இந்த மச்சம் இருப்பதால் அனைவரும் உன்னைப் பாராட்ட நீ மகிழ்ச்சியுடன் விளங்குவாய். அனைவராலும் புகழப்படும் சிறப்புமிக்க சரபோஜி மன்னர் நிலைத்து வாழும் தஞ்சையில் வசிக்கும் பெண்ணே ! உன் பார்வையின் பேரழகினால் உனக்கு நிறையப் பேறுகள் கிட்டும்.

மதனவல்லி பேச்சு

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இனக்கதிர் முத்து மாலையும் களிறும்
எழிலுறு சிவிகையும் பரியும்
தனக்குவை பிறவும் உயர்புல வோர்க்குத்
தருதலால் புயலினை வென்ற
கனத்திடும் கீர்த்திச் சரபோஜி மன்னர்
கவின்பெறும் தஞ்சைமா நகரில்
அனப்பெடை போல வருகுறக் கொடியே
அகத்துநான் குறித்ததுஓர்ந் துரையே.

களிறு-ஆண் யானை; சிவிகை-பல்லக்கு; பரி-குதிரை; தனக்குவை-பணக்குவியல்; புயல்-மேகம்; கீர்த்தி-புகழ்; கவின்-அழகு; அனப்பெடை-பெண் அன்னம்; அகம்-மனம்.

ஒளி படைத்த முத்துக்களால் ஆன உயர்ந்த இனத்தைச் சேர்ந்த மாலை, ஆண் யானை, அழகு மிக்க பல்லக்கு, குதிரை, செல்வக்குவியல், இன்னும் பிற பொருள்கள் ஆகியனவற்றை உயர்ந்த புலவர்களுக்கு வழங்குவதால், தன் கொடைத் திறத்தின் காரணமாக மழை மேகத்தினை வெற்றி கொண்டவரும், பெரும் புகழ் படைத்தவருமான சரபோஜி மன்னரின் ஆட்சியினால் அழகு பெற்றுள்ள தஞ்சை மாநகரில் பெண் அன்னத்தைப் போல நடந்து வருகின்ற குறவர் இனக்குலக்கொடியே! நான் என் மனத்தின்கண் எது குறித்து எண்ணி உள்ளேன் என்று ஆராய்ந்து கூறுவாயாக.

தெய்வங்களை வேண்டுதல்

வசனம்

மனக்குறி சொல்லுவதற்குத் தேவதைகளை வேண்டுகின்றாள்.

நேரிசை ஆசிரியப்பா

தலமிது புரந்திடும் சரபோஜி மன்னர்
நலனுறு மதிகொடு நாளும் பணிந்திடச்
சுத்தமார் தஞ்சைத் தொல்பெரும் பதியில்
உத்தம ஆலயத்து உறைபெரு வுடையாய் !
பிறைநுதற் சிற்றிடைப் பெரியநா யகியே !
நிறைமலர்க் கோதை நிமலிகா மாட்சி !
தென்திரு வீதி திகழ்ந்திடும் காளி !
வென்றிகொள் குணபால் வெள்ளைப் பிள்ளையே!
ஆனந்த வல்லி அருட்கனு கூலா !
ஈனம் தவிர்த்திடும் இரட்டைப் பிள்ளையீர்!

சரவண பவனே! சத்தகன் னியர்காள்!
வரம்மிக உதவும் வள்ளிநா யகியே!
எக்கலா தேவி! இறைஞ்சினேன் உங்களை
மிக்கஉள் மகிழ்வொடு மேவிஎன் முன்நின்று
இந்தமெல் லியலாள் எண்ணிய எண்ணம்
முந்துதெய் வங்களை முன்னிய வகையோ
காசோ பணமோ கனகமோ வெள்ளியோ
மாசிலாப் பவழமோ வைரமோ முத்தோ
மாலையோ பணியோ மரமோ கொடிகளோ
சேலையோ கனியோ திருமணச் செய்தியோ

நாலுகால் சீவனோ நரர்களோ பறவையோ
கொடுத்திடும் குறிப்போ கொள்வதற்கு எண்ணமோ
வாகைவேல் அரசர் வரவிடும் தூதோ
தோகைதான் அவர்பால் தொடர்ந்திடும் செய்கையோ
இன்னது என்னவே எடுத்து
மன்னுற நான்சொல வகுத்தருள் வீரே.

நிமலி-நிர்மலமானவள்; குணபால்-கிழக்குத் திசை; கனகம்-பொன்; பணி-நகை; நரர்-மனிதர்.

தஞ்சைத் தலத்தினைக் காத்து ஆட்சி செய்யும் சரபோஜி மன்னர் மக்களுக்கு நலமே கிடைக்கச் செய்யும் சிந்தனையுடன் தினமும் வணங்கிப் பணிய, தூய்மை நிறைந்த தஞ்சைப் பழம்பெரும் நகரில் மிகச் சிறந்த கோயிலில் உறைகின்ற பெருவுடையாரே! பிறை நிலவு போன்ற நெற்றியினையும், சிறிய இடையினையும் கொண்ட பெரியநாயகி அம்மையே! நிறை மணமுள்ள மலர்களால் ஆன மாலையினை அணிந்துள்ள தூய்மையான காமாட்சி அம்மையே! தெற்கு வீதியில் கோயில் கொண்டுள்ள காளியே! கிழக்குத் திசையிலிருந்து அருள்புரியும் வெற்றிதரும் வெள்ளைப் பிள்ளையாரே! அருள்தந்து உதவும் ஆனந்தவல்லி உடனுறை தஞ்சேசப் பிரானே! உயிர்களுக்கு வரும் குறைகளைக் களைந்திடும் இரட்டைப் பிள்ளையார்களே! சரவணபவனே! சப்த கன்னியரே! மிக்க வரம் தரும் வள்ளியம்மையே! குறவர் குலக் கடவுளாகிய எக்கலாதேவி! உங்கள் அனைவரையும் பணிந்து வேண்டுகிறேன்.

மிகுந்த உள்ள மகிழ்ச்சியுடன் என்முன் வந்து நின்று மெல்லியல்பு கொண்ட இம்மங்கை எண்ணியது என்ன, முந்தி வந்து அருள்புரியும் தெய்வங்களை நினைந்தோ, காசு பணமோ, பொன்னோ, வெள்ளியோ, குறைவற்ற பவழமோ, வைரமோ, முத்தோ, மாலையோ, நகையோ, மரமோ, கொடிகளோ, சேலையோ, பழமோ, தன் திருமணம் குறித்த செய்தியோ, நாற்கால் விலங்குகளோ, மனிதர்களோ, பறவைகளோ, யாரிடமேனும் உள்ளத்தைப் பறிகொடுத்த குறிப்போ, இன்னொருவன் உள்ளத்தினைக் கொள்ளை கொள்ளும் எண்ணமோ, வெற்றிவேல் வேந்தர்கள் அனுப்பிவிடும் தூதோ அல்லது மயிலனைய இப்பெண் அவ்வரசரிடம் தூது அனுப்பும் செயலோ, இவள் எண்ணியது என்ன? என்று எடுத்துரைக்க எனக்கு அருள்புரியுங்கள்.

குறத்தி மதனவல்லி உரையாடல்

வசனம்

இனி குறத்தியும் மோகினியுமாக எதிர் எதிர் பேசுகிறார்கள். மோகினி மனக்குறிப்பு குறத்தி சொல்லுகிறாள்.

எதுகுல காம்போதி ராகம் - திச்ர தாளம்

குறத்தி கூற்று

அன்னநடை யாய்எழில்கொள்
மாமயிலே மின்னே
அம்புயத்தின் மீதுவளர்
கும்பமுலைப் பொன்னே -1

கன்னிகையே சிற்றிடையே
பைங்கிளியே மேல்உன்
கருத்தில்ஒரு கவலையுண்டுஅது
உரைத்திடுவேன் அம்மே -2

துன்னுமத யானைமேல்ஓர்
மன்னவன்தான் சேனை
சூழநெடு வீதிதனில்
தோகையர்க ளுடன்நீ -3

மன்னிவிளை யாடிடுங்கால்
பவனிவந்தான் வந்த
மதயானை தனைக்கண்டு
மருண்டனைநீ அம்மே -4

மதனவல்லி கூற்று

என்னடீ மலைக்குறத்தி
குறிசொன்னால் முன்னம்
இசைத்துவந்த படிமுற்றும்
இசைக்கவேண்டும் அல்லோ -5

சொன்னவழி தன்னைவிட்டு
வேறொன்றை இங்கே
தொடுத்துக்கொண்டாய் அதற்குள்என்ன
நினைத்துக்கொண் டாயோடீ

வன்னமத யானையைமுன்
கண்டறியேன் ஓங்கு
மதயானை கண்டவரை
மதியமும்காய்ந் திடுமோ -7

இன்உலவை சீறிடுமோ
சிலைமதனன் போருக்கு
இசைந்திடுமோ பாலமுது
கசந்துவிடு மோடீ -8

குறத்தி கூற்று

உள்ளபடி சொல்லுகிறேன்
பெண்ணரசே அந்த
ஓங்குமத யானையின்மேல்
ஆங்கிருந்து இசைந்த -9

வள்ளலினைக் கண்டுஉளத்தில்
ஆசைகொண்டாய் கொண்ட
வண்மையினால் நண்ணியதுஇவ்
வுள்மயக்கம் அம்மே -10

கொள்ளும்இந்த வகையெல்லாம்
முன்உனக்கே எண்ணிக்
குறித்துரைத்தால் முனிவைஎன்று
மறைத்துரைத்தேன் மின்னே -11

விள்ளும்இந்த வெதுப்புமெய்யில்
கண்டதுவும் இதனால்
வேறொன்றும் இல்லைஅது
கூறினேன்கேள் அம்மே -12

மதனவல்லி கூற்று

குஞ்சரத்தில் எவரேனும்
ஏறிச்சென்றால் ஆசை
கொள்ளுவனோ அப்படிநீ
கொண்டதுண்டோ சொல்லு -13

வஞ்சிஇங்கே வாய்த்துடுக்கால்
மிஞ்சிப்பேசாது ஒன்றும்
மற்றவன்தான் எந்தஊரன்
அவன்பேர்என் னேடி -14

குறத்தி கூற்று

கஞ்சமலர் ஆனனத்தாய்
குறிநான்சொல்வ தோஎன்
கருத்திலிருந்து உரைக்கின்றாள்
எக்கலா தேவி -15

தஞ்சைநகர் தனில்வாழ்வோன்
உலகத்தை ஆள்வோன்
சரபோஜி மன்னவனாம்
அன்னவன்பேர் அம்மே -16

நிறைசெல்வத்து அன்னவன்மேல்
ஆசைகொள்ள நோற்று
நீமுன்பு செய்ததொரு
புண்ணியம்காண் பாயே! -17

பிறைநுதலாய் இனிஎனக்கு
நீமறைக்க வேண்டா
பெருவுடையார் அருளதனால்
அவனைச்சேர் வாயே -18

நறைமலர்த்தா ருடன்தூது
வந்திடும்இன்று என்ன
நவின்றனள்அம் மதனவல்லி
நாணுடனே கேட்டே -19

உறுமகிழ்ச்சி கொண்டுமணிப்
பணிகளுடன் மற்றும்
உற்றகலை நல்கஅவள்
பெற்றுஇறைஞ்சி னாளே -20

சேனை-படை; மன்னி-பொருந்தி; மதியம்-நிலவு; உலவை-காற்று; சிலை-வில்; முனிவை-சினமடைவாய்; விள்ளும்-கூறும்; வெதுப்பு-வெப்பநோய்; குஞ்சரம்-யானை; கஞ்ச மலர்-தாமரை மலர்; ஆனனம்-முகம்; நோற்று-தவமிருந்து; நுதல்-நெற்றி; நறை-தேன்; தார்-மாலை; பணி-நகை; கலை-சேலை.

குறத்தி: அன்னநடைப் பெண்ணே! அழகு கொண்ட மயிலே! மின்னல் போன்றவளே! தாமரையின் மேலுள்ள திருமகளே! செம்பு போன்ற முலைகளைக்கொண்ட தங்கமே! கன்னியே! சின்னஞ்சிறு இடையாளே! பசுங்கிளியே! உன் உள்ளத்தில் ஒரு கவலை இருக்கிறது. அது என்னவென்று கூறுகிறேன்.

பெரிய மதயானையின்மேல் ஓர் அரசன் தன் படைகள் சூழ, வீதியில் நீ மயில்போன்ற உன் தோழியர்களுடன் விளையாடிக்கொண்டிருக்கும்போது உலா வந்தான், அவன் ஏறிவந்த மத யானையைக் கண்டு நீ அஞ்சினாய்.

மதனவல்லி : என்னடி மலைக்குறத்தி! குறி சொல்வதாக இருந்தால் இதற்கு முன்னர் கூறியதை முழுமையாக விளங்கக் கூறவேண்டுமல்லவா? முன்பு சொல்லிக் கொண்டிருந்ததை விட்டுவிட்டு வேறொன்றைக் கூறத் தொடங்கிவிட்டாய்? அதற்குள் அப்படி என்ன நினைத்துக் கொண்டாய்?

நீ கூறியபடி மதயானையையும் நான் இதற்கு முன் பார்த்ததில்லை. மதயானையைப் பார்த்ததற்காக நிலவு என்னைச் சுடுமா என்ன? இனிய தென்றல் காற்று பகைகொண்டு சீறுமா? கரும்பு வில் தாங்கிய மன்மதன் போருக்கு வருவானா? பால் உணவு கசக்குமா?

குறத்தி: பெண்ணரசியே! உண்மையைச் சொல்கிறேன். அந்த உயரமான மதயானையின் மேல் இசைவாக அமர்ந்திருந்த சரபோஜி என்னும் வள்ளல் பெருமானைக் கண்டு நீ உள்ளத்தில் ஆசை கொண்டாய். நீ கொண்ட ஆசையின் வலிமையால் இந்த மயக்கம் உன் உள்ளத்தில் வந்தது.

நீ மயக்கம் கொண்ட இந்த தகவல்களை எல்லாம் முதலிலேயே எண்ணி நான் உனக்குக் குறி சொன்னால் நீ கோபப்படுவாய் என்றே மறைத்துக் கூறினேன். நீ கூறிய வெம்மை நோய் உடலில் ஏற்பட்டது அத்தகு மையலால் தான். வேறொன்றும் இல்லை. அதுபற்றிக் கூறியுள்ளேன். கேள்.

மதனவல்லி : யாரேனும் யானைமேல் ஏறிச்சென்றால் ஆசைகொண்டு விடுவேனோ? நீ அப்படி ஆசைகொண்ட துண்டோ சொல். குறவஞ்சியே உன் வாய்த்துடுக்கால் ஒன்றும் அதிகமாகப் பேசாதே. நீ கூறிய அவன் எந்த ஊரினைச் சார்ந்தவன்? அவன் பெயர் என்ன சொல்லடி.

குறத்தி: தாமரை மலர் முகத்தவளே! நான் குறிவேறு சொல்ல வேண்டுமா? என் கருத்தில் தோன்றுவதை என் குல தெய்வமான எக்கலா தேவியே சொல்கிறாள்.

தஞ்சை நகரில் வாழ்பவன், உலகத்தை ஆள்பவன். அவன் பெயர் சரபோஜி மன்னன். நிறைந்த பெருஞ்செல்வம் கொண்ட அவன் மீது ஆசைகொள்ள நீ முன்பே தவம் செய்து புண்ணியம் பெற்றிருக்கிறாய். பிறை நிலவு போன்ற நெற்றியினை உடையவளே! இனி என்னிடம் மறைக்காதே. தஞ்சைப் பெருவுடையார் அருளால் நீ அவனை அடைவாய்.

தேன்சிந்தும் மலர் மாலையுடன் உன் காதலை ஏற்றுத் தூது இன்று வந்திடும் என்று அக்குறத்தி கூறினாள். மதனவல்லி அதை நாணத்துடன் கேட்டு, மகிழ்ச்சியுற்று நகைகள், சேலைகள் முதலியவற்றைப் பரிசிலாகத் தர, அக்குறத்தி பெற்றுக்கொண்டு வணங்கினாள்.

சிங்கன் வருகை

வசனம்

இவள் இங்கே இப்படி இருக்கும்போது குறச்சிங்கன் சிங்கியைத் தேடிக்கொண்டு புறப்பட்டு வருகிறான்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

நீடானைச் செவியனொடு குதிரை வாலன்
        நிகழ்த்துபுலி வாயன்என்னும் நாய்கள் பக்கத்து
ஓடாமல் புலனைஅடக்கு உணர்ந்தோர் போல
        ஒருவழியாய் வரக்கூவிக் கொண்டு பின்னும்
ஈடான கண்ணிவலை தடங்கை யிற்கொண்டு
        இசைகுளுவ னொடுசிங்கன் வந்தான்சோழ
நாடாளும் சரபோஜி மன்னர் தஞ்சை
        நகர்ப்புறத்தில் சிங்கிதனை நாடித் தானே.

நீடானைச் செவியன், குதிரைவாலன், புலிவாயன்- இவைகள் வேட்டை நாய்களின் பெயர்கள்; கண்ணி- சுருக்கும் வலை; குளுவன்-வேடன்; பறவைகள் பிடிப்பவன்; சிங்கன் - குறவன், வேடன்; சிங்கி-குறத்தி.

நீண்ட யானைக் காது உடைய நாய், குதிரை வால் போன்ற வாலினை உடைய நாய், சொன்னபடி வேட்டை யாடும் புலியனைய வாய் கொண்ட நாய் எனப் பல நாய்கள் பக்கத்துக்குப் பக்கம் ஓடிவிடாமல், ஒரே வழியில் தன்னுடனேயே வருமாறு, ஐம்புலன்களையும் அடக்கி ஆள தெரிந்துவைத்துள்ள மேலோரைப் போல, கூவி நாய்களை அடக்கியவண்ணம், பறவைகளைப் பிடிக்கக் கூடிய பெருமை வாய்ந்த பெரிய கண்ணி வலையினைத் தம் கையில் தாங்கி தன் மனத்திற்கு இசைந்த குளுவனொடு, சிங்கன் தன் மனைவியான சிங்கியைத் தேடிக்கொண்டு சோழநாட்டை ஆளும் சரபோஜி மன்னரின் தஞ்சை நகர்ப்புறத்தே வந்தான்.

சிங்கன் வந்தானே

மத்தியமாவதி ராகம் - திச்ர தாளம்

பல்லவி

சிங்கன் வந்தானே - மலைக்குறச்
சிங்கன் வந்தானே

அனு பல்லவி

மங்களம் பெருகிடும் தஞ்சைநன் னகரில்
மருவும் சரபோஜி மகராஜர் நாட்டினில்-சிங்கன்

சரணங்கள்

கையினில் ஈட்டி எடுத்துக் கொண்டு - நல்ல
காவிச் சல்லடம் தொடுத்துக் கொண்டு
மெய்யினில் வெண்ணீறு பூசிக் கொண்டு -வெகு
வேடிக்கை யாகப் பேசிக்கொண்டு - சிங்கன்-1

வெறிக்கச் சிலர்களை உறுக்கிக் கொண்டு-நீடு
மேல்மீசை தன்னை முறுக்கிக் கொண்டு
நெறிக்குள் பறவைமேல் நாட்டமோடு-எதிர்
நேரும் அதன்மீது வேட்டமோடு - சிங்கன் -2

கொங்கொடு பாண்டியம் எங்கும்
அலைந்து-நறுங்
கொங்கலர் குந்தளம் எங்கும் மிலைந்து
பங்கமில் பூஅணை தங்கிமுன் கூடி - மிக
இங்கித மேதரும் சிங்கியைத் தேடி - சிங்கன் -3

சல்லடம்-காற்சட்டை; உறுக்கி-வருத்தி; நெறி-வழி; நாட்டம்-பார்வை; வேட்டம்-விருப்பம்; கொங்கு-மணம்; அலர்-மலர்; குந்தளம்-கூந்தல்; இங்கிதம்-இனிமை, அனுசரணை.

மலைக் குறவனான சிங்கன் வந்தான். மங்கலம் நிறைந்த தஞ்சை நகரில் இருந்து ஆட்சி செய்யும் சரபோஜி மன்னரின் நாட்டில் குறச்சிங்கன் வந்தான்.

கையினில் ஈட்டி கொண்டு, காவி நிறத்தில் காற்சட்டை அணிந்து, உடம்பில் திருநீறு பூசிக்கொண்டு மிக வேடிக்கையாகப் பேசிக்கொண்டு சிங்கன் வந்தான். சிலரை வெறித்துப் பார்த்து அச்சுறுத்தி வருத்திக்கொண்டு மேல் நோக்கி இருக்கும் மீசையினை முறுக்கிக் கொண்டு, வழிதனில் பறவைகள் தென்பட்டால் அவற்றைப் பிடிக்கும் பார்வை யோடும், அவைகளை வேட்டையாடும் விருப்பத்தோடும் சிங்கன் வந்தான்.

கொங்குநாடு, பாண்டியநாடு முதலிய பகுதிகளில் அலைந்து திரிந்து விட்டு, நறுமணம் திகழும் தனி மலர்களைத் தலைமுடி எங்கும் அணிந்தவளும் குறைவற்ற பூச்சரங்களைச் சூடியவளுமான தன் மனத்திற்கு இதமான சிங்கியைத் தேடிக்கொண்டு சிங்கன் வந்தான்.

சிங்கன் கண்ணி குத்தும் வகை கூறுதல்

சிங்கன் வந்தான்

வசனம்

வந்த சிங்கன் தன்னுடைய தோழனாகிய குளுவனைப் பார்த்துப் பறவை வேட்டைக்குரிய கண்ணி குத்தச் சொல்லுகிறான்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இந்தவகை வந்தகுறச் சிங்கன் பூமிக்கு
இந்திரனாம் எங்கள்சர போஜி மன்னன்
சந்ததமும் கொண்டல்எனச் செம்பொன் மாரி
தனை உற்றோர் கொளப்பொழிந்து
மகிழ்ந்துவாழும்
சுந்தரமார் தஞ்சைநகர்ப் புறத்தில் நீடித்
தொகுபறவைக் குலம்கண்டு வேட்டை யாடப்
பந்தமுறு குளுவனைப்பார்த்து இங்கே கண்ணி
பாய்ச்சுஎன்றான் அவனும்இதோ ஆச்சுஎன்
றானே.

சந்ததம்-எப்பொழுதும்; கொண்டல்-மேகம்; மாரி-மழை; தொகுபறவை- வந்து கூடும் பறவைகள்; கண்ணி-பறவைகள் பிடிக்கும் வலை.

இவ்விதமாக வந்த குறச் சிங்கன், மேகம் போல எப்பொழுதும் தன்னிடம் வருவோர்க்குப் பொன்மழை பொழிந்து மகிழ்ச்சியுடன் எங்கள் சரபோஜி மன்னன் இந்திரனைப் போல வாழும் அழகு நிறைந்த தஞ்சை நகரின் புறத்தே வந்து ஆங்கே கூடி இருந்த பறவைக் கூட்டங்களைப் பார்த்து அவைகளை வேட்டையாட விருப்பப்பட்டு, தன்னுடன் இருந்த குளுவனைப் பார்த்து இங்கே பறவைகளைப் பிடிக்கும் கண்ணியை விரி என்றான். குளுவனும் இதோ ஆயிற்று என்றான்.

கண்ணி குத்தடா

அமீர்கல்யாணி ராகம் - திச்ர தாளம்

பல்லவி

கண்ணிகுத்தடா குளுவா வகையாய்க்
கண்ணிகுத்தடா

அனுபல்லவி

எண்ணிய பறவைகள் சிக்கினால் பிரகதீசர்
இளைய பிள்ளையார் ஏறித் திரிந்திட
வண்ண மயில்ஒன்று விடுவோம் எனநன்றாய்
மனத்தில் திடமாகக் குறித்துக்கொண்டு
இங்கேநீ-கண்ணி

சரணங்கள்

காலினில் மாட்டிய கண்ணியைப் பக்கிகள்
கடித்துத் தகர்த்திடும் அப்பால்
மேலில் கழுத்தினில் மாட்டிக்கொண் டால்காலால்
மெல்ல இழுத்திடும் குளுவா

சாலைத் திருடர்கள் காலினும் கையினும்
சாற்றும் தொழுக்கட்டை மாட்டிவிட்
டால்போல
காலினும் கழுத்தினும் மாட்டிக்கொள் ளும்படி
கருதிக் குத்தடா குளுவா - கண்ணி -1

ஊடுறக் கண்ணியை விரித்துவைத் தால்நுழைந்து
ஓடிப் போமடா பக்கி
வாடுறக் கண்ணியைச் சுருக்கிவைத் தால்தலை
மாட்டிக்கொள் ளாதடா குளுவா
நாடும் கயவரை ஆளும் அறிவினோர்
நடுத்தர மாகவிடுத்து வருதல்போல்
நீடும்கண் ணியைமிக விரியாமல் குவியாமல்
நேராகக் குத்தடா குளுவா - கண்ணி -2

பாவத் தொழிலவன் பிறரையும் தனைச்சேரப்
பண்ணும் திறம்எனப் புள்ளினம்
எலாம்தன்போல்
காவற் படச்செய்யும் தீவக் குருவியைக்
கண்ணிக்குள் வைத்திடு குளுவா
பூவுல கந்தனை ஆளும் உயர்சர
போஜி எனும்மக ராஜன் மகிழ்வொடு
மேவும்தென் தஞ்சை நகர்ப்புறத் தேஒரு
வேடிக்கை பார்ப்பமடா குளுவா -கண்ணி -3

பக்கி-பட்சி, பறவை; மேல்-உடல்; தொழுக்கட்டை-குற்றவாளிகளின் கை, கால்களை விலங்குபோல் பிணைக்கும் கட்டைகள்; புள்ளினம்-பறவைக்கூட்டம்; தீவக்குருவி-பறவைகளைப் பிடிப்பதற்காகக் கண்ணியில் கட்டி வைக்கப்படும் குருவி, யானையை வைத்து யானையைப் பிடிப்பது போல, இத்தகு யானை கும்கி யானைகள் என்றழைக்கப்படும்.

குளுவனே! விதவிதமாய் வலைக்கண்ணிகளை விரி.

நாம் எண்ணியபடி பறவைகள் கண்ணியில் சிக்கினால் தஞ்சைப் பெரியகோயில் பிரகதீசப் பெருமானின் இளைய பிள்ளையாகிய முருகக்கடவுள் ஏறிச்சென்றுவர வண்ணமயில் ஒன்றை விடுவோம். இதை நன்றாய் மனதில் கொண்டு வலையினை விரி.

வலைகளை மரங்களிலும், செடி கொடிகளிலும், தரையிலும் விரித்து மரமுளைகளைக் குத்திப் பொருத்துதல் கண்ணி குத்துதல் எனப்பட்டது.

காலில் மாட்டிக்கொண்ட வலையைப் பறவைகள் கடித்து அறுத்து எரிந்து விடும். உடலிலோ, கழுத்திலோ கண்ணி மாட்டிக்கொண்டால் அப்பறவைகள் காலால் இழுத்துக்கொண்டு போய்விடும். தெருவில் வழிப்பறி செய்து மாட்டிக்கொண்ட திருடர்களின் கையிலும், காலிலும் பிணைக்கும் கட்டையினை மாட்டிவிடுவதுபோல, நம் கண்ணி அப்பறவைகளின் காலிலும், கழுத்திலும் மாட்டிக் கொள்ளும்படி வலையை விரித்து முளைகளைக் குத்தடா குளுவா என்றான்.

கண்ணியைத் தரையூடு பொருந்த விரித்துவிட்டால் பறவைகள் நுழைந்து ஓடிப்போய்விடும். கண்ணியை மிகச் சுருக்கி வைத்துவிட்டால் பறவைகள் தலையை விட்டு மாட்டிக் கொள்ளாது. ஆட்சி செய்யும் அறிஞர்கள் தாங்கள் சிறைப்படுத்த முயலும் கயவரை மிகவும் நெருங்காமல் நடுத்தரமாக விட்டுப் பிடிப்பது போல் கண்ணியை மிகவும் விரிக்காமல், மிகவும் சுருக்காமல் சரியாகப் பரப்பிவை.

பாவத்தைத் தொழிலாகக் கொண்ட தீயவர்கள் பிறரையும், தன்னைப் போல தீயவருடன் சேருமாறு செய்வதைப் போல், பறவைக்குலங்கள் அனைத்தையும் தன்னைப் போலக் காவலில் சிக்கிக் கொள்ளுமாறு செய்யும். தீவக் குருவியைக் கண்ணியில் வை. இவ்வுலகினை ஆளும் சரபோஜி மன்னன் மகிழ்ச்சியுடன் பொருந்தி வாழும் தஞ்சை நகரின் வெளியே ஒரு வேடிக்கைப் பார்க்கலாம் வா, குளுவா.

பலபட்சிகளின் வருகை

வசனம்

கண்ணிக்குள்ளே வருகின்ற பறவைகள் குளுவன் பேசுவதைக் கண்டு கலைந்து போகின்றன என்று, அவனை இரையாதே என்று, பறவைகள் மேய்வதும் போவதும் தோன்றும்படி குறவன் சொல்லுகிறான்.

பூரிகல்யாணி ராகம் - திச்ர தாளம்

பல்லவி

கூப்பிடா தையே - பொறுபொறு
கூப்பிடா தையே ஐயே - கூப்பிடாதையே

அனுபல்லவி

காப்புறு தாஸ்தான் மகால்பெருந் தோட்டத்தில்
கவின்மயில் வருகுது குமரற்கு விடலாகும்-கூப்பிடா

சரணங்கள்

பரந்த சிறைப்பெருங் கம்புள் வருகுது
பச்சைப் புறாவில் ஒருலெச்சம் வருகுது
கருங்குயில் வருகுது நெருங்கிடும் கவுதாரி
கள்ளத் தனம்கொண்டு மெள்ளப் பதுங்குது-
கூப்பிடா-1

செந்தமிழ் இலக்கணம் தெரியார் கவிசொல்லிச்
சேரும் அதன்குற்றம் தெரிந்தோர் வினவுங்கால்
சிந்தை மயங்கி விழித்தல்போல் கண்ணியில்
சிக்கிக்கொண்டு இங்கொரு பக்கி விழிக்குது-
கூப்பிடா-2

மாடப் புறாவொடு காடையும் கலவிசெய்
மாதர் களத்தொலி போலவே கூவிக்கொண்டு
ஓடி வருகுது நாய்களைத் தூரவே
ஒதுங்கவைத் திடுநீயும் பதுங்கி இருந்திடு- *கூப்பிடா-3*

கொக்குக் கறியினிப்புச் சற்றும் அறியாயே
கூறிய சேலத்துச் சர்க்கரை போல்உரு
சிக்கும் வயிறு பசிக்குது மெள்ளவந்து
சிக்கிக்கொண் டால்அதுஉனக் கித்தனை தாரேன்-
கூப்பிடா-4

சாக்கிர மாதிஐந் திடத்தும் சிலசில
தத்துவத் தோடுஉயிர் சாரத் திரிதல்போல
தேக்கிடும் அங்கங்கே சிலபக்கிகள் நிற்கத்
திகழ்ஒரு குஞ்சுடன் வருகுது ஒருபக்கி- கூப்பிடா-5

ஆங்காரந் தன்னைஅடக்கிப் புலனை வென்று
அகத்தைப் பரத்தின் இடத்தில் நிறுத்தியே
தூங்காமல் தூங்கிடும் ஆங்கவர் போலவே
தூய ஒருநாரை ஓய்வுற்று இருக்குது- கூப்பிடா-6

ஒருவன்பல் வகைச்சொற்கள் உரைப்ப தெனப்புட்கள்
ஒலிவகை எலாம்கூவும் குருவி வருகுது
வரும்இக் குருவியைத் தஞ்சைச் சரபோஜி
மகராஜ னுக்கீந்தால் வெகுமானம் வாங்கலாம்-
கூப்பிடா-7

தாஸ்தான் மகால்-தஞ்சை அரண்மனையின் ஒருபகுதி; சிறை-இறக்கை; கம்புட்பறவை-கம்பங் கோழி; பக்கி-பறவை; உருசி-சுவை; ஆங்காரம்-ஆணவம்; அகம்-மனம்; பரம்-பரம்பொருள்; வெகுமானம்-பரிசு.

கூப்பிடாதே ஐயா, இரைச்சலிடாதே, கொஞ்சம் பொறு. பாதுகாவல் நிறைந்த தாஸ்தான் மகால் தோட்டத்தில் அழகிய மயில் ஒன்று வருகிறது. பிடித்தால் முருகனுக்கு விடலாம். எனவே சத்தமிடாதே.

அகன்ற இறக்கைகளைக் கொண்ட கம்பங்கோழி வருகிறது. ஒரு இலட்சம் பச்சைப் புறாக்கள் வருகின்றன. கரிய நிறமுள்ள குயில்கள் வருகின்றன. நெருங்கி வரும் கவுதாரிப் பறவைகள் திருட்டுத் தனமாகப் பதுங்கிக் கொள்கின்றன.

தமிழ் இலக்கணம் தெரியாதவர் கவிதை இயற்றி விட்டு, அதில் உள்ள குற்றம் தெரிந்தவர் அதைப்பற்றிக் கேட்டால் அறிவு மயங்கி அவையில் திருதிருவென விழிப்பதைப் போல இங்கே ஒரு பறவை கண்ணியில் சிக்கிக்கொண்டு விழிக்கிறது. இலக்கணம் தெரியாது கவி சொல்வோர் கற்றோர் அவையில் விழிப்பது கண்ணியில் சிக்கிக் கொண்டு விழிக்கும் பறவைக்கு உவமை. பாண்டியன் சபையில் ஆயிரம் பொற்காசுகள் பெறச்சென்ற தருமி போல.

கலவியில் ஈடுபட்டிருக்கும் போது பெண்கள் தொண்டையில் இருந்து மெல்லிய ஒலி எழுப்புவது போல மாடப்புறாவும், காடையும் மெல்லக் கூவிக்கொண்டு வருகின்றன. நாய்கள் பறவைகளின் கண்ணில் பட்டுவிடாமல் ஒதுக்கி வை. நீயும் பதுங்கி இரு. கலவியின் போது மாதர் எழுப்பும் ஓசை மாடப்புறா, காடை ஆகிய பறவைகள் எழுப்பும் ஒலிக்கு உவமை.

கொக்குக் கறியின் இனிய சுவையை நீ சிறிதும் அறிய மாட்டாய். அது சேலத்துச் சர்க்கரையைப் போலச் சுவையாய் இருக்கும். எனக்கு வயிறு பசிக்கிறது. கொக்கு வந்து வலையில் மாட்டிக்கொண்டால் உனக்கும் இவ்வளவு தருகிறேன்.

சாக்கிரம் முதலான ஐந்து இடங்களிலும் ஜீவாத்மாகிய உயிர் சில தத்துவங்களைச் சார்ந்து திரிவதைப் போலச் சில பறவைகள் அங்கங்கே தேங்கி நிற்க ஒரு பறவை மட்டும் தன் குஞ்சுடன் வருகிறது பார். சாக்கிரம்-விழிப்பு, சொப்பனம்-கனவு, சுழுத்தி-புருவ மத்தி, துரியம்-தலை உச்சி, துரியாதீதம்-சுத்தவெளி ஆகிய ஐந்து இடங்களிலும் உயிர் திரியும்.

ஆணவத்தை அடக்கி ஐம்புலன்களையும் வென்று மனதினை இறைவனிடம் நிறுத்தித் தூங்காமலேயே தூங்குவது போல் இருக்கும் உயர்ந்த ஞானிகளைப் போல ஒரு நாரை நல்ல மீன் வரும்வரை ஒய்வாக இருக்கிறது.

ஒருவனே பலமொழிச் சொற்களைப் பேசுவது போல, எல்லாப் பறவைகளைப் போலவும் கூவும் குருவி வருகிறது. இந்தக் குருவியைப் பிடித்து தஞ்சைச் சரபோஜி மன்னரிடம் கொடுத்தால் நிறையப் பரிசு பெறலாம்.

குளுவன் சிங்கனிடம் கூறுதல்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

காஎன்றும் கீஎன்றும் குக்கூ என்றும்
ககஎன்றும் கிகிஎன்றும் கக்கோ என்றும்
கூவிக்கொண் டிருந்தஎல்லாம் சும்மா இங்கே
குந்திஇரு நாங்கள்போய் வருவோம் என்று
போவதுபார் உனைநாப்புக் காட்டி நீஇப்
போதுபக்கி பிடித்ததுஇனிப் போதும் உன்றன்
ஆவிஅன்ன சிங்கிதனைத் தேடு சிங்கா
அண்ணல்சர போஜிதஞ்சை அணுகித் தானே.

நாப்புக்காட்டி--பழிப்புக்காட்டி.

கா, கீ, குக்கூ, கக, கிகி, கக்கோ என்று பலவிதமாகக் கத்திக்கொண்டிருந்த பறவை எல்லாம் இங்கே நீ சும்மா உட்கார்ந்திரு, நாங்கள் போய் வருகிறோம். என உனக்குப் பழிப்பு காட்டி ஏமாற்றி விட்டுப் போவதைப் பார். நீ இப்போது பறவை பிடித்தது போதும். தலைமை வாய்ந்த சரபோஜி மன்னரின் தஞ்சைக்குச் சென்று உன் உயிரனைய சிங்கியைத் தேடு என்றான் குளுவன்.

சிங்கியை நினைத்து இரங்கல்

வசனம்

சிங்கன் புலம்பல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

மறந்து விட்டேன் சிங்கிதனை
மன்னும் அனையாள் முலைகாட்டும்
நிறம்கொள் நேமிப் புள்ளினங்காள்
நிலவு நடைகாட்டு அனக்குலங்காள்
திறம்கொள் மொழியைக் காட்டும்கிளித்
திரள்காள் தஞ்சை நகரினிடைச்
சிறத்திடு அவளை எதிர்கண்டால்
சேர லாம்நீர் சொல்லீரே.

சிங்கியை மறந்துவிட்டேனே! அவளுடைய முலைகளைப் போன்ற நிறம் கொண்ட சக்கரவாகப் பறவைகளே! அவளுடைய நடையினை நினைவு படுத்தும் அன்னப் பறவைக் கூட்டங்களே! திறமையான அவளுடைய மொழிதனைச் சுட்டிக்காட்டும் கிளிக்கூட்டங்களே! தஞ்சை நகரின் நடுவே சிறந்த பெண்ணான அவளைக் கண்டால் சேர்ந்து கொள்ளலாம் என்று நீங்கள் சொல்லுங்கள்.

தனத்தை விட்டுப் பிரியேன்

கொச்சகக் கலிப்பா

பரிக்குலம்சூழ் சேனையினான்
பார்மேல் உயர்கீர்த்தி
விரித்தசர போஜிமன்னன்
மேவுதஞ்சை தன்னிடைநான்
வரித்தடங்கண் சிங்கி
மணிமார் பிடந்தன்னில்
தரிக்கும்ஒரு பூண்ஆகின்
தனத்தைவிட்டுப் பிரியேனே.

நிறைந்த குதிரைப் படைகளைக் கொண்டவனும், உலகில் புகழ் பெற்றவனுமாகிய சரபோஜி மன்னர் வாழும் தஞ்சையில் செவ்வரி ஓடிய நெடுங்கண்களை உடைய என்

சிங்கியின் மார்பில் அவள் அணியும் அணிகலன்களில் ஒன்றாக இருப்பின், அவளுடைய மார்பகத்தை விட்டுப் பிரியாமல் இருக்கலாம்.

கூடவே வருவேன்

கொச்சகக் கலிப்பா

நாடுபுரக்கும் எங்கள்
சரபோஜி நரேந்திரன்தன்
நீடுபுகழ்த் தஞ்சை
நெடுநகரில் சிங்கிதனைத்
தேடி அலைவேனோ
செப்புமவள் ஏந்துகுறக்
கூடைவடி வாயிருந்தால்
கூட வருவேனே.

இந்நாட்டைக் காக்கும் எங்கள் சரபோஜி மன்னரின் பெரும்புகழ் படைத்த தஞ்சை நகரில் சிங்கியைத் தேடி அலைகிறேனே! நான் குறிப்பிடும், அவள் ஏந்திச் செல்லும் குறக்கூடையாக இருந்திருந்தால் அவள் செல்லும் இடமெல்லாம் அவளுடனேயே நானும் வருவேன்.

சிங்கன் சிங்கியைத் தேடுதல்

கானடா ராகம் - ஆதி தாளம்

பல்லவி

வஞ்சியைக் காணேனே - ஐயேகுற
வஞ்சியைக் காணேனே - வஞ்சியை

அனுபல்லவி

மஞ்சுலவும் சோலைகளும்
வான்மதிலும் சூழும்உயர்
தஞ்சைநகர் வாழும்எங்கள்

சரபோஜி மன்னர்நாட்டில்
சட்டெனவேன் இட்டகல
கத்தில்என்னை விட்டகன்ற - வஞ்சியை

சரணங்கள்

தாளத் தனத்தைப் பார்க்க
மேலே கலையை நீக்கச்
சற்றே தொடுவேன் ஆசைகொண்டு-கையைத்

தள்ளிவிடு வாள்ஒரு
கிள்ளுமிடு வாள்கன்னந்
தன்னில் அவள் பின்னும்அது கண்டு-அவள்

வாள்விழியாள் மதனுக்கென்னைக் காட்டுவாள்-அவன்
வன்கணையி னால்உடலை வாட்டுவாள்-காம
வன்னிதனை முன்னிஎழ மூட்டுவாள் - கிட்ட
வாஎனச் செவ்வாய் மலர்த்தேன் ஊட்டுவாள்-அந்த

வங்கணச் சிங்கிதன்
கொங்கைத் துணைஎண்ணி

மணம்ஈங் குருகுது - தரு
மயலோ பெருகுது - ஒரு
வகையாய் வருகுது - பஞ்ச
வன்னக் கிளியை இன்சொல்
அன்னப் பெடையை என்தன் - வஞ்சியை -1

பந்து வராளிபுன்
னாக வராளி
பயிரவி தோடியில் பாடுவாள்-பின்பு

பரிவு தரஎழுத்து
தெரிவு பெறமகிழ்ந்து
பழகும் உபரியில் கூடுவாள்-மிக

விந்தைவிந்தை யாகப்பேச்சுப் படிப்பாள்-கொம்பின்
மேவுமயில் போல்சுழன்று நடிப்பாள்-என்கை
வெள்ளிலைவாய் கொள்ளத்துடி துடிப்பாள்-சுரத
வித்தையினை முற்றும்அங்கே முடிப்பாள்-ஐயே
மெய்யாகச் சொல்கிறேன் அந்த
ஒய்யாரக் காரிமதன்

மின்னின் மிஞ்சுவாள் - மருவப்
பின்னும் கெஞ்சுவாள் - இந்த
வண்ணம் கொஞ்சுவாள் - மானின்
மிகவும் குதிப்பள்பேணித்
தகவும் துதிப்பள்அந்த - வஞ்சியை -2

இன்றைக்கெல் லாம்அவள்
அழகைப் பார்த்துக்கொண்டு
இருக்கலாம் சற்றும்பசியாது-மேலும்
என்றும் அவள்வடிவைக்
கண்டோர் தமக்குரம்பை
எழிலும் மனத்துக்கு ருசியாது - இளந்

தென்றல் புலிபோலப் பாயுதே -வானில்
திங்கள்செங் கதிர்போலக் காயுதே - கடல்
திரையோசை உயிர்எங்கென்று ஆயுதே - அன்றிற்
சிறுபுட்கள் பெடையொடு மேயுதே - ஐயே
தேசதே சம்போனேன்
தேடி அலைந்தும் காணேன்

சின்னஞ் சிறியாள் - நலன்
எண்ணும் நெறியாள் - புறம்
நண்ணி அறியாள் - எங்கே
சென்று தியங் னாளோ எங்கே
நின்று மயங்கி னாளோ அந்த - வஞ்சியை -3

தாளத்தனம்-தாளமிடும் தனம், கைத்தாள வடிவம் கொண்ட தனம்; மேல்கலை-மேலாடை; வாள்விழி-

ஒளியுடைய கண்கள்; கணை - அம்பு; வன்னி - நெருப்பு; வங்கணம் - அழகு; வெள்ளிலை - வெற்றிலை; சுரதவித்தை - கலவிக் கலை; செங்கதிர்-சூரியன்; திங்கள் - சந்திரன்; தியங்குதல் - சோர்தல்.

குறவஞ்சியைக் காணவில்லையே! மேகங்கள் உலவும் சோலைகளும், வான் முட்டும் கோட்டை மதிற்சுவரும் சூழ்ந்த உயர்ந்த தஞ்சை நகரில் வாழும் சரபோஜி மன்னரின் நாட்டில் மன்மதன் காதல் கலகம் செய்த வேளையில் திடீரென என்னை விட்டுச் சென்று விட்ட குறவஞ்சியைக் காணவில்லையே!

தாளத்தோடு அசையும் அவளின் மார்பகங்களைப் பார்க்க மேலாடை நீக்கச் சற்று ஆசையுடன் தொடுவேன். அவள் அதைக்கண்டு என் கையைத் தள்ளிவிடுவாள். என் கன்னத்தில் கிள்ளிவிடுவாள். ஒளி பொருந்திய தன் விழிகளால், அவள் மன்மதனுக்கு என்னைக் காட்டிக் கொடுத்து அவன் தொல்லைக்கு என்னை ஆட்படுத்துவாள். அம்மன்மதனின் கொடிய மலர் அம்புகளால் என்னை வாட்டுவாள். காம நெருப்பை என் நெஞ்சினில் மூட்டுவாள். பிறகு என்னை அருகே வா என்று அழைத்துத் தன் சிவந்த மலர் வாயில் ஊறும் தேன் போன்ற உமிழ்நீரை எனக்கு ஊட்டுவாள். அழகு நிறைந்த என் சிங்கியின் இருமுலைகளையும் எண்ணி இங்கே என் மனம் உருகுகிறது. அவளால் வரும் மையல் பெருகுகிறது. எனக்கு ஒருவிதமாய் மயக்கம் வருகிறது. அந்த பஞ்ச வண்ணக்கிளியை, இனிய சொற்களையே பேசும் அந்தப் பெண் அன்னத்தை, எந்தன் குறவஞ்சியைக் காணவில்லையே!

பந்துவராளி, புன்னாகவராளி, பைரவி, தோடி ஆகிய இராகங்களில் பாடுவாள். பின்னர் என் மீது இரக்கம் பெருகி எழ, நான் தெளிவுபெற அவளே என்னுடன் மகிழ்ந்து கூடுவாள். மிகவும் வியப்பு ஏற்படும்படி பேசுவாள். மரத்தின் கிளை உச்சியில் இருக்கும் மயில்போல சுழன்று நடன

மிடுவாள். என்னிடமிருந்து வெற்றிலையைத் தன் வாயில் வாங்கிக் கொள்ளத் துடிப்பாள். கலவியில் உள்ள வித்தை அனைத்தையும் அங்கேயே செய்து முடிப்பாள். ஐயா, நான் சொல்வது எல்லாம் உண்மை. ஒய்யாரமான என் சிங்கி மன்மதன் தேவியான ரதியையே மிஞ்சும் அழகி, இன்னும் தன்னை அணைக்குமாறு அவள், என்னிடம் கெஞ்சுவாள். இந்த வண்ணம் கொஞ்சுவாள். மானையும்விட மிகவும் அழகாகத் துள்ளிக் குதிப்பாள். என்னை நன்கு பார்த்துக் கொள்வாள். தினமும் போற்றித் துதிப்பாள்.

அவளுடைய அழகினை இன்றைக்கு எல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம். சற்றும் பசியே தோன்றாது. அவளின் அழகினைப் பார்த்தவர்களுக்கு ரம்பையின் அழகும் மனத்திற்குப் பிடிக்காது. அவளைப் பிரிந்திருக்கும் என்மேல் இளந்தென்றல் புலிபோலப் பாய்கிறது. வானில் உள்ள நிலவு செந்நிறக் கதிரவனைப் போல் காய்கிறது. கடல் அலையின் ஓசை என்னைக் கொல்வதற்காக என் உயிர் எங்கே என்று தேடுகிறது. சிறிய அன்றில் பறவைகள் தன் பெட்டைகளைப் பிரியாமல் சேர்ந்து இரைமேய்கின்றன. ஐயா, நான் பல தேசங்களுக்கு தேடிப் போயும் அவளைக் காணவில்லை. அவள் மிகவும் சிறியவள். எப்போதும் எனக்கு நல்லதையே எண்ணும் நெறி உடையவள். வெளியே போய் அறியாதவள். எங்கே சென்று எப்படிச் சோர்ந்து போய் இருக்கிறாளோ? அல்லது எங்கேனும் மயங்கி நிற்கிறாளோ? தெரியவில்லை. என் குறவஞ்சியைக் காணவில்லையே !

குறத்தியின் அடையாளம் வினாவுதல்

வசனம்

இப்படிக் குறவன் சொல்லக் கேட்டவன், அந்த குறத்திக்கு அடையாளம் என்ன என்று கேட்கிறான்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திறத்தின்உயர் சரபோஜி மன்னன் தஞ்சைத்
திருநாட்டில் யாவர்களும் செல்வம் மிக்கோர்
மறத்தடங்கண் மாதர்எல்லாம் அணிக ளாலும்
வடிவாலும் திருமகளை நிகர்வர் கண்டாய்
நிறத்தனிவேல் பிடித்திடுகைக் குறவா இங்கே
நிலைபெறவே விரிவாக இன்ன தென்றுன்
குறத்திதனக்கு அடையாளம் உரைத்தால் நான்மேல்
கூறலாம் நீகண்டு தேறலாமே.

மறம் - வீரம்; மறத்தடங்கண் - கொல்லும் தன்மை யுடைய கண்; நிறம்-ஒளி.

திறனில் உயர்ந்த சரபோஜி மன்னரின் தஞ்சைத் திருநகரில் உள்ள அனைவருமே செல்வம் மிக்கவர்கள். இளைஞர்களைக் கொல்லும் படை போன்ற பெரிய கண்களைக் கொண்ட பெண்கள் அனைவரும் அணிகலன் களாலும், அழகாலும் இலக்குமியைப் போல் இருப்பார்கள். ஒளியுள்ள ஒப்பற்ற வேலைக் கையினில் கொண்டிருக்கும் குறவனே! இப்போது குறத்தியின் அடையாளம் என்ன வென்று எனக்கு நீ விரிவாகக் கூறினால், நான் மேலே பேசுவேன். நீ குறத்தியைக் கண்டு மனம் தேறலாம்.

சிங்கியின் அடையாளம் கூறுதல்

வசனம்

குறவன் சொல்லுகிறான்

சுருட்டி ராகம் - திச்ர தாளம்

பல்லவி

கேளடையே - சிங்கிக்கு அடையாளம்
கேளடையே

அனுபல்லவி

நாளும்உல காளும்சர போஜிமக ராஜர்
நண்ணும் உயர்தஞ்சை என்னும் நகரிடை-கேளடையே

சரணங்கள்

கன்னமதி லேஇரண்டு
சின்னவடு உண்டு
கள்குடித்த வெறியினால்நான்
கடித்ததுண்டு பண்டு
வன்னமுலை நன்னயம்கொள்
சொன்னமலர்ச் செண்டு
வாயமுதம் பால்கனிதேன்
சீனியொடு கண்டு

மன்னும் அனநடையை
அன்ன நடையள்ஒரு
மின்னும் இணையலவே
என்னும் இடையள்இனம் -கேளடையே -1

வதனம் செந்தாமரையின்
போதெனவே கூடும்
வண்டினங்கள் போல்விழிகள்
காதின்அள வோடும்

எதிர்வோர்கள் மனம்ஏறிக்
காதுஊசல் ஆடும்
ஏற்றகுமிழ் மூக்கின்எழில்
பார்க்கின்இகந் தோடும்

இன்பம் ஒருஉருக்
கொண்ட திவள்வடிவு
என்று மனிதர்கள்எதிர்
கண்டு சொல்லுவர் நன்றாய் - கேளடையே-2

கறுத்த குமரிஎன்மேல்
மெத்தவிசு வாசி
கனத்தினைமுன் பழித்துஅதைஅந்
தரத்தில்விட்ட கேசி
குறித்துணர்ந்த திறத்தினர்கள்
போற்றுசர போஜி
குரிசில்உயர் தஞ்சைகண்டு
வருவன்என்று பேசி

குடக்கில் உயர்நேரி
அடுக்க லிடைஎன்னை
நிறுத்தி அவள்இந்த
நெறிக்கண் வந்தாள்சொல்லக்-கேளடையே -3

கேளடையே-கேள் அடா ஐயே; பண்டு-முன்பு; வன்னமுலை-அழகிய முலை; மலர்ச்செண்டு-முலைக்கு உவமை; கண்டு-கற்கண்டு; அன்ன-போன்ற; மின்-மின்னல்; வதனம்-முகம்; போது-மலர்; குமிழ்-குமிழமலர்; இகந்து-விலகி; கனத்தை-மேகத்தை; கேசி-கூந்தல் உடையவள்; அந்தரம்-ஆகாயம்; குடக்கில்-மேற்கில்; நேரி அடுக்கல்-நேரிமலை; நெறிக்கண்-வழியில்.

சிங்கியின் அடையாளம் சொல்கிறேன் கேளடா ஐயா! தினமும் உலகை நலமுடன் ஆளும் சரபோஜி மன்னரின் உயர்வான தஞ்சை நகரில், நான் சிங்கியின் அடையாளம் கூறுகிறேன் கேள் ஐயா.

அவளுடைய கன்னத்தில் இரண்டு சிறிய வடுக்கள் இருக்கின்றன. அவ்வடுக்கள் முன்பு ஒருமுறை நான் கள் குடித்துவிட்டு, அந்த போதை மயக்கத்தில் கடித்ததால் ஏற்பட்டவை. அவளின் அழகிய முலைகள் நலம் நிறைந்த மலர்ச்செண்டுகள் போன்றவை. அவள் வாயினில் ஊறும் அமுதம் வெறும் உமிழ்நீரல்ல. அது பால், கனிச்சாறு, தேன், சர்க்கரை, கற்கண்டு ஆகும். அவள் அன்ன நடையை ஒத்தவள். அவளின் இடைக்கு மின்னலும் இணை ஆகாது.

செந்தாமரைப்பூவின் மொட்டு போலிருக்கும் அவளுடைய முகம். வண்டுகளைப் போன்ற அவள் விழிகள் காதுவரை ஓடும். எதிரே வருபவர்களின் மனம் அவள் காதுக்குழைகளில் ஏறி ஊசலாடும் முகத்திற்கேற்ப, அமைந்திருக்கும் அவள் மூக்கின் அழகைப் பார்த்து குமிழ மலர் தோற்று விலகி ஓடும். இன்பமே ஓர் உருவம் தாங்கி வந்தது போல் அவள் வடிவம் இருக்கிறது என்று அவளை நேரில் கண்டவர்கள் கூறுவார்கள்.

கறுத்த நிறத்தை உடைய இளம்பெண் அவள். என் மீது மிகவும் அன்பு கொண்டவள். கார்மேகம் இவளின் கூந்தலுக்கு இணையாகாது எனப்பழித்து அம்மேகத்தை ஆகாயத்தில் அலைய விட்ட கூந்தலை உடையவள். உணர்ந்தவர்கள் போற்றும் சரபோஜி மன்னரின் உயர்ந்த தஞ்சை நகரைக் கண்டு வருகிறேன் என்று கூறிவிட்டு, மேற்கில் இருக்கும் உயர்வான நேரிமலையில் என்னை நிற்க வைத்துவிட்டு இந்த வழியில் வந்தாள். அவளின் அடையாளம் சொல்கிறேன் கேள்.

மேகம் ஆகாயத்தில் அலைவது இவளுடைய கூந்தலுக்குத் தோற்றததால்தான் என்று கூறியது தற்குறிப் பேற்ற அணி ஆகும்.

குளுவன் கூறுதல்

வசனம்

இந்தப்படி அடையாளம் கேட்டவன் சொல்கிறான்.

வெண்பா

சொன்னஅடை யாளம் துலங்கவந்துஇத் தஞ்சையில்ஓர்
கன்னி இருக்கின்றாள் காட்டுகின்றேன்-அன்னவளைக்
காட்டினால் நீஎன்ன கைக்கூலி தந்திடுவாய்
ஈட்டமுறச் சிங்கா எனக்கு

நீ சொன்ன அடையாளங்கள் விளங்க இத்தஞ்சையில் ஒரு பெண் இருக்கிறாள். நான் காட்டுகிறேன். ஈடில்லாத சிங்கனே! அவளைக் காட்டினாள் நீ எனக்கு என்ன கூலி தருவாய்?

சிங்கன் குளுவனிடம் கூறுதல்

வசனம்

சிங்கன் சொல்லுகிறான்

நாதநாமக்கிரியை ராகம் - திச்ர தாளம்

பல்லவி

காட்டி விடையே - சிங்கியை
காட்டி விடையே

அனுபல்லவி

நாட்டில் உயர்சோழ நாடு புரந்திடும்
நரபதி சரபோஜி மகராஜர் நகரினில் - காட்டி

சரணங்கள்

ஆயிரம் பெண்களைக் கூடினா லும்காமம்
அடங்கா திருக்கமருந்து தருகிறேன்
மேய உலகெங்கும் ஓர்நொடி தனிற்சென்று
விரைவில் வரஒரு குளிகை தருகிறேன்
தூய நகைமட மாதர் தொடர்ந்திடத்
தூவும் படிவாடைப் பொடிஒன்று தருகிறேன்
பேயொடு பூதங்கள் ஏவி யதுசெய்யப்
பிறங்கும் ஒருமந்திரம் சொல்லித் தருகிறேன்
காட்டி-1

காற்றைப் பிடித்துக் கரகத்து அடைப்பதும்
கண்கட்டு வித்தையும் காட்டித் தருகிறேன்
ஆற்றல்கொள் அக்கினித் தம்பம் சலத்தம்பம்
ஆகர் ஷணம்வசியம் சொல்லித் தருகிறேன்
ஏற்றிடு மூப்பினர் சிறுபிள் ளைகள்ஆகி
இலங்கிட மூலிகை இருக்குது தருகிறேன்
மாற்றற் கரிய பிணிகளை மாற்றிட
மணிஒன் றிருக்கிறது அதுவும் தருகிறேன்.
காட்டி-2

பகர்ந்திடும் பேச்சினில் பிறர்பொரு ளினைத்தெட்டிப்
பறிக்கும் படிஒரு நரிக்கொம்பு தருகிறேன்
இகலும் இரும்பினைப் பொன்னாக்கிக் கொள்ளலாம்
இதற்குஒரு பச்சிலை உனக்குத் தருகிறேன்
திகழ்இங் கொருவர்தம் மனத்துஎண் ணினஎல்லாம்
தெரிந்து சொலும்வித்தை பரிந்து தருகிறேன்
தகும்இவை எல்லாம்நீ உணர்ந்துகொண்
டால்உன்னைச்
சரபோஜி மன்னர் புகழ்ந்துகொள் வார்மெத்த-
காட்டி-3

மேய-மேவிய; குளிகை-மாத்திரை; மடமாதர்- இளம் பெண்கள்; வாடைப்பொடி-மணமுள்ள பொடி, சொக்குப் பொடி; பிறங்கும்-விளங்கும்; கரகம்-குடம்; அக்கினித் தம்பம்-நெருப்பு சுடாமல் செய்யும் மந்திரம்; சலத்தம்பம்-நீர்மேல் நடக்கும் மந்திரம்; ஆகர்ஷணம்-ஈர்ப்பது, வசியம் செய்வது; தெட்டி-வஞ்சித்து; இகலும்-மாறுபடும்; பரிந்து-விரும்பி.

சிங்கியைக் காட்டிவிடு ஐயா, எல்லா நாடுகளையும் விட உயர்ந்த சோழநாட்டைக் காத்துவரும் மன்னர் சரபோஜியின் தஞ்சை நகரில் சிங்கியைக் காட்டு ஐயா.

ஆயிரம் பெண்களுடன் இன்பம் துய்த்தாலும் காமம் அடங்காமல் இருக்க மருந்து தருவேன். உலகம் எங்கும் ஒரே நொடிப்பொழுதில் சென்று விரைவாகத் திரும்ப ஒரு மாத்திரை தருகிறேன். தூய்மையாகப் புன்னகை புரிகின்ற இளம்பெண்கள் உன்னை பின் தொடர்ந்து வரும்படி வாசனைப் பொடியைத் தருகிறேன். பேய், பூதங்கள் நாம் இடும் கட்டளைப்படி பணிசெய்ய ஒரு மந்திரத்தை விளக்கமாகச் சொல்லித்தருகிறேன்.

காற்றைப் பிடித்துக் குடத்தில் அடைப்பது, கண்கட்டு வித்தை, ஆற்றல் மிக்க வித்தையான நெருப்பு சுடாமல் இருப்பது, நீரின் மேல் நடந்து செல்வது பிறரைத் தம்

வசப்படுத்த வசியம் செய்வது முதலியவற்றை உனக்குச் சொல்லித்தருகிறேன். வயது மூத்தவர்களை, சிறுபிள்ளைகள் போல விளங்கிட வைக்கும் மூலிகை என்னிடம் உள்ளது தருகிறேன். தீர்க்க முடியாத நோய்களைக் கூட, தீர்க்கும் அரிய மாணிக்கம் ஒன்று என்னிடம் உள்ளது. அதனையும் உனக்குத் தருகிறேன்.

பகட்டு நிறைந்த பேச்சின் மூல்மாக பிறர் பொருளை வஞ்சித்துத் தட்டிப் பறிக்க ஒரு நரிக்கொம்பு தருகிறேன். இரும்பைத் தங்கமாக மாற்றக்கூடிய பச்சிலையைத் தருகிறேன். இங்கிருக்கும் ஒருவர் தம் மனத்தில் நினைத்த வற்றை எல்லாம் நீ அறிந்து கொண்டு சொல்லும் வித்தையினை அன்புடன் கற்றுத் தருகிறேன். தகுதி மிக்க இந்த வித்தைகளை எல்லாம் கற்றுக்கொண்டால் சரபோஜி மன்னர் உன்னை மிகவும் புகழ்ந்து ஏற்றுக்கொள்வார்.

கண்டோன் கூறல்

வசனம்

குறத்தி அங்கே இருக்கிறாள் என்று ஒருவன், குறவனுக்குச் சொல்லுகிறான்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தரியலரை வென்றுபுவி ஆளும் எங்கள்
சரபோஜி மன்னவர்தென் தஞ்சை உற்றோர்
பெரியநலம் மருவிமன மகிழ்ச்சி நீடு
பெற்றிடுவார் இன்னதுதான் சித்த மாகும்
உரியஇத னால்இந்த நகரை நீயும்
உற்றனையேல் பெற்றிடுவை உறுதியாய் உன்
கரியமலர்க் கோதைஅதோ நிற்கின் றாள்பார்
கருதுவரைக் குறமகனே அணுகித் தானே.

தரியலர்-பகைவர்; நீடு-நெடியதாக; சித்தமாகும்-விரும்பியது கிடைக்கும்; கரிய மலர்க்கோதை-குறத்தி; வரை-மலை.

பகைவரை வென்று உலகாளும் எங்கள் சரபோஜி மன்னரின் தஞ்சை நகரினை அடைந்தோர் பெரும் நலம் பெற்று மனமகிழ்ச்சியை நெடியதாகப் பெறுவர். விரும்பியது கிடைக்கும் எனவே நீயும் இந்நகரை அடைந்தால் உறுதியாக நீ தேடுவதைப் பெறுவாய். நீ காண விரும்பிய உன் கரிய மலர்க்கூந்தல் மங்கையாகிய குறத்தி அதோ நிற்கிறாள். மலைக் குறவனே அருகில் சென்று பார்.

சிங்கன் சிங்கியைக் காணல்

வசனம்

அப்படியே குறவன் சிங்கியைக் கண்டான். இருவரும் பேசிக்கொள்கிறார்கள்.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தாரணி புகழும் தஞ்சைச்
சரபோஜி மன்னர் நாட்டில்
கூரணி நெடுவேல் சிங்கன்
குறச்சிங்கி தன்னைக் கண்டான்
வாரணி தனத்தி னாளை
மற்றவன் சிலமுன் கேட்க
ஏரணி மாதும் கேட்க
இருவரும் கூறுவாரே.

தாரணி - உலகம்; வார் - மார்புக்கச்சை; ஏரணி - அழகுடைய; மாது-குறத்தி.

உலகம் புகழும் தஞ்சை மன்னர் சரபோஜியின் நாட்டில் கூர்மையான நெடிய வேல் பிடித்த சிங்கன் தன் மனைவி யாகிய குறத்தி சிங்கியைக் கண்டான். கச்சை அணிந்த மார்பகங்களைக் கொண்ட அவளிடம் அவன் சில கேள்விகளைக் கேட்க, அழகிய அப்பெண்ணும் பதிலுக்குக் கேட்க இருவரும் பேசிக்கொண்டார்கள்.

இருவர் உரையாடல்

முகாரி ராகம் - திச்ர தாளம்

எந்தத் தேசம்விட்டு
எந்தத் தேசம்வந்தாய் சிங்கி? - மேல்
எங்கெங்குத் தேடினை
எனக்குஇன் றுரையடா சிங்கா? -1

ஆலங் குடிகண்
டிக்குடி தேடினேன் சிங்கி - கூறும்
அம்பலம் தேட
அறிவுனக் கில்லையோ சிங்கா? -2

வலம்புரிக் களம்பார்க்கத்
தினம்குறித்து அலைவுற்றேன் சிங்கி-அடா
மற்றதல் லால்உரத்து
வல்லம்நீ தேடலையோ சிங்கா? -3

வன்னக்குற் றாலம்
வயினுறத் தேடினேன் சிங்கி - அன்று
மன்னும் இயலுறும்
மாயூரம் தேடலையோ சிங்கா? -4

இலகிய காஞ்சி
யிடைமிகத் தேடினேன் சிங்கி - நல்ல
இசைதரு நாகைதேடு
எண்ணம்ஆங் கில்லையோ சிங்கா? -5

கூடலூ ருக்குமேல்
கூடவும் தேடினேன் சிங்கி - நான்
கூட இருந்திட்டால்
குறித்துஅவை தேடாயோ சிங்கா? -6

தஞ்சையைப் பார்என்று
சகலரும் சொன்னார்கள் சிங்கி - இங்கே
சாற்றும் குறிசொல்லித்
தனம்தேட வந்தேனடா சிங்கா ? -7

உனக்குள்ள தனந்தான்மேல்
எனக்கும் உதவலாமே சிங்கி - அடா
ஊரார் தனத்தினுக்கு
ஏன்இத் தனைஆசை சிங்கா ? -8

மறுதுணை யில்லாமல்
தனியே வரலாமோ சிங்கி - பாரில்
பிறைநுத லார்க்குத்தம்
நிறைதானே துணை அன்றோ சிங்கா? 9

இருதன மேலும்
இலுப்பைப்பூ வருவான்ஏன் சிங்கி - அது
சரபோஜி மன்னர்
அருள்முத்து மாலையடா சிங்கா? -10

புதுமதி நெற்றியில்
பூனைக்கண் இருப்பான்ஏன் சிங்கி
மதனவல்லி ஈந்த
வைடூரியச் சுட்டியடா சிங்கா? -11

பாம்புரி தன்னை
இடையில்உடுப்பா ன்ஏன் சிங்கி - அது
பாம்புரியோ மணிப்
பட்டிகை அல்லவோ சிங்கா? -12

அடிமை வேலையிட்டு
ஆள்வதுஎப் போதடி சிங்கித்-மெத்தத்
துடியாதே நான்அதற்குச்
சொன்னேனே அல்லென்று சிங்கா? -13

பந்து பிடிக்கக்கை
பதைக்குது பாரடி சிங்கி - நீ
விந்தையே சுவை என்னின்
மேலாய் இருப்பேன்நான் சிங்கா? -14

காமவே டன்கையில்
காட்டிக் கொடுக்காதே சிங்கி - என்றும்
நாம்இரு வரும்கூடி
நயந்துவாழ் வோமடா சிங்கா? -15

குலவும் சரபோஜி மகராஜர் தமைவாழ்த்திக்
கொண்டுஇங் கிருப்பமடி சிங்கி - இங்கு
நலதிப் படியேநாம் செய்தால் அவர்தயை
நமக்குக் கிடைக்குமடா சிங்கா -16

அவர்சுக மாகஇருக்கப் பிரகதீசர்
அருட்பதம் போற்றுவோம் சிங்கி-இந்த
அவனியில் எவர்களும் சுகமே இருக்கணும்
அவர்பதம் போற்றுவோம் சிங்கா -17

ஆலங்குடி கண்டிக்குடி-ஆலங்குடி கண்டு இக்குடிக்கு; அம்பலம்-தில்லை; வலம்புரிக்களம்-வலஞ்சுழி என்ற ஊர், வலம்புரிச் சங்கு போன்ற கழுத்து என்பது வேறு பொருள்; உரத்து-மார்பிடத்து வலிமையுடைய; வல்லம்-சூதாடு கருவி போன்ற முலை, ஓர் ஊர்; குற்றாலவயின்-குற்றாலத்திடனித்து, குறுகிய ஆல் இலை போன்ற வயிறு; வயின்-வயிறு; மாயூரம்-மயில், ஓர் ஊர்; காஞ்சியிடை-காஞ்சிபுரத்து இடத்து, காஞ்சியை அணிந்த இடை என்பது வேறு பொருள்; நாகை-ஓர் ஊர், பாம்பின் படம் போன்ற அல்குல் என்பது வேறு பொருள்; தனம்-செல்வம்; தனம்-முலை; இருதனம்- இரு முலைகள்; பாம்பு உரி-பாம்புச்சட்டை, ஆடைக்கு உவமை; மணிப்பட்டிகை-அழகிய சீலை; பந்து- பந்து போன்ற முலை.

எந்த நாட்டை விட்டு எங்கு வந்தாய் சிங்கி.

எங்கெங்கு என்னைத் தேடிப் பார்த்தாய் என்று இப்போது என்னிடம் சொல் சிங்கா.

ஆலங்குடி, கண்டு இக்குடியைச் (என் குடியை) சேர்ந்த உன்னை எங்கும் தேடினேன்.

தில்லை அம்பலத்தில் தேட உனக்கு அறிவில்லையா, சிங்கா.

வலம்புரிக் களம் பார்க்க மனத்தில் குறித்துக் கொண்டு தினம் அலைகின்றேன் சிங்கி (வலம்புரிச் சங்கு போன்ற உன் கழுத்தினைப் பார்க்க மனம் அலைந்தது. திருவலஞ்சுழி எனும் ஊரில் தேடினேன்)

அதைத் தவிர வலிமை உடைய வல்லம் நீ தேடவில்லையோ சிங்கா.

அழகு நிறைந்த குற்றாலத்தில் பொருந்தித் தேடினேன் சிங்கி. (அழகிய சிறிய ஆலிலை போன்ற வயிற்றைத் தேடினேன்.)

நிலைபெற்ற இயற்கலைகள் நிறைந்த மாயூரம் தேடவில்லையோ சிங்கா? (நல்ல அழகிய இயல்புடைய மயிலாகிய என்னைத் தேடவில்லையா?)

புகழுடன் விளங்கும் காஞ்சியிடை மிகவும் தேடினேன், சிங்கி, (காஞ்சிப்பட்டாடை அணிந்த உன் இடையைத் தேடினேன், காஞ்சி நகரின் இடையே தேடினேன்,)

நல்ல புகழ் கொண்ட நாகையில் தேடுகிற எண்ணம் உனக்கில்லையா சிங்கா? (உனக்கு இசைகிற அல்குலைத் தேட விரும்பவில்லையா?)

கூடலூருக்கு மேலே உன்னை மிகவும் தேடினேன் சிங்கி. (உன்னோடு கூடி மகிழ்வதற்காக உன் தொடைகளைத் தேடினேன். கூடலூரு - கூடும் தொடைகள், ஒரு ஊர்)

நான் உன் கூடவே இருந்தால் மனத்தில் என்னைக் குறித்து அவையில் தேடமாட்டாய் சிங்கா.

எல்லோரும் தஞ்சையில் உன்னைத் தேடிப்பார் என்று சொன்னார்கள் சிங்கி.

இங்கே குறி சொல்லி தனம் (செல்வம்) தேடிவர வந்தேன் சிங்கா.

உன்னிடம் உள்ள தனத்தை (முலைகளை) எனக்குத் தந்து உதவலாமே சிங்கி.

ஊரார் தனத்தின் மேல் உனக்கு ஏன் இத்தனை ஆசை சிங்கா. (தொடை, மார்பகங்கள் இவற்றின் மேல் உனக்கேன் ஆசை சிங்கா? ஊரார் தனம்-பிறர் செல்வம். ஊரு-தொடை, ஆர் தனம்-நிறைந்த முலை)

துணை இல்லாமல் தனியே வரலாமோ சிங்கி.

உலகில் பிறையனைய நெற்றியுடைய பெண்களுக்கு அவர்கள் கற்பொழுக்கம் தானே துணை சிங்கா.

இருமுலைகளின் மேலும் இலுப்பைப் பூச்சரம் வந்தது எப்படி சிங்கி.

அது சரபோஜி மன்னர் அருளுடன் தந்த முத்துமாலை சிங்கா. (இலுப்பைப் பூ முத்துமாலைக்கு உவமை)

புதுநிலவு போன்ற நெற்றியில் பூனைக்கண் இருக்கிறதே ஏன் சிங்கி? (பூனைக்கண் வைடூரியத்திற்கு உவமை)

பாம்பு உரித்த சட்டையை இடையில் உடுத்தி இருக்கிறாயே ஏன் சிங்கி.

அது பாம்புரி அல்ல. அழகிய பட்டுச்சேலை சிங்கா. பாம்புரி பட்டாடைக்கு உவமை.

எனக்கு அடிமை வேலை செய்யும்படி உனக்கு ஆணையிட்டு உன்னை நான் எப்போது ஆள்வது சிங்கி.

ரொம்பத் துடிக்காதே சிங்கா, நான்தான் அது முடியாதென்று சொன்னேனே.

பந்து போன்ற உன் மார்பைப் பிடிக்க என் கை துடிப்பதைப் பார் சிங்கி.

வியக்கும்படி பேசுவது உனக்குச் சுவையாய் இருக்குமெனில், அப்படிப் பேசுவதில் நான் உனக்கு மேலாய் இருப்பேன், சிங்கா.

(கலவியில் வித்தியாசமாக ஈடுபடுவது உனக்குப் பிடிக்கும் என்றால் நான் மேல் இருப்பேன்.)

காமவேடன் கையில் நான் சிக்கிக்கொள்ளுமாறு என்னைக் காட்டிக் கொடுக்காதே சிங்கி.

நாம் இருவரும் கூடி என்றும் நலமாக வாழ்வோம் சிங்கா.

இங்கே ஆளும் சரபோஜி மன்னரை வாழ்த்திக் கொண்டு இங்கேயே இருப்போம் சிங்கி.

நல்லது அப்படியே செய்தால் அவர் அருள் நமக்குக் கிடைக்கும் சிங்கா.

சரபோஜி மன்னர் நலமாக இருக்கப் பிரகதீசரின் அருள் நிறைந்த பொற்பாதங்களைப் போற்றித் துதிப்போம் சிங்கி.

இவ்வுலகில் உள்ள அனைவருமே நலமாய் இருக்க வேண்டும் என்று அந்தப் பிரகதீசப் பெருமான் பாதங்களைப் போற்றுவோம் சிங்கா.

மங்களம்

சுருட்டி ராகம் - ஆதி தாளம்

பல்லவி

மங்களம் சரபேந்திரர்க்கு
ஜய மங்களம்

சரணங்கள்

புகழ்சோழ தேசருக்குப்
போசலகு லேசருக்குச்
சகலருக்கும் நேசருக்குத்
தஞ்சைநகர் வாசருக்கு -மங்களம்

சித்தபரி சுத்தருக்குத்
தேறுசிவ பத்தருக்குச்
சத்துவகு ணத்தருக்கு
தண்மதிமு கத்தருக்கு -மங்களம்

நிலைமதிவி சாலருக்கு
நீடுறுசெங் கோலருக்கு
தலமதனின் மேலருக்குச்
சரபபூ பாலருக்கு -மங்களம்

மங்களமும், வெற்றியும் உண்டாகட்டும் சரபோஜி மன்னருக்கு.

புகழ்மிக்க சோழநாட்டு மன்னருக்கு, போசல குலத்தைச் சேர்ந்த தலைவருக்கு, அனைவரிடமும் அன்பு நிறைந்தவருக்கு, தஞ்சை நகரினில் வாழ்பவருக்கு மங்களம் உண்டாகட்டும்.

தூய சிந்தனைகளே கொண்டவருக்கு, தெளிந்த சிவ பக்தருக்கு, சாத்வீக குணம் கொண்டவருக்கு, குளிர்ச்சி பொருந்திய நிலவினை ஒத்த முகம் உடையவருக்கு மங்களம் உண்டாகட்டும்.

கலங்காத அகன்ற அறிவு நிறைந்தவருக்கு, நெடிது விளங்கும் செங்கோல் ஆட்சி நடத்துபவருக்கு நிலவுலகில் மேலானவருக்கு, சரபோஜி மன்னருக்கு மங்களம் உண்டாகட்டும்.

நிறைவுற்றது.

பொதுவாகக் குறவஞ்சி நாடகங்களில் கூறப்படும் பொருளடைவு

காப்பு
மங்களம்
கட்டியக்காரன் வருகை
கணபதி எழுந்தருளல் (சிலவற்றில் உண்டு)
தலைவன் பவனி
எச்சரிக்கை (சிலவற்றில் உண்டு)
பவனி கண்டு தலைவி காமுறுதல்
தலைவி வருணனையும் இயல்பும்
தலைவி மன்மதனைப் பழித்தல்
தலைவி நிலவைப் பழித்தல்
தலைவி தென்றலைப் பழித்தல்
தலைவி குயிலைப் பழித்தல் (சிலவற்றில் உண்டு)
பாட்டுடைத் தலைவனை விளித்துத் தலைவி இரங்கல்
பாங்கி வருதல்
தூது போக்கல்
குறத்தி வருகை
குறத்தி இயல்பு
அவள் வரவைப் பாங்கி கூறுதல்
தலைவி குறத்தியை அழைப்பித்தல்
குறத்தி வாசல் வளம் கூறுதல் (சிலவற்றில் இல்லை)
குறத்தியை யார் என வினவுதல்
தேசவளம் கேட்டல்
மலைவளம் கேட்டல்
நதிவளம் கேட்டல்
சாதி வளம் கேட்டல்
ஊர் வளம் கேட்டல்
குறத்தி அவைகளைக் கூறல்
அண்ட கோசங்களின் பகுப்பைக் கூறல் (சிலவற்றில் உண்டு)
குறத்தி தன் மலையின் பெருமை கூறல்
குறத்தி பெற்ற பரிசில்கள் எவையெவை எனக் கூறல்
குறிசொல்லி தலைவனிடம் பெற்ற வரிசை கூறல்
(சிலவற்றில் உண்டு)

தலைவி குறிசொல்ல வேண்டுதல்
குறத்தி தெய்வ பூசைக்கு உரியன வேண்டுதல்
தெய்வங்களை வேண்டிக் குறிசொல்லுதல்
தலைவி விருப்பத்தைக் குறிப்பாகவும், வெளிப்படை-
யாகவும் கூறுதல்.
தலைவன் மணந்து கொள்வான் என்று கூறல்
தூதுபோன பாங்கி மாலை கொண்டு வருதல்
(சிலவற்றில் உண்டு)
சிங்கன் குளுவனோடு வேட்டைக்கு வருதல்
(குளுவன் பெயர்கள் புலியன், சிங்கன், சின்னன், ஞாவன்
என்றும் வழங்கப்படும்)
வலை அமைக்கும் முறை கூறல்
பறவைகளின் வருகையும் ஓட்டமும்
குறத்தியை குறவன் நினைத்தல்
பிரிவு பொறுக்காது வருந்துதல்
குளுவனை, குறத்தி இருக்குமிடம் அறிந்துவர ஏவுதல்
குளுவன், குறத்தியின் அடையாளம் கேட்டல்
குறவன் அடையாளம் கூறல்
தலைவனது நகரில் காணலாம் என்று கூறுதல்
குறவன் குறத்தியைக் காணல்
ஆற்றாமை புலப்படுத்த வினாவுதல்
அவள் கூறும் விடை
தலைவனை வாழ்த்துதல்

இவற்றுள் சில, சில குறவஞ்சிகளில் வேறுபட்டு இருப்பதுண்டு.

இக்குறவஞ்சி நூலில் காணப்படும் தேசங்கள், மலைகள், நதிகள், ஊர்கள், தெய்வங்கள், பறவைகள்.

தேசங்கள்: வங்காளம், துலுக்காணம், மராடம், சீனம், மச்சம், ஈழம், மலையாளம், சாளுவம், அங்கதேசம், அரபி, கவுடம், கலிங்கம், குச்சரம், கொங்கணம், கொங்கு, சிங்களம், சோழதேசம், துளுவம், தெலுங்கம், பாண்டி, மகதம், விதேகம், அளகை, உம்பர்நாடு, மாதவன் பதி, அயன் உலகு, கயிலை, சிவபுரி, தஞ்சை.

மலைகள்: அண்ணாமலை, ஆனைமலை, கயிலை, காளத்தி, குற்றாலம், கொல்லிமலை, திருக்கழுக்குன்றம், சுவாமிமலை, சோலைமலை, வேங்கடமலை, திருச்சிராமலை, தீர்த்தகிரி, நேரிமலை, பழனிமலை, பிரான்மலை, பொதிய மலை, மேருமலை, விராலிமலை, கோவர்த்தனம், மல்லிகார்ச்சுனம்.

நதிகள்: கங்கை, காவிரி, கன்னி, கம்பை, கபிலநதி, கெடிலம், கிருஷ்ணா, கோதாவரி, சங்கநதி, சிவகங்கை, சரஸ்வதி, சேயாறு, சொன்னமுகி, தாமிரபரணி, துங்கபத்திரை, நருமதை, பாலாறு, மணிமுத்தாறு, யமுனை, வைகை.

ஊர்கள்: இராமேசுவரம், காசி, காளத்தி, காஞ்சிபுரம், குடந்தை, கூடலூர், அம்பலம், அருணை, ஆலங்குடி, கொட்டையூர், கோகர்ணம், சிதம்பரம், சீர்காழி, திருக்கடவூர், குற்றாலம், திருவரங்கம், திருவதிகை, திருவாரூர், திருவாவடுதுறை, திருஆனைக்கா, திருவிடைமருதூர், திருவையாறு, நாகை, மதுரை, மாயூரம், மல்லிகார்ச்சுனம், திருவெண்காடு, வலம்புரிக்களம், வல்லம், தஞ்சை.

தெய்வங்கள்: கணபதி, முருகன், காமாட்சி, அட்ட லட்சுமிகள், ஆனந்தவள்ளி, சந்திரமௌலீசர், சப்தகன்னியர், இரட்டைப் பிள்ளையார், எக்காலதேவி, திருமகள், திருமால், தஞ்சேசர், பெரியநாயகி, பிரகதீசர், வெள்ளைப்பிள்ளையார், வள்ளி, வாணி, விசுவநாதர், காளி.

பறவைகள்: தீபக்குருவி, கம்புள், பச்சைப்புறா, குயில், கவுதாரி, மாடப்புறா, காடை, கொக்கு, நாரை, சக்கரவாகப் பறவை, அன்னம், கிளி.